
KALKI 15.8.93 ரூ. 3.00

கல்கி



தி.மு.க.வில் பிளவா?
- கலைஞர் பேட்டி





ஆடை ஏற்றுமதி:
பெண்களால்தான் வெற்றி!



ஒரு சூட்கேஸ் கொள்ளாத சிரிப்பு!


கருத்து: ஜூலி
படம்: அரி













ஆபத்தான பாதையில் த்ரில்லிங் அனுபவம்!




எண்ணூறு மீட்டர் நீளமே கொண்ட ரேஸ் பாதைதான் என்றாலும், அதில் வளைவு... வளைவு... மேலும் வளைவுகள். ரேஸ் பாதையில் மேடுபள்ளம் எதுவுமில்லை. கரடுமுரடான மண் தரை! இதை dirt track racing என்கிறார்கள். உபயம் : தமிழ்நாடு மோட்டார் சைக்கிள் ஸ்போர்ட்ஸ் சங்கம். இடம் : இந்தியன் ஏர்லைன்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்டேடியம், மீனம்பாக்கம்.

''சாதாரணமாய் ரேஸ் பாதையில் வளைவுகள் இருக்கும் என்றாலும், பாதை சீராய் இருக்கும். இந்த ரேஸில் மண் பாதைதான் என்பதால் ரொம்ப சிரமம்'' என்றார் ஒரு மோட்டார் சைக்கிள் வீரர்.

அந்த வீரர் சொன்னது உண்மைதான் என்பதை ஒவ்வொரு வளைவிலும், மண்ணில் சக்கரம் சிக்கி, பந்தயக்காரர்கள் இடறிய போதும், சிலர் வழுக்கி விழுந்த போதும் உணர முடிந்தது.

மொபெட்கள், ஸ்கூட்டர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு மோட்டார் சைக்கிள்கள் என்று பலதரப்பட்ட வாகனங்களுக்குப் போட்டிகள் நடந்தன. வண்டிகளின் விசைக்கேற்ப ரேஸ் பாதையை இரண்டு முறை, ஐந்து முறை,



ஏழு முறை சுற்றி வந்தார்கள் ரேஸில் பங்கேற்றவர்கள். அயல்நாட்டு மோட்டார் சைக்கிளானால் போட்டியில் ரேஸ் பாதையை எட்டு முறை சுற்றி வர வேண்டும்!

ஸ்டேடியத்தில் கூடியிருந்த பார்வையாளர்கள் மிகவும் குறைவுதான். ஆனால் வந்திருந்தவர்களுக்கு இந்த ரேஸ் ஒரு திரில்லிங் அனுபவம். ஸ்டார் மோட்டார் சைக்கிள் வீரர் விவேக்தான். 22 வயதான அந்த மெக்கானிகல் இஞ்சினியர் மொத்தம் ஆறு பந்தயங்களில் வெற்றிவாகை சூடினார்!



ஸ்கூட்டர்களுக்கான போட்டியில் பங்கேற்றவர்களில் ஒருவர் மட்டும் பெண். பெயர் ஹேமலதா. புறப்பட்ட முதல் சுற்றின் முதல் வளைவிலேயே ஸ்கூட்டர் கீழே சாய்ந்தது. விழுந்த வண்டியைக் கஷ்டப்பட்டுத் தூக்கி நிறுத்தி, மறுபடி புறப்பட்டார். மீண்டும் சில முறை விழுந்து எழுந்தார்.





ஹேமலதாவின் பங்கேற்பைப் பாராட்டி, மெடல் அளித்து உற்சாகப் படுத்தினார்கள் ரேஸ"க்கு ஏற்பாடு செய்தவர்கள். ''பத்து வருடங்களாக நான் டூ-வீலர் ஓட்டிக் கொண்டிருக் கிறேன். நான் பணிபுரியும் சன்மாக் நிறுவனத்தின் ஜெனரல் மேனேஜர் ராமசந்திரன் அளித்த உற்சாகம்தான் போட்டியில் என்னைப் பங்கேற்கத் தூண்டியது. பந்தயத்துக்கு முந்தைய நாள் ஸ்டேடியத்துக்கு வந்து பார்த்த போது,

''மண்தரையில் ஓட்டுவது ஒன்றும் அத்தனை கஷ்டமாய் இருக்காது'' என்று நினைத்தேன். ஆனால் இன்று அது தவறு என்று உணர்ந்தேன். நான் ரேஸில் பங்கேற்கும் விஷயம் என் அப்பாவுக்குத் தெரியாது. சொன்னால், எங்கே வேண்டாம் என்று சொல்லி விடுவாரோ என்று பயம்தான்'' என்ற ஹேமலதா விடம், ''பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்'' சொல்லி விட்டுப் புறப்பட்டோம்.

– மௌனஷ்மி

படங்கள் : யோகா

ஆடை ஏற்றுமதி:

சாயம் போனாலும் நேர்த்தியாக, மடிப்பு மாறாமல் உடுத்திய நைலெக்ஸ் சேலை; அவ்வளவாக 'மேட்ச்' ஆகாத ரவிக்கை, முகத்தில் பூசு மஞ்சளுடன் போட்டி போடும் பாண்ட்ஸ்; தோளில் ரெக்ஸின் பை; காலில் 'இதோ பிய்ந்து விடுவேன்' என்று பயமுறுத்தும் பிளாஸ்டிக் செருப்பு; ரப்பர் வளை, கவரிங் கம்மல், பிளாஸ்டிக் முத்து மாலை எனப் 'பொன் வைக்கும் இடத்தில்' சக்திக்குட்பட்ட சாதாரணங்கள்; தலையில் அரை முழம் புதுப் பூ; காலில், அடம்பிடித்து வாங்கி அணிந்து கொண்ட வெள்ளிக் கொலுசு -

இந்த அலங்காரத்துடன் ஒரு நாளைப் போல் காலை எட்டு மணியளவில் 'எக்ஸ்போர்ட் கம்பெனி'களை நோக்கிச் சாரி சாரியாக நடக்கும் ஆயிரக்கணக்கான பெண்கள்தான் இன்று நம் நாட்டின் ஆடை ஏற்றுமதித் தொழிலை வெற்றி பெறச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிரிப்பும், கும்மாளமுமாய் வரும் இவர்கள், 'கிர்'ரிடும் தையல் மிஷின்களின் முன் அமர்ந்து விட்டால் குனிந்த தலை நிமிராமல் வேலை செய்பவர்கள். 'டீ' நேரத்திலும் உணவு இடைவேளையிலும் தொழிற்சாலை வளாகத்திலிருந்து வெளியேறாமல், மணி அடித்த உடன் இருக்கைக்கு வந்து மீண்டும் வேலையைத் தொடங்குவார்கள். இவர்கள் 'சம்பளம் பத்தாது' என்று முரண்டு பண்ணுவதில்லை; தண்ணி போட்டு விட்டு வேலைக்கு வருவதில்லை; சூப்பர்வைசர்களிடம் எதிர்த்துப் பேசி வம்பு வளர்ப்பதில்லை...

* ''இதுல பெரிசா பெருமைப்பட என்ன இருக்கு?''




* பட்டன் ஹோல் குறிப்பது ஆரம்ப வேலை



''ஏற்றுமதி ஆடைகளின் தரத்தைக் காப்பாற்றி வருபவர்களே பெண் ஊழியர்கள்தான்'' என்கிறார் 'அப்போலோ' ஏற்றுமதி நிறுவனத்தைச் சேர்ந்த திருஞானம்.

''இந்தத் தொழிலில் ஆர்டர்களை உரிய காலத்தில் கொடுப்பது என்பதுதான் மிக முக்கியம். பெண் ஊழியர்கள் பெரும்

பெண்களால்தான்



● தொழிலகம்

பான்மையினராக இருப்பதால்தான் காலந் தவறாமையை நாங்கள் கடைப்பிடிக்க முடிகிறது...'' என்கிறார் ஏஸ் கார்மென்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் அதிபர் யோகராஜன்.

பெண் ஊழியர்கள் இந்த ஆலைகளில் மாதச் சம்பளத்துக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் காலர், பாக்கெட், கஃப், யோக் என ஆடைகளின் ஏதாவதொரு பகுதியை மட்டுமே தைக்கிறார்கள். தனித்தனியே தைத்து வரும் பாகங்கள் இறுதியில் இணைக்கப்படுகின்றன.

ஆண்களோ ஆடைகளை முழுமையாகத் தைக்கிறார்கள். தைக்கப்படும் ஆடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பீஸ் ரேட்டில் தினக் கூலி அல்லது வாரக் கூலி பெறுகிறார்கள். எனவே இன்றைக்கு முப்பது ரூபாய் அல்லது எண்பது ரூபாய் சம்பாதித்தால் போதும் என முன்னரே தீர்மானித்துக் கொண்டு வரும் இவர்கள், அந்த அளவுக்கான சட்டைகளை மட்டும் தைத்து விட்டுக் கிளம்பிப் போய் விடுவதுண்டு. அயல் நாட்டவருடன் காலக் கெடுவை நிர்ணயித்துக் கொண்டுள்ள ஏற்றுமதியாளருக்கு அன்றைய உற்பத்தி இலக்கில் பத்து ஆடைகள் 'துண்டு' விழுந்தால் விழுந்ததுதான்! பெண்கள் ஒருபோதும் இப்படி பாதியில் வேலையை விட்டு விட்டுப் போக மாட்டார்கள். கூடுதல் சம்பளம் கிடைக்கும் என்ற ஆசையில் சில பெண்கள் வேறு கம்பெனிகளுக்குப் போவது சகஜம் தான். எனினும் இதனால் ஏற்படும் விளைவுகளும் பாதிப்பும் ஒப்பு நோக்க மிகக் குறைவுதான். மேலும், பெண்களுக்குப் பழகிய இடம், வீட்டின் அருகாமை, உடன் பணியாற்றும் தோழிகள் போன்ற பல விஷயங்கள் பொருட்டாகத் தெரிவதால் அவர்கள் அதிக சம்பளத்துக்காகப் பழைய வேலையைச் சட்டென்று உதறி விடுவதில்லை.



● ஆண்களுக்கும் இடமுண்டு

வெற்றி!



● திருஞானம்

குறைந்தபட்சம் நூறு தையல் இயந்திரங்கள், நூற்றைம்பது ஊழியர்களைக் கொண்ட manufacturer exporter (தாமே உற்பத்தி செய்து ஏற்றுமதியும் செய்பவர்)

என்ற பிரிவினர் தங்கள் ஊழியர்களுக்கு ஈ.எஸ்.ஐ., பி.எஃப். ஆகியவற்றைக் கட்டாயம் செய்து தர வேண்டும் என்று அரசாங்கம் விதித்துள்ளது. இந்த ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளமும் (சென்னை மாநகரில் சுமார் ரூபாய் எழுநூறு, புறநகர்ப் பகுதிகளில் சுமார் ரூ 550) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்களின் கண்காணிப்புக்கு இந்தத் தொழிலகங்கள் உட்பட்டவை.

''விதிகள் இருந்தும் அவற்றைப் பலர் கடைப்பிடிப்பதில்லை'' என்கிறார் தியாகராஜன்.

ஒருசில தொழிலகங்களில் வெறும் இருநூற்றைம்பது ரூபாய் மாதச் சம்பளத்துக்கு, வாரம் ஆறு நாட்களும் எட்டு மணி நேரம் உழைக்கும் பெண்களை நாம் பார்க்க முடிந்தது. அதிலும் ஒரே வேலையைச் செய்யும் இரண்டு பெண்களுள் ஒருத்திக்கு 230 ரூபாய்தான் சம்பளம்!

''இந்த ஓர வஞ்சனை உங்களைப் பாதிக்கவில்லையா...?'' என்று கேட்டால் அந்தப் பெண்கள் வெள்ளையாகச் சிரிக்கிறார்கள்.

''ஆண்கள் மட்டும் அதிகச் சம்பளம் வாங்குகிறார்களே, அதே வேலைக்கு... உங்களுக்குத் தப்பாகத் தோன்றவில்லையா இது...?'' - நாகவல்லியிடம் கேட்ட போது சந்தோஷமாக மறுத்தார்.

''அவங்க வேகமாச் செய்யறாங்க...''

''நீங்க வேலை செய்து சம்பாதிக்க முடிவது பெருமையாய் இருக்கிறதா...? சாதனை உணர்வு...''

''இதுல பெருமைப்படறதுக்கு என்ன இருக்கு...?'' என்கிறார் நாகவல்லி.

''**பி**ரச்னையே அதுதான்!'' என்கிறார் தியாகராஜன். இந்தப் பெண்களிடம் தங்கள் உழைப்பு குறித்தோ தங்கள் திறமை குறித்தோ எந்தவிதமான உணர்ச்சியும் இல்லை. சாதனை உணர்வுதானே மிகப் பெரிய உந்துதல்? அதுதானே மேலும் மேலும் சிறப்பாகச் செயல்படத் தூண்டும். அத்தகைய உணர்வு கொண்ட பெண்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்படிப் பாதிக்கப்பட்ட ஓரிருவர் என்னிடம் வந்து 'ஆண்களுக்கு நிகரான சம்பளம் எங்களுக்கும் தர வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அது சாத்தியமில்லை. காரணம், ஓர் அவசரத்துக்குப் பெண்களை 'நைட் ஷிஃப்ட்' பார்க்கச் சொல்ல முடியாது; முன்னறிவிப்பின்றித் தாமதமாக வீட்டுக்கு அனுப்ப முடியாது. இதைச் சுட்டிக் காட்டிய போது அந்தப் பெண்கள் ஏற்றுக் கொண்டார்கள்.''

பெரும்பாலான பெண்களின் ஊக்க

பின்மைக்குக் காரணம் அவர்களுடைய பொருளாதாரப் பின்னணிதான் என்பது தியாகராஜனின் கருத்து.

''காலையில் நாலு மணிக்கு எழுந்து தண்ணீர் கொண்டு வருவதில் அவர்களுடைய வேலை ஆரம்பிக்கிறது; வீட்டு வேலைகளைச் செய்து முடித்து, நீண்ட பயணத்தின் முடிவில் அவர்கள் வந்து சேர்வதற்குள்ளேயே சோர்ந்து போகிறார்கள். மதிய உணவு என்று அவர்கள் சாப்பிடுவது ஒரு சின்ன டப்பாவில் அடைத்த அரை வயிற்றுக்கான சோறு. தொழிற்சாலை வேலை முடிந்து திரும்பவும் வீட்டு வேலை; இரவு நேரங் கழித்துத் தூக்கம்; இவர்கள் சம்பாதிப்பதைப் பிடுங்கிக் கொண்டு சாராயத்துக்குச் செலவழிக்கும் வீட்டு ஆண்கள்... இதனாலெல்லாம் இவர்கள் உடலோடு மனமும் சோர்ந்து கிடக்கிறது. இந்த நிலையில் இவர்களுடைய வேலைத் திறன் ஐம்பது சதவிகிதம் குறைந்து போகிறது...''

மேலைநாடுகளில் பெண் ஊழியர்களால் கிடைக்கும் உற்பத்தியில் பாதி அளவுதான் நம் நாட்டில் கிடைக்கிறது என்கிறார் தியாகராஜன். மேலைநாடுகளின் சட்ட திட்டங்களை அப்படியே இங்கும் புகுத்த முற்படும் அரசாங்கம் இந்த முக்கியமான விஷயத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்ற ஆதங்கமும் இவருக்கு இருக்கிறது.

''எங்கள் கம்பெனியில் பெண்களுக்கு டீ கொடுக்கிறோம்; வெயில் காலத்தில் மோர் கொடுக்கிறோம்; போனஸ் கொடுக்கிறோம்... ஏன்...? சில சமயங்களில் தொழிற்சாலையில் அரும்பும் காதல், கல்யாணத்தில் முடிவதற்கும் உதவியாக இருக்கிறோம்!...'' என்கிறார் திருஞானம்.

''எங்கள் தொழிற்சாலையில் பெண்களுக்கு ஊக்கத் தொகை உண்டு. அதனால் ரொம்ப உற்சாகமாக வேலை செய்வார்கள். அவர்கள் பதவி உயர்வு பெற்று நிர்வாகப் பொறுப்புக்கு வருவதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது'' என்கிறார் *லலிதா.

''எந்தவிதமான ஊக்கத் தொகையும் அவர்களைக் கட்டிப் போடுவதாகத் தெரியவில்லை. மூன்று வருடங்கள் தொடர்ந்து வேலை செய்யாவிட்டால் பி.எஃப் கிடைக்காது என்று தெரிந்தாலும் இப் பெண்கள் வேலையை விட்டு விடுகிறார்கள் - பக்கத்து நிறுவனத்தில் பத்து ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது என்று! அந்த நிறுவனங்கள் 'busy season' வரை இவர்களைப் பணியில் வைத்துக் கொண்டு கழற்றி விட்டு விடுகின்றன. கூட்டிக் கழித்துப் பார்த்தால் இவர்களுக்கு நஷ்டம்தான். இதை எவ்வளவு பொறுமையாக எடுத்துச் சொன்னாலும் அவர்களுக்குப் புரிவதில்லை. காரணம் - படிப்பறிவு குறைவு; குடும்ப வருமானத்தைக் கூடுதலாக்கத்தான் இவர்கள் வேலைக்கு வருகிறார்கள் - ஆண்களைப் போல் முழு குடும்பச் செலவும் இவர்கள் பொறுப்பு இல்லை. அதனால் நிலையான அனுகூலங்கள் பற்றி யோசிக்காமல் தற்காலிக லாபங்களை மாத்திரமே எடை போடுகிறார்கள்'' - இது தியாகராஜன்.

முழுக்க முழுக்க இந்தப் பெண்களின் வருமானத்தையே நம்பியிருக்கும் குடும்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ''என் சம்பளம், (450 ரூபாய்) என் மகள் வீட்டு வேலை செய்து சம்பாதிக்கிற 250 ரூபாய் - இதுலதான் எங்க குடும்பம் நடக்குது'' என்று சொல்லும் கனகாவுக்கு இரண்டு குழந்தைகள் - கணவன் கைவிட்டு விட்டான்! ''மாதம் 900 ரூபாய் செலவாகிறது, சம்பளம் பத்தலை...'' என்று தயங்கித் தயங்கிச் சொல்பவரிடம், ''சம்பள உயர்வு கேட்டுப் பார்க்கலாமே...?'' என்றால்... ''பயமாயிருக்கு. அப்படியும் போய்ச் சில சமயம் கேட்போம். நாலு வருஷமாகப் போகுது வேலையில சேர்ந்து. அதனால இந்த மாசம் கேட்காமலேயே போட்டுத் தருவாங்கன்னு நினைக்கிறேன்...'' என்கிறார் கனகா.

''குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காக நல்ல வேலையை விட்டேன். அதே வேலையிலிருந்திருந்தால் இப்போது 1500 ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆனால் வீட்டுக்கு அருகே உள்ளது என்பதால் 450 ரூபாய் சம்பளத்துக்கு இந்த வேலையில்

> **கும்பகோணம் வாசகர்களே, நினைவூட்டுகிறோம்!**
>
> **கல்கி கும்பகோணம் சிறப்பிதழ் உங்கள் தயாரிப்பாக உருவாக உங்கள் ஊர் தொடர்பான கதை, கட்டுரை, பேட்டி, துணுக்கு, செய்திகளை அனுப்பி வைக்க வேண்டிய கடைசி தேதி : 20.8.93.**
>
> **கும்பகோணம் சிறப்பிதழைக் கலகலப்பாக்குவது உங்கள் கையில்தான் இருக்கிறது!**
>
> **- ஆசிரியர்.**

---

* பாதுகாப்புக் கருதி பெண்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

இருக்கிறேன்...'' என்று சொல்லும் போது அமீனாவின் பாச உணர்வு பளிச்சிடுகிறது.

பத்தாவது கூட பாஸ் பண்ணாத, பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய, பெண்கள்தான் இத் தொழிலுக்கு அதிகம் வருகிறார்கள் - பத்து பாத்திரம் தேய்ப்பதை விட இந்த வேலை மேல் என்ற நோக்கத்தில். கிடைக்கும் சம்பளத்தில் திருப்தி அடைவதோடு, வீட்டை விட்டு வெளியேற, நாலு பேரை சந்திக்க, சமமாகப் பழக ஒரு வாய்ப்பாக இந்த வேலையைக் கருதுகிறார்கள். பலருக்குத் தொழிற்சாலைச் சூழல் வீட்டுச் சூழலைக் காட்டிலும் வசதியானதாக இருக்கிறது. குறிப்பாக - கழிப்பறை வசதிகளை இவர்கள் நிம்மதிப் பெருமூச்சுடன் வரவேற்கிறார்கள். ஆனால் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு ரூபாய் கூட இவர்கள் தங்களுக்கென்று தாங்களே செலவழித்துக் கொள்வதில்லை. தலைப் பூவிலிருந்து புடைவை வரை அம்மா (பெரும்பாலும் திருமணமாகாத பெண்கள்) வாங்கித் தருவதுதான்!

தப்பித் தவறி இத் துறையில் ஊழியர்களாக நுழையும் ஓரளவு படித்த பெண்களால் இச் சூழலில் வேலை செய்ய முடிவதில்லை.

''சூபர்வைசரைக் காக்காய்ப் பிடிக்கணும்; செக்கர்களின் அதிகார, ஆணவப் போக்குகளைப் பொறுத்துக் கொள்ளணும், இவர்கள் நினைத்தால் ஓ.டி. செய்யணும், குடுக்கற சம்பளத்தை - நியாயமோ, அநியாயமோ - வாங்கிக்கணும். சுய கௌரவம் பார்த்தால் முடியவே முடியாது... இந்த வேலையைப் பத்து வருஷம் போராடிச் செய்துட்டு விட்டு விட்டேன்...'' என்கிறார் சுபத்ரா.

தியாகராஜன் சொல்கிறார் :

''ரொம்பப் படித்து விட்டால் 'ஃபாக்டரி வேலை வேண்டாம். நிர்வாக வேலை கொடுங்கள்' என்கிறார்கள். சிலர் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாஷன் டெக்னாலஜியில் - (டெல்லி) படித்து விட்டு நடைமுறை அறிவே இல்லாமல் வருகிறார்கள்... ஆயிரக்கணக்கில் சம்பளம் எதிர்பார்க்கிறார்கள்.

''இத் துறை ஊழியர்கள் யூனியன் அமைக்கும் முயற்சியை மேற்கொண்டு பார்த்தார்கள். ஆனால் அது வெற்றி பெறவில்லை. காலக்கெடுவுக்கு உட்பட்டுத் தொழிலகங்கள் செயல்படாவிட்டால் அவற்றை இழுத்து மூட வேண்டியதுதான்! இது ஊழியர்களையும் பாதிக்கும் என்பதால் யூனியன் முயற்சிகள் கைவிடப்பட்டு விட்டன.

''சுமார் 1750 கோடி மதிப்புக்கு ஆடைகள் ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமே ஏற்றுமதியாகின்றன. இதைக் கருத்தில் கொண்டு இந்தத் துறை ஊழியர்களுக்கு - குறிப்பாக இதன் முதுகெலும்பாக உள்ள பெண்களுக்கு - அமைப்பு ரீதியான பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

''பெண்கள் தங்கள் உழைப்பிலும் ஊதியத்திலும் பெருமை கொள்ள ஆரம்பித்தால் தான் இந்தத் தொழில் துறை மேம்படும். பத்தாவது பாஸ் செய்த பெண்களுக்கு இந்தத் துறைக்கெனச் சிறப்புப் பயிற்சி அளிக்கலாம். ஏற்றுமதியாளர்கள் சங்கம் இதற்கென நிதி உதவத் தயாராக இருக்கிறது. ஆனால் அரசாங்கமும் சரி, மகளிர் அமைப்புகளும் சரி, பெண்களுக்கு இந்தத் துறையில் இருக்கும் சிறப்பான எதிர்காலத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் எங்களிடம் வந்து எங்கள் தேவைகள் என்ன என்பதை உணர்ந்து, அதற்கேற்ப இப் பெண்கள் பயிற்சி பெறுவதற்குரிய பயிற்சி நிலையங்களை அமைத்தால், சென்னை நகரம் மட்டுமின்றி, தமிழகமெங்கும் உள்ள ஆடை ஏற்றுமதி நிறுவனங்களுக்கு மிகச் சிறந்த ஊழியர்கள் கிடைப்பார்கள். ஏற்றுமதித் தொழில் மேலும் வளரும். அந்நியச் செலாவணி பெருகும். தமிழ்நாட்டின் பல்லாயிரம் ஏழை எளிய பெண்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமையும்.''

– சீதா ரவி


அட்டை வண்ணப்படம், படங்கள் :

கோபிநாத்

அடுத்த இதழில் :



- தமிழக ஆளுனர் சென்னா ரெட்டியின் சிறப்புப் பேட்டி
- 'யமனுக்கு ஏழு பிள்ளை குடுத்தாலும் உயிரோடு ஒரு பிள்ளை தரமாட்டோம்' - தொட்டில் திட்டத்தின் தோல்வி



மூன்று வேடங்களில் முகமது ஷெரீப்

அப்பா 24 பசு மாடுகள் வாங்கி அவற்றை ஜலந்தருக்கு அனுப்பி யிருக்கிறார். அக்கா குழந் தைகள் பரீட்சை யில் 320 மார்க்கு கள் வாங்கி இருக்கிறார்கள். விடுமுறைக்கு அவர்கள் காஷ்மீர் வருகிறார்கள்.

அப்பா வாங்கின பசுமாடு! பாகிஸ்தானுக்கு ராணுவ ரகசியம்!

- இது குடும்ப விஷயங்களைப் பற்றிய கடிதம் அல்ல. இந்தி யாவிலிருந்து, பாகிஸ் தானிய ஒற்றன் முகமது ஷரீப், பாகிஸ்தானிய உளவுப் படையின் தலை மையகத்துக்கு அனுப்பிய இந்திய ராணுவத்தின் நடமாட்டம் பற்றிய விவ ரங்கள். அப்பா, அக்கா இவை இந்திய ராணு வத்தைக் குறிக்கும். அதி லுள்ள எண்கள், இந்திய ராணுவத்தின் படைப் பிரிவுகளை உணர்த்தும். ஜலந்தர், காஷ்மீர் இவை ராணுவம் அனுப்பி வைக்கப்படும் இடங்கள்.

முகமது ஷரீஃபுக்கும், இந்தியாவிலுள்ள பல் வேறு தீவிரவாத கும்பல் களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; மாறு வேட மன்னன்; கடத்தல் புலி; தொலைத் தொடர்பு சாதனங்களைக் கையாளு வதில் வல்லவன். இவன் ஒரு எம்.பி.ஏ. பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

முகமது ஷரீஃபுக்கும், இந்தியாவிலுள்ள பல்வேறு தீவிரவாத கும்பல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; மாறுவேட மன்னன்; கடத்தல் புலி; தொலைத் தொடர்பு சாதனங்களைக் கையாளுவதில் வல்லவன். இவன் ஒரு எம்.பி.ஏ. பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

மூன்று வருடங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்த ஷரீஃபுக்கு அணுசக்தி, ஏவுகணைகள், இந்திய ராணுவம் ஆகியன பற்றி ரகசியங்களை உளவு பார்த்து பாகிஸ்தானுக்குத் தெரிவிப்பது, இந்தியாவில் செயல்பட்டு வரும் தீவிரவாத அமைப்புகளுக்கு உதவுவது, இவை முக்கிய பணிகள்.

தவிர, நேபாளத்துக்குச் சென்று, சில நேபாளிகளுக்கு உளவு பார்க்கிற பயிற்சியளித்து, இந்தியாவுக்குள் அழைத்து வந்து, அவர்கள் மூலமாகவும் பல ரகசியங்களைத் தெரிந்து கொண்டு, பாகிஸ்தானுக்குத் தகவல் அனுப்பியிருக் கிறான்.

பாகிஸ்தானிய உளவுப் படையின் சங்கேத பாஷையில் புராஜக்ட் கே-2 என்றால் காஷ்மீர், காலிஸ்தான். காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிப் பது, காலிஸ்தான் அமைப்பது இவையே அவர்களது லட்சியம்.

நவாஸ் ஷரீப், பேனசிர்புட்டோ இருவரது ஆட்சியின் போதுமே முகமது ஷரீஃப் தீவிரமாய் இங்கு ஒற்று வேலை பார்த்திருக்கிறான்.


ஈரான், லாகூர் ஆகிய இடங்களில் உள்ள போதைப் பொருள் கடத்தல் காரர்கள், ஆயுத விற்பனை யாளர்கள் என்று பலதரப்பினருடன், ஷரீஃபுக்கு நெருக்கம் அதிகம். அழகான பர்சனாலிடி கொண்ட இவன், எவருடனும் எளிதில் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு விடுவான். தன் வசீகரத் தோற்றத்தால், பெண்களையும் கவர்ந்து, அதன் மூலம் ரகசியங் களைத் தெரிந்து கொண்டிருக் கிறான்.


ஷரீஃபின் ஞாபகசக்தி அபார மானது. ஒருமுறை அவந்திபூர் என்ற இடத்தில் உள்ள விமான தளத்தி னுள், வெகு சாதாரணமான முறை யில் நுழைந்து, ஒவ்வொன்றையும் நுணுக்கமாய்ப் பார்த்துக் கொண்டு, வெளியில் வந்தவுடன், தான் பார்த் தவை அனைத்தையும் ஞாபகத்தி லிருந்தே சித்திரங்களாய்த் தீட்டி, பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்திருக்கிறான்!

இந்திய ராணுவம், ஆயுதங்கள், ரேடார்கள், ஏவுகணைகள் என்று ஒவ்வொன்றுக்கும் ஷரீஃப் பயன்படுத்திய சங்கேத வார்த்தைகளின் பட்டியலையும், அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். கண்ணுக்குத் தெரியாத மாஜிக் இங்க் மூலம் செய்திகளை எழுதி, பாகிஸ்தானுக்கு அனுப்பியிருக்கிறான் இந்த ஒற்றன்.

கடந்த ஜூன் பதினாறாம் தேதி, டெல்லி ரயில்வே ஸ்டேஷனில், முகமது ஷரீஃப் பிடிபட்டான். சுதந்திரத்துக்குப் பின், இந்தியாவில் இத்தகைய 'டாப் சீக்ரட்' ஒற்றன் பிடிபடுவது இதுவே முதல் தடவை; இந்தக் கைது, இந்திய அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக வருணிக்கப்படுகிறது.

தகவல் : **எஸ். சந்திரமௌலி**





* திருமுக்குளம்



* கோவில் கோபுரம்

தமிழக அரசின் சின்னம் தகர்ந்துவிடாதிருக்க...

ஸ்ரீவில்லிபுத்தூர் என்றாலே நினைவுக்கு வருவது ஆண்டாள் கோவிலும், அருகவை பால்கோவாவும்தான். (சிலருக்கு, ''அதிரடி'' தாமரைக் கனி எம்.எல்.ஏ. நினைவுக்கு வரலாம்...!)

அருள்மிகு ஆண்டாள் நாச்சியார் கோவிலின் ராஜகோபுரம் சிதிலமடையத் தொடங்கி பொலிவு குன்றிப் போக.... ''புனரமைப்புத் திருப்பணி இதோ இப்போது நடக்கும்... நாளை நடந்துவிடும்...'' என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து நம்பிக்கை போயிருந்த சமயத்தில் நல்ல வேளையாகத் திருப்பணி ஆரம்பமாகி, தற்சமயம் ரூ 98 லட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. செலவுகளைத் தமிழக அரசே ஏற்றிருக்கிறது. திருப்பணியை, தமிழக அரசு கட்டுமானக் கழகம் செய்து வருகிறது. டெண்டர்கள் ஏதும் விடப்படவில்லை என்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

அது மட்டுமல்ல.... இந்தக் கோவிலின் திருப்பணியுடன், ஜெயலலிதா பெயர் சேர்த்து ''தாம் தூம் தையாவரம்'' என்று தமிழக அரசின் முழுப் பக்க விளம்பரங்கள் இது வரை வராததும் ஆச்சரியமான விஷயம். (இனி வந்தாலும் வருமோ?)

ராஜகோபுரத்தைச் செப்பனிட்டு அழகுபடுத்தவும், ராஜகோபுரத்தைத் தாங்கி நிற்கும் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவும் தலா ரூ 49 லட்சம் செலவு ஆகுமாம்.

பத்தாண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த திருப்பணி, இப்போது துரித கதியில் ஏன் நடக்கிறது?

அதற்கு அழுத்தமான காரணம் இருக்கிறது.

தமிழக அரசின் ''வாய்மையே வெல்லும்'' சின்னத்தில் இருக்கும் கோபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் ராஜ கோபுரம்தான்.

தமிழகத்திலேயே மிகப் பெரிய கோபுரமான இந்த ராஜகோபுரம் 196 அடி உயரமும், 11 அடுக்குகளையும் கொண்டது.

தமிழ்நாடு அரசின் சின்னம், கன கம்பீரமாக இருக்க வேண்டும் என்று அன்றைய சென்னை மாகாணத்தின் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், ஆண்டாள் கோபுரத்தைச் சின்னத்தில் பொறிக்கச் செய்தாராம்!

கி.பி. 1536ல் ஆண்டாள் கோவில் கோபுரம் கட்டப்பட்டது என்று கூறப்பட்டாலும், மன்னர்களின் பெயர் போன்ற சரித்திர விவரங்கள் கிடைக்கவில்லை. ராஜகோபு

ரம் செங்கல், சுண்ணாம்பு கூட்டுக் கலவை யால் கட்டப்பட்டது. ஆண்டுகள் பல ஓட.... கோபுரத்தில் ஆங்காங்கே செங்கல் கழன்று, அமைப்பு சீர்குலைய...அஸ்திவாரமோ ராஜகோபுரத்தைத் தாங்கும் சக்தியைச் சிறிது சிறிதாக இழக்க ஆரம்பித்தது.

காலம் தாழ்த்தியேனும் தமிழக அரசு தனது தார்மீகக் கடமையை உணர்ந்து, திருப் பணியை ஆரம்பித்து விட்டிருக்கிறது.

பாடல் பெற்ற 108 வைஷ்ணவ திருத்தலங்களில் ஒன்றான ஆண்டாள் கோவிலில் முன்பு யானை இருந்தது. தற்சமயம் இல்லை. கோவிலுக்கு அழகு யானை.

ஏகாதசி அன்று ஸ்ரீரெங்கமன்னார் எழுந்தருளும் ஏகாதசி மண்டபம் எனப் படும் கண்ணாடி மாளிகையை ரூ 2 லட்சம் செலவில் கட்டிக் கொடுத்தவர்கள், கோவை ஸ்ரீ விஜயலட்சுமி மில்ஸ் நிறுவ னத்தார்.

அதுபோலவே, யானை ஒன்றை ஆண்டாள் கோவிலுக்கு அன்பளிப்பு செய்ய வும், யானையைப் பராமரிக்க ஆகும் செலவுக்கு ஒரு வைப்புத் தொகையை வழங்கவும் யார் முன்வரப் போகிறார் களோ?

ஆண்டாள் கோவிலின் விசேஷம். பெரிய பெருமாள், பெரிய ஆழ்வார், பெரிய கோபுரம், பெரிய தேர்.

இந்த வரிசை யில் அடுத்ததாகச் சேர்வது, பெரிய தெப்பக்குளம்.

மாசிமக தெப்ப உற்சவம் நடக்கும் 'திருமுக்குளம்' எனப்படும் தெப்பக் குளம் தமிழகத்தி லேயே பெரியது. இப்போதைய தெப் பக்குளத்தின் நிலை பரிதாபகரமானது. பெரும்பாலான இடங்களில் படிக்கட் டுகள் கழன்று மோச மான நிலையில் உள் ளன. பல படித்துறை களில் புதர்க்காடுகள். பற்றாத குறைக்கு கழிப்பிடமாக உப யோகிக்கும் சிலர்... இந்தத் தெப்பக் குளத்தைச் சீர்படுத்த ரூ 2.2 லட்சம் ஒதுக் கப்பட்டிருந்தாலும், மராமத்து வேலைகள் இப்போதைக்குத் துவங்காதாம். மரா மத்து வேலைகள் சாவகாசமாகத் துவங் கும் போது, தெப்பக்குளத்தின் நிலை இன்னமும் மோசமாகியிருக்கும். செலவும் கூடும். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார் களா?

பெண் : சார்... நான் வீட்டை விட்டுக் காணாமப் போய் மூணு மாசமாகுது... என் கணவர் எது வும் புகார் கொடுத் தாரா...?

போலீஸ் : நீங்க வந்து விசாரிச்சா உங்க புருஷனும் காணாமப் போயிட் டார்னு சொல்லச் சொல்லியிருக்கார்!

- அம்பை தேவா



பெரிய தேரின் உயரம் $37^1/_2$ அடி. நாங்குனேரி மடம் ஸ்ரீமத் பரமஹம்ச பட்டர் பிரான் ராமானுஜ ஜீயர் சுவாமிகள் உபய மாக வழங்கியது. தேக்கு, கொங்கு, நாந் தில் மரத்தால் செய்யப்பட்ட இந்தத் தேரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சித்தர், முனிவர், மகரிஷி பொம்மைகள் இருக்கின்றன. உற்சவ நாட்களில் தேருக்கு அலங்காரம் செய்யும் போது, தேர் 75 அடி உயரத்திற்கு விசுவரூபம் எடுக்கும்.


தேரின் மரச் சக்கரங்களை மாற்றி விட்டு, 1986ல் திருச்சி 'பெல்' நிறுவனம், ரூ 7 லட்சம் செலவில் செய்யப்பட்ட நான்கு இரும்புச் சக்கரங்களைப் பொருத்தியது. இதனால் தேர் இழுக்கப்படுவது எளிதானா லும் இரும்புச் சக்கரங்கள் கனத்தால் தரை யில் புதைந்து விடுகின்றன. அதனால் தேர் குறித்த நேரத்தில் வீதிகளில் பவனி வந்து 'நிலை' வந்து சேர இயலாமல் போகிறது. புதைந்து போன தேரை நகர்த்த புல்டோசர் உதவியும் தேவைப்படுகிறது.

பெரும்பாலான கோவில்களுக்கு உள்ள வருவாய் பிரச்னை, சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாளின் கோவிலுக்கும் உள்ளது.

ஆண்டாள் கோவிலுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் குத்தகை எடுத்திருப்பவர்கள் குத்தகைப் பணத்தை ஒழுங்காகத் தருவதில்லை. அத னால் கோவில் வருமானம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. வருமானம் குறைந்து போவதனால், சில வழிபாடுகள், பூஜைகள் நடத்தப்படுவதில்லை. இந்த நிலைமையை நீடிக்க விடுவது சரியல்ல.

''இதற்கு ஒரே தீர்வு, கோவில் நிலங் களுக்குக் குத்தகைக் காரர்கள் பாதுகாப்பு சட்டங்களிலிருந்து விலக்கு அளிப்பதுதான். அல்லது குத்தகை தள்ளுபடி அறிவிப்பிற்கு ஏற்றவாறு, அரசு கோவில்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்'' என்றார் கோவில் பணியாளர்களுள் ஒருவர்.

படங்கள், கட்டுரை :
பிஸ்மி பரிணாமன்


உம், உம்...
நான் சொல்றபடி
கேட்டு,
சமர்த்தா,
தேர்தல்
நடத்து...
இல்லாட்டி
உருட்டித்
தள்ளிடுவேன்,
ஆமா!...
சேஷன்
மத்திய அரசு
காங்கிரஸ் கட்சி
வாழ்க,
வாழ்க...
ரத்தினக்
கம்பள
வரவேற்பு
ரெடி...
கட்சித் தாவல்
தடுப்புச் சட்டம்
போபர்ஸ்
பேரத்துல,
கமிஷன்
வாங்கினவங்க
மேலே,
நடவடிக்கை
உறுதி,
யாரும்
தப்ப
முடியாது!
சோனியா
சி.பி.ஐ.
அரசியல்
அந்தஸ்து
குவாத்ரோச்சி
இத்தாலிக்குத்
தப்பி ஓட்டம்



கல்கி



1993
ஆகஸ்ட் 15
மலர் : 52
இதழ் : 3
ஸ்ரீமுக
ஆடி 30

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிட்டடி பாப்பா. - பாரதியார்.

சூப்பர் சேஷன்!

சேஷனுடைய திடீர் அறிவிப்பு காரணமாக வாக்காளர்கள் பலர் தங்கள் ஜனநாயக உரிமையை ஒத்திப் போட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால் வாக்காளர் சங்கங்களோ ஜனநாயக உரிமைச் சங்கங்களோ எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. பல்வேறு கட்சித் தலைவர்கள்தாம் ஆளாளுக்குக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இப்படி? நம் நாட்டில் தேர்தல் என்றாலே தகிடுதத்தம் என்று அர்த்தமாகி விட்டது. அதனால்தான் சராசரி வாக்காளருக்கு சிரத்தை குறைந்து போய், இடைத் தேர்தல் ஒத்திப் போடப்படுவதை அவர்கள் லட்சியம் செய்யவில்லை. இந்த விரக்திக்கு நேர்மாறாக, கட்சித் தலைவர்களோ தங்கள் திட்டங்களெல்லாம் குளறுபடியாகிப் போகவே 'குய்யோ முறையோ' என்று கூக்குரலிடுகிறார்கள்.

“காங்கிரஸ், தேர்தலைச் சந்திக்கப் பயப்படுகிறது; அதனால் சேஷனிடம் சொல்லி, தேர்தலை ஒத்திப் போடச் செய்து விட்டது” என்று 'ஜெ' அறிக்கை விடுகிறார். “வறட்சி என்று எடுத்துக் காட்டினோம்; அப்போதே ரத்து செய்யாமல் இப்போது தேர்தல் பணி ஆரம்பமான பிறகு ரத்து செய்வது சிறுபிள்ளைத்தனம்” என்று கருணாநிதி அறிக்கை. “ஜெ உளறுகிறார்” என்று வாழப்பாடி அறிக்கை. “வாழப்பாடி பிதற்றுகிறார்” என்று அ.தி.மு.க. தரப்பில் பதில் அறிக்கை. இப்படி ஒரே கோலாகலமான சூழலை உருவாக்கிய புண்ணியத்தைக் கட்டிக் கொள்கிறார் சேஷன். இவர்களில் யாராவது சேஷனின் அறிக்கையைப் படித்து விட்டுப் புரிந்து கொண்டுதான் பேசுகிறார்களா என்பதே சந்தேகமாயிருக்கிறது.

அரசு நிர்வாகம், நீதிமன்றம், நாடாளுமன்றம் போல தேர்தல் கமிஷனும் சுதந்திரமான அமைப்பு. அதன் அதிகாரங்கள் அபரிமிதமானவை. ஆட்சியாளரின் தலையீடு இன்றி, நேர்மையான தேர்தல் நடக்க வேண்டும் என்பதற்காக இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் கமிஷன் யாருக்கும் கட்டுப்பட்டு நடக்க முடியாது. அதற்கு மாநில மத்திய அரசுகள் ஒத்துழைப்பு தர மறுக்கும் போது, கமிஷன் தனது அதிகார பலத்தைக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

முன்பெல்லாம் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு அமைச்சர்கள் நல்லது கெட்டது பற்றி சிந்தித்து முடிவெடுத்தார்கள். இன்று காலம் மாறி விட்டது. அதிகாரிகள் அமைச்சர்களின் கைப்பாவைகளாக இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேஷன் அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்தவர். தேர்தல் கமிஷனராக நியமிக்கப்பட்ட இவர், தங்களைத் தட்டிக் கேட்பதை இன்றைய ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியவில்லை. சேஷன் தேவைக்கு அதிகமாகக் கடுப்பும் கடுமையும் காட்டுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் இங்கே ஒன்றும் ராமராஜ்யம் நடத்தி விடவில்லை என்பதும் நாம் அறிந்ததே.

மேற்கு வங்கத்தில் ராஜ்யசபைத் தேர்தல்தான் என்றாலும், சேஷன் கேட்கிற அதிகாரிகளைத் தராமல், 'நான் கொடுக்கிற அதிகாரிகளைத்தான் நீ ஏற்க வேண்டும்' என்று முதல்வர் முரண்டு பிடிப்பது ஏன்? தமிழகத்தில் முதல்வரின் உண்ணாவிரதத்தின் போது நடந்த அட்டூழியங்களை போலீஸ் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தது. அவ்வாறிருக்க, இங்கு தேர்தலின் போது மத்திய ரிஸர்வ் போலீஸை அனுப்ப வேண்டும் என்று சேஷன் கூறியதை மத்திய அரசு ஏன் முதலில் நிராகரிக்க வேண்டும்? அதன்பின் மனம் மாறி அனுப்ப ஏன் ஆர்வம் காட்ட வேண்டும்? எதுவுமே நேர்மையின் வெளிப்பாடாகத் தெரியவில்லை.

தமது பணியைப் பாரபட்சமின்றி நடத்த மத்திய மாநில அரசுகள் பூரண ஒத்துழைப்பு தந்து உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் சேஷன். அவரது குற்றச்சாட்டுக்களுக்குச் சரியான பதிலைக் கூடத் தர முடியாத மத்திய, மாநில அரசுகள் ஒத்துழைப்பதாவது ஒன்றாவது! இவரைக் கழற்றி விட, அல்லது இவரது அதிகாரத்தைக் குறைக்கும் விதமாக வேறு சிலரையும் தேர்தல் கமிஷனில் இணைத்து விடத்தான் மத்திய அரசு சாமர்த்தியமாகத் திட்டம் போடும்.





கொடுத்து வைக்கிறோம் கொத்தாரியிடம்!

யூனிட் டிரஸ்ட் இவ்வாண்டு வரலாறு காணாத வகையில் 26 சதம் டிவிடெண்ட் வழங்கியுள்ளது. அதுவும் ஹர்ஷத் மேத்தா ஊழல் பலத்த புயலாக வீசி, பங்கு மார்க்கெட்டையே உலுக்கி எடுத்துள்ள ஆண்டில்! இதிலிருந்தே யூனிட் டிரஸ்ட் போன்ற மியூச்சுவல் ஃபண்டுகளின் பலம் நமக்குப் புரியும். ஒரு தனிப்பட்ட நிறுவனத்தில் முதலீடு செய்து ரிஸ்க் எடுப்பதைக் காட்டிலும் நம் போன்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு மியூச்சுவல் ஃபண்டு அதிகப் பாதுகாப்பானது. மியூச்சுவல் ஃபண்டு தனிநபர்களிடம் யூனிட்களை விநியோகித்து இதன் மூலம் திரட்டும் பணத்தைப் பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்கின்றன. ஒரு நிறுவனம் நஷ்டமடைந்தாலும் வேறு இரண்டு லாபம் அடைய, ஒட்டுமொத்தமாகப் பார்க்க மியூச்சுவல் ஃபண்டு லாபம் அடைந்து விடுகிறது. யூனிட்தாரர்களுக்கு டிவிடெண்டும் கணிசமாகக் கிடைக்கிறது.

இன்று வரை அரசுத் துறையில் மட்டும்தான் மியூச்சுவல் ஃபண்டுகள் நடத்த அனுமதி கிடைத்து வந்தது. தற்போது அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தனியார் துறையிலும் மியூச்சுவல் ஃபண்டுகள் தொடங்க அனுமதி வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை நழுவ விடாமல் பல தனியார் நிறுவனங்கள் மத்திய அரசிடம் மியூச்சுவல் ஃபண்டு தொடங்க அனுமதி கோரி மனு செய்துள்ளன. இவற்றுள், மற்ற அனைவரையும் முந்திக் கொண்டு செயல்படுவது சென்னையில் உள்ள இன்வெஸ்ட்மெண்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும்.

ஐ. டி. ஐ. என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த நிதி நிறுவனம், 47 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இதன் பங்குதாரர்கள் மட்டுமின்றி, பல்லாயிரக்கணக்கான இதன் டெபாஸிட்தாரர்களும் ஆற்றல்மிக்க சேவை காரணமாகத் திருப்தி அடைந்துள்ளனர். இந்நிறுவனம் இவ்வாண்டு 35 சதம் டிவிடெண்ட் வழங்கியிருப்பது, திறமையான நிர்வாகத்துக்கு எடுத்துக்காட்டு. இதன் 10 ரூ. பங்குகள் மார்க்கெட்டில் 70 ரூபாய்க்கு விலை போகின்றன.

ஐ.டி.ஐ. தலைவர் B.H. கொத்தாரி, அண்மையில் மியூச்சுவல் ஃபண்டு திட்டத்தை அறிவித்துள்ளார். இதன்படி ஐ.டி.ஐ., அமெரிக்க நிறுவனமான பயனீர் குரூப்புடன் இணைந்து, ''கொத்தாரி - பயனீர் மியூச்சுவல் ஃபண்டு'' தொடங்கும். பயனீர் நிறுவனம், அமெரிக்காவில் பெரும் புகழ்பெற்ற மியூச்சுவல் ஃபண்ட் ஆகும். அதன் பல்வேறு முதலீடுகள் எட்டு பில்லியன் டாலர் - அதாவது 25,000 கோடி ரூபாய் - பெறுமானமுள்ளவை. புதிய கொத்தாரி - பயனீர் நிறுவனம் ஐந்து கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்படவிருக்கிறது. ஆரம்பத்தில் பயனீர், மூன்றில் ஒரு பங்கு பங்குகளை ஏற்றுக் கொள்ளும். மீதி கொத்தாரியிடம் இருக்கும். நாளடைவில் பயனீரின் முதலீடு அதிகரித்து, கொத்தாரி முதலீட்டுக்கு இணையானதாக விளங்கும்.


B.H. கொத்தாரி தவிர இதில் முக்கியமான பொறுப்பில் இருப்பவர்கள், D.S. ரெட்டி; திருவாரூரான் சர்க்கரை ஆலை சேர்மன் ராம் வி. தியாகராஜன், முன்னாள் அயல் விவகாரத் துறை காரியதரிசி ஏ.பி. வெங்கடேசுவரன் பயனீர் குரூப் பிரதிநிதியாக ஜான் கோகன் முதலியோர்.

புதிய நிறுவனம் சிறு முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் நிரம்பப் பெற்று, முதல் இரண்டு ஆண்டுகளுக்குள்ளே ரூ. 100 கோடி முதலீடு செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

அரசுத் துறையில் மட்டுமின்றி, தனியார் துறையிலும் மியூச்சுவல் ஃபண்டுகள் வெற்றி பெற்று போட்டா போட்டியில் இறங்குவது மக்களுக்கு நன்மையாகவே முடியும்.

– வி. கோபாலன்

ஒரு தனிப்பட்ட நிறுவனத்தில் முதலீடு செய்து ரிஸ்க் எடுப்பதைக் காட்டிலும் நம் போன்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு மியூச்சுவல் ஃபண்டு அதிகப் பாதுகாப்பானது.



பூரண சுதந்திரம் கிடைத்தால்..?

சமூதாய, குடும்ப, இதர
தளைகளிலிருந்து விடுபட்டு முழுக்க முழுக்க
சுதந்திரமாய் இருந்தால் என்ன செய்வீர்கள்...?

* ஒளிப்பதிவாளர் ராஜா




கட்டுப்பாடுகளால் தான் வாழ்க்கை சுவாரஸ்யப்படுகிறது. அது இல்லாதபோது நாம் என்ன செய்ய நினைத்தாலும் ஒரு கட்டத்தில் அது அலுத்துப் போய் விடும். சுதந்திரமாக என்னை விட்டால், நிம்மதியாக ஒரு சன்னியாசி ஆகி விடுவேன்.

* திவ்யா



என்ன வேணா பண்ணலாமா? அம்மா திட்ட மாட்டாங்களா? அப்ப ஜாலியா தண்ணில விளையாடுவேன்!

* எம். கிருஷ்ணகுமார்



நாம என்ன செஞ்சாலும் யாரும் தடை செய்யாம இருக்கறதுதான் என்னைப் பொறுத்தவரைக்கும் சுதந்திரம். அப்படி ஒரு சான்ஸ் கிடைச்சா, நம்ம டீ.வி. ஸ்டேஷன் ஆளுங்களையெல்லாம் ஒரு ரூம்ல அடைச்சு வெச்சி, அவங்களால நாம படற கஷ்டம் முழுவதையும் அவங்களே அடையும்படி செய்வேன்.

* லதா



இதுவரைக்கும் பெண்கள் என்னென்ன செய்யக் கூடாதுன்னு நம்ம சமூகம் வரட்டுச் சட்டம் போடுதோ, அதையெல்லாம் முதலில் மீறுவேன். தியேட்டர்ல விசிலடிச்சி கலாட்டா பண்ணுவேன். பார்க்கிறவங்களை யெல்லாம் பகிரங்கமா கிண்டல் பண்ணுவேன். பஸ்ல ஃபுட் போர்டு அடிப்பேன். எட்ஸட்ரா, எட்ஸட்ரா, எட்ஸட்ரா.



* கார்த்திக் சந்திரன்

ஹோம்வொர்க் எதுவும் பண்ண மாட்டேன். நான் முழுக்க டீ.வில கார்ட்டூன் பார்ப்பேன்.

* எல்.பி. சம்பத்



அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதுன்னா, நேரா திருப்பதிக்குப் போய், இந்த தர்ம தரிசனம், ரூபா தரிசனம், 'ஜரகண்டி' சப்தம் இதையெல்லாம் ஒழிச்சுக் கட்டிட்டு பெருமாளைத் தூக்கி வந்து என் வீட்டில் ஒரு முழு நாள் ஆசை தீர வெச்சிருந்து, திருப்பிக் கொண்டு போய் வெச்சுடுவேன்.

* ஆர். சங்கர சுப்பிரமணியன்



ரொம்ப நாள் ஆசை. முதல் காரியமா ஓடற ரயில்ல அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுப்பேன்

முதல் காரியமா வீட்டு வேலை கவிலேர்ந்து ரிடையர்மெண்ட் வாங்கிடுவேன். ரேஷன், பால் கார்டு, கேஸ், எட்டு மணிக்குள்ள சமையல்... எந்தக் கவலையும் இல்லாம நிம்மதியா எங்கியாவது கோவில் கோவிலாப் போகக் கிளம்பிடுவேன்.




* ஜானகி ஸ்ரீகுமார்

ஐயோ! அப்படி ஒரு சான்ஸ் கிடைச்சதுன்னா கடையை மூடிட்டு (டீக்கடை) இருபத்தி நாலு மணி நேரமும் விதவிதமா சினிமா பார்ப்பேன்.

* உதயகுமார்




* முரளிகிருஷ்ணன்



முழுச் சுதந்திரமா? முதல்ல, என்னோட பிரதானமான மூணு ஆசைகளை நிறைவேத்திப்பேன். 1. 120 கி.மீ. வேகத்துல பைக்ல மெட்ராஸ் முழுக்க, சிக்னல்ல நிக்காம சுத்தி வருவேன். 2. அபார மூளையை உள்ளடக்கிய சோ சார் தலையை ஒரே ஒரு தடவை ஆசைதீரத் தடவிப் பார்ப்பேன். 3. நரசிம்மராவைக் கிச்சுகிச்சு மூட்டுவேன்.

சந்திப்பு : கிச்சா
படங்கள் : கோபிநாத்



31. எதிர்பாராத தாக்குதல்

நீலக்கடலிலிருந்து எழுந்து வரும் பெரும் நாகம் போல் ஸர்ப்ப முகப்பைக் கொண்டிருந்த அந்தப் போர்க் கலம், குணதிசைக் காற்று பாய்மரத்தின் பாய்களைப் புடைத்து திருப்பியதாலும், ஒரு பக்கத்துத் துடுப்புகள் கடல் நீரைச் சரேல் சரேலென பின்னுக்குத் தள்ளியதாலும் அரை வட்டமாகச் சுழன்று கரையை விட்டுத் தெற்கு நோக்கித் திரும்பியது. அலைகளால் தாக்குண்ட போது, படம் விரித்த நாகம் போலிருந்த முகப்பு, நீர்மட்டத்தை நோக்கித் தாழ்ந்து எழுந்தது ஒரு கம்பீரத்தை அளித்தது. கலத்தின் மேல் தளத்தில் யந்திரங்கள் கரகரவெனச் சுழன்று அம்புகளையும் வேல்களையும் பொழியத் தயாராக நின்றன. பிரமை தட்டிய விழிகளுடன் நின்றிருந்த குலசேகரனைப் பராக்கிரமபாகுவின் சொற்கள் இன்னும் கனவுலகில் சஞ்சரிக்க விட்டன.

''இதைப் போன்ற கலங்கள் பல இருக்கின்றன இளவரசே. நீங்கள் மதுரை அரியணையில் அஞ்சனாதேவியுடன் அமரும் போது அவை பரிசாக உங்களுக்கு அளிக்கப் படும்!''

பராக்கிரமபாகுவின் திட்டத்திற்குப் பரிபூரணமாக ஒப்புக் கொண்ட குலசேகரனை அஞ்சனாதேவியின் அண்மையும், மலரினும் மென்மையான அவள் ஸ்பரிசமும் மந்திரத்தால் இயக்கப்படும் பதுமையாக மாற்றியிருந்தது. போதாக்குறைக்கு மதியை மயங்க வைக்கும் ஈழநாட்டுச் சுவையான மதுவையும் அவன் புதிதாக அருந்தியிருந்தான்.

உச்சிப் பொழுதில் பராக்கிரமபாகுவுடன் அரண்மனைக்குத் திரும்பிய குலசேகரனுக்கு வாயிலிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

''இளவரசே, மாறவர்மரும் மார்த்தாண்டரும் எதிர் பாராது விஜயம் செய்திருக்கிறார்கள்'' என அறிவித்த படைத்தலைவன் மோகூர் பழையனுக்கு, குலசேகரன் திகைப்பதன் காரணம் புரியவில்லை. எந்தச் சலனமுமின்றி செய்தியைக் கேட்ட பராக்கிரமபாகு ஒருமுறை குலசேகரனைக் கண்களால் எச்சரித்து விட்டு விடுவிடுவென நடந்து, அரண்மனையின் கூடத்தை அடைந்தான்.

பல நாட்களுக்குப் பின் உறவினரைச் சந்திக்கும் முக பாவத்துடன் மாறவர்மனையும் மார்த்தாண்டனையும் நெருங்கிய பராக்கிரமபாகு, ''மாறவர்மர் வருவது தெரிந்திருந்தால் நான் கலத்துக்குச் செல்லாமல் இங்கேயே இருந்து வரவேற்றிருப்பேனே'' என்றான். அவன் முக மலர்ச்சியையும் வணக்கத்தையும் கண்ட மாறவர்மன் விழித்தான்.


மார்த்தாண்டனது குரல் முரட்டுத்தனமாகவே ஒலித்தது. ''ஈழத்து இளவல் கொங்கு மன்னரைக் காண என்ன அவசியம் நேர்ந்தது?''

பராக்கிரமபாகுவின் முகத்தில் சற்றே கடுமை ஏறியது.

''ஈழத்து இளவரசன் பாண்டியருக்குக் கட்டுப்பட்டவன் அல்ல, மார்த்தாண்டரே! நட்புறவு கருதி உதவ வந்தவன்தான்'' என்று உஷ்ணமாகவே பதிலளித்த பராக்கிரமபாகு, ''உங்களுக்கு உதவ வந்து தற்போது காஞ்சிச் சிறையிலடைபட்டிருக்கும் மார்க்கியனை மீட்க இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்றும் வினவினான்.

மாறவர்மனும் மார்த்தாண்டனும் விழித்தனர்.

''அந்த மார்க்கியன் தப்பி நாகைக்கு வந்திருப்பதாகச் செய்தி கிடைத்தது. அவனை மீட்கச் செல்லும் வழியில்



கொங்கு மன்னரைக் காண வந்தேன்'' என்றான் பராக்கிரமபாகு.

பாண்டியரின் சங்கடமான நிலையை மாற்றும் உத்தேசத்துடன் இடையே புகுந்தது மன்னன் குரல்: ''தவறாக எண்ண வேண்டாம். படைகளை அனுப்ப வேண்டிய தருணத்தில் ஈழத்தினவல் இங்கிருப்பதால் மார்த்தாண்டர் சற்று நிதானமிழந்திருக்கிறார்.''

பராக்கிரமபாகுவின் பதில் உடனே வந்தது. ''வீரர்களுடன் பத்துக் கலங்கள் தயாராக இருக்கின்றன மார்த்தாண்டரே. நீங்கள் அறிவித்ததும் அவற்றை அடுத்த நாளே கொற்கையில் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறேன்.''

மார்த்தாண்டன் இந்த பதிலால் திருப்தியடைந்தாலும் மாறவர்மன் கேட்டான் : ''திருமணத்தைப் பற்றி மன்னர் என்ன கூறுகிறார்?''

''போர் முடிந்ததும் மணத்தைப் பற்றிப் பேசலாம் என்று கூறினார் மன்னர்'' என்ற பராக்கிரமபாகுவின் முகத்தில் எவ்வித தயக்கமோ, குழப்பமோ இல்லாததைக் கவனித்த மாறவர்மன் மேலும் குழம்பினான். மாடத் தேவன் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்றே நம்பினான் அவன். அதை நம்பி வந்த தனது முட்டாள்தனத்தையும் நொந்து கொண்டான். நிலவிய சாதகமான சூழ்நிலை அப்படியே தொடரட்டும் என்று தீர்மானித்த மார்த்தாண்டனும் மாறவர்மனும் மன்னனிடம் விடைபெற்றனர்.

கடற்கரை வரை சென்று பராக்கிரமபாகுவை வழியனுப்பிய குலசேகரனது உள்ளம் அஞ்சனாதேவியை நினைத்து உருகிக் கொண்டிருந்தது.

பொன்முகலியென்று தமிழராலும், ஸ்வர்ண முகியென்று வடநாட்டவராலும் அழைக்கப்பட்ட அந்த நதி, கரைகளில் பொன்னைக் கொண்டு வந்து குவித்ததோ இல்லையோ, பொன்னை விட உயர்ந்த

விஷ்வக்சேனன்



இதோ ஒரு கடி!

"அமெரிக்க ஜனாதிபதியுடன் சேர்ந்து விருந்து சாப்பிடவே எல்லாரும் தயங்குவாங்க...!"

"ஏன்...?"

"அவர்தான் 'பில்' கிளின்டனாச்சே!"

– ரம்யா ராதா

நெல்லையும் பிற பயிர்களையும் கண்களுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென்று விரிந்திருந்தது. கங்க நாட்டின் எல்லைப் புறத்தில் அந்த நதி தனது பாதையை அமைத்துக் கொண்டதால் உள்நாட்டுக்கு நீரைக் கொண்டு செல்ல பல பெரும் கால்வாய்கள் நதியிலிருந்து பிரிந்து நீரை எடுத்துச் சென்றாலும் நதியின் வேகம் எங்கும் குறைந்ததாகத் தெரியவில்லை. பயிர்களுக்கு மட்டுமின்றி பயணத்திற்கும், உள்நாட்டுக்குப் பொதிகளை எடுத்துச் செல்லவும் பயன்பட்ட அந்தக் கால்வாய்களின் ஓரங்களில் பரதவர் குடியிருப்புக்களும் பல படகுத் துறைகளும் தோன்றியிருந்தன.

ஆற்றின் பக்கவாட்டில் நெளிந்து நெளிந்து கரையோடு தொடர்ந்து வந்து கொண்டிருந்த சாலையின் ஓரங்களிலும், கால்வாயை அடுத்திருந்த சமவெளியிலும் கூடாரங்கள் பல தோன்றியிருந்தன. அவற்றின் முகப்பிலும் உச்சியிலும் பறந்த கொடிகளில் பொறிக்கப்பட்டிருந்த புலி, கங்க நாட்டின் மீது பாய்ந்து வருவது போல படபடத்துக் கொண்டிருந்தது.

மலைக் காற்றில் படபடத்த அந்தப் புலியைக் கண்டு அஞ்சியதாலோ என்னவோ அந்த மாலை நேரத்தில் மேகங்கள் வெகுவேகமாக மலைத் தொடரை நோக்கி விரைந்து அடைக்கலம் தேட முயன்றன. கதிரவனுக்கும் அந்த அச்சம் தோன்றியிருக்க வேண்டும். இல்லையெனில் அவன் ஏன் மலைத் தொடர்களின் பின் சென்று மறைந்து கொள்ள வேண்டும்? மேகங்களுக்கும் கதிரவனுக்கும் தஞ்சமளிக்க அந்த மலைகளும், துணிந்ததால்தானோ என்னவோ அது தன் நிழலை மெல்ல மெல்ல அந்தக் கூடாரங்களை நோக்கி நீள வைத்தது. கதிரவனின் ஒளி மறைய மறைய அந்தப் பகுதியில் அதீதமான குளிர்காற்று ஊடுருவியது.

எதிரே விரிந்த பசிய வயல்களையும், மறைந்து கொண்டிருந்த கதிரவன் வீசிய பொன்னிறக் கதிர்களையும் ரசித்தபடி நின்றிருந்த அரையன் மதுராந்தகன், மலைத் தொடரை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருந்த பறவைகளைத் தொடர்ந்த விழிகளைப் பக்கவாட்டில் திருப்பினான். புரவிகளை நன்றாக உருவி விட்டுக் களைப்பை நீக்கி அவற்றை ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்த வீரர்களும், வாட்களையும் அம்புகளையும் கற்களில் கூர்மையாகத் தீட்டிக் கொண்டிருந்தவர்களும், விற்களின் நாண்களை நன்றாக முறுக்கேற்றிக் கொண்டிருந்த வில் வீரர்களும், தென்பட்டனர். பார்வைக்குக் கூடாரமடித்து நீண்ட பயணத்தின் களைப்பைப் போக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றினாலும், அவர்கள் எந்த வினாடியிலும், துடிப்புடன் அணிவகுத்துக் கிளம்பத் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கண்ட அரையனின் முகத்தில் திருப்தி நிலவியது.

மேலைச் சாளுக்கிய மன்னனுக்குச் சோழருடன் நடைபெற்ற போரில் உணவும் படையும் அனுப்பி உதவி செய்தவனும், அவனது உறவினனும், நெருங்கிய நண்பனுமான கங்க மன்னன் அமராபரணனது கோட்டை அந்த நதிக் கரையில் இன்னும் பல காதங்களுக்கப்பால் இருந்தாலும் அவன் தனது எல்லைப் புறத்தில் சாளுக்கியரை வென்ற சோழப் படைகள் கடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பான் என்று எண்ணாத அரையன், இரு தினங்களுக்கு முன்பே ஜெயந்தனை நிலையறிந்து வர அனுப்பியிருந்தான்.

ஜெயந்தன் வருவதற்கான அறிகுறிகள் ஏதும் புலப்படாததால் கூடாரங்களைக் கலைத்து, படையை அணிவகுக்கச் செய்வது நலம் என்று கருதினான் அரையன். படைத் தலைவனை ஆலோசனை கேட்க எண்ணியவனாகக் காலிங்கராயன் இருந்த பின்புறத்துக் கூடாரமொன்றை நோக்கிச் சென்றான்.

சுற்றிலும் பந்தங்கள் எரிந்து கொண்டிருக்க, வீரர்களும் உபதலைவர்களும் சூழ்ந்து நின்றிருக்க, நடுவில் அமர்ந்திருந்த காலிங்கராயன் போர்க்களத்துக் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் பெருங்குரலில் விவரித்துக் கொண்டிருந்தான். நீண்ட காலமாக நடைபெற்ற சாளுக்கியப் போரில் அவன் களைத்தவனாகத் தெரியவில்லை. அவன் சிரிப்பும் உற்சாகமும் சுற்றி இருந்தவர்களிடையே பரவி, பயண அலுப்பை அறவே துடைத்து புத்துணர்வை ஏற்படுத்தியது.

போர்க்களத்தில் பெரும் ராட்சதனைப் போல் எதிரிகளை ஆவேசமாக வெட்டிச் சாய்ப்பவனும், வாளினாலும், கரங்களா

ஓம் செய்யும் சமிக்ஞைகளால் தன் வீரர்களைப் பம்பரமாகச் சுழல வைப்பவனுமாகிய காலிங்கராயன், அதே வீரர்களுடன் சரிசமமாக இப்போது அமர்ந்து சகஜமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட அரையன் விழிகளில் வியப்பு படர்ந்தது.

அரையன் வருகையைக் கண்ட வீரர்கள் வணங்கி வழி விடவே காலிங்கராயன் தன் கதையைப் பாதியில் சற்று நிறுத்தி, அரையனை வரவேற்றான்.

''வா மதுராந்தகா, ஜெயந்தன் இன்னும் திரும்பவில்லையே?'' என்றான்.

இரு படைத் தலைவர்களும் கூடி விட்டதால் இனி தமது பணிகளைக் கவனிக்கச் செல்லலாமெனக் கலையத் தொடங்கிய வீரர்கள், ஜெயந்தன் பெயரைக் காதில் வாங்கியதும் மறுபடி நின்றனர்.

''அதுதான் சற்று கவலை அளிக்கிறது'' என்றான் அரையன்.

பதிலுக்கு அலட்சியமாகக் கையை ஆட்டிய படைத்தலைவன், ''அவனைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் மதுராந்தகா. அந்த விக்கிரமாதித்தனால் கூட ஜெயந்தனை அரை நாழிகைக்கு மேல் பிடித்து நிறுத்தி வைக்க இயலாது. நிலைமையைப் பூரணமாக அறிந்து வர சற்றுத் தாமதமாகலாம். அஞ்ச வேண்டாம்'' என்றான்.

அவன் கூறுவது உண்மையென்பது அரையனுக்குப் புரிந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் நான்கு சாளுக்கிய வீரர்களை ஜெயந்தன் சாய்த்து விட்டதை நவிலைக் கோட்டையில் கண்ணெதிரில் கண்டிருந்த அரையனுக்கு அவன் திறமையில் முழு நம்பிக்கை இருந்தது.

''படைத் தலைவரே, என் கவலை ஜெயந்தன் பற்றியது அல்ல. வீணான கால தாமதம் வீரர்களின் வேகத்தை மந்தப்படுத்தி விடும் அல்லவா?'' என்றான்.

அரையன் கூறியதை ஒப்புக் கொண்ட படைத் தலைவன் உபதலைவர்களை அழைத்து கூடாரங்களைப் பிரிக்குமாறும் வீரர்களைப் புறப்படச் சித்தமாக்கும்படியும் உத்தரவிட்டான்.

அவசியமான அளவுக்கு மட்டும் பந்தங்கள் தொடர்ந்து எரிய விடப்பட்டன. கூடாரங்களைச் சுருட்டவும், ஆயுதங்களைத் திரட்டவும் வீரர்கள் விரைந்தனர்.

அணிவகுப்பை ஒழுங்குபடுத்த முனைந்து கொண்டிருந்த போது சற்று முன்னால் சென்று நின்றிருந்த காலிங்கராயனின் பாம்புச் செவிகள் எதையோ உற்றுக் கேட்க முயன்று கொண்டிருந்தன. அவன் கூரிய விழிகளும் இருளை ஊடுருவிக் கொண்டிருந்தன.

காலிங்கராயன் அசைவற்று நிற்பதைக் கண்ட அரையன் அவனை நெருங்கினான்.

தொலை தூரத்தில் புரவியின் குளம்பொலி மெலிதாக எதிரொலித்தது. காலிங்கராயன் முகம் மலர ''மதுராந்தகா, ஜெயந்தன் வந்து கொண்டிருக்கிறான்'' என்றான்.

ஜெயந்தனது புரவியும் அவனைப் போலவே தனிப்பட்ட வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். அதன் குளம்பொலி முதலில் சீராகவும் திடீரென்று பாய்வது போலும் மறுபடி நிதானமாகவும் ஒலியெழுப்பியது.

அருள்வாக்கு

எல்லாம் ஈச்வரன் என்றால் நாம் மட்டும் வேறேயா? நம்மையும் அந்த ஈச்வரனாகக் கரைக்க வேண்டும். அப்பொழுது இரண்டாவது என்பது இல்லை. நாம் இப்பொழுது வெவ்வேறாகப் பார்க்கிறோம். எல்லாம் ஈச்வரனாகப் பார்ப்பதுதான் நிஜப் பார்வை. இரண்டாவது இல்லாமல் நாமும் கரைந்து விட்டால் நல்லது உண்டாகும். துக்கம் இல்லாமல் போகும். லோகத்தில்கூட இரண்டு மனங்கள் ஒன்றாகி விட்டால் எந்தக் கிளர்ச்சியும் இல்லை. ஒரே சாந்திதான். அப்போது எல்லாம் நாமாக ஆகிறோம். நமக்கே நம்மேல் ஆசை அப்பொழுது ஏற்படாது. ஆசையில்லாவிட்டால் பாபம் இல்லை. இரண்டாவது இல்லாமற் பண்ணுவது அத்வைதம். எல்லாம் பகவானாகப் பார்ப்பது அத்வைதம். உள்ளதை உள்ளபடி பார்ப்பதுதான் அத்வைதம்.

–ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



சற்று நேரத்தில் புரவி கண்களுக்குத் தென்பட்டது. மங்கலான நிலவொளியில் புரவியில் வந்திறங்கிய ஜெயந்தனின் முகம் எந்த உணர்ச்சியுமற்றுக் கல்லாக இருந்தது. மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அவன் முகம் இப்படிக் கல்லாக மாறி விடுவதை கவனித்திருந்த அரையன், அவன் கொண்டு வந்திருக்கும் செய்தியும் சற்று அதிர்ச்சி தருவதாகத்தானிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டான்.

ஜெயந்தனைக் கண்டுவிட்ட உபதலைவர்களும் அந்த இடத்தை நெருங்கி வர ஆரம்பித்தனர்.

படைத்தலைவனை வணங்கிய ஜெயந்தன், ''படைத்தலைவரே, அமராபரணன் கங்கர் கோட்டையில் இல்லை'' என்றான்.

''பின் எங்கே?''

''இந்தக் கால்வாய் நதியிலிருந்து பிரியும் இடத்தில், பாசறை அமைத்து நமக்காகக் காத்திருக்கிறான்'' என்றான் ஜெயந்தன்.

''என்ன? உண்மையாகவா?'' உபதலைவர்களின் குரல்கள் சற்று அதிர்ச்சியுடனேயே ஒலித்தன.

சோழர் படை நதியோரமாகவே பயணம் செய்து கங்க மன்னனைக் கோட்டையிலிருந்து வெளியே வரவழைக்க முற்றுகையிட வேண்டியிருக்கும் என்று எண்ணியிருந்த காலிங்கராயனுக்கும் அமராபரணன் படைகளுடன் வெளியேறி இந்தனை அண்மையில் வந்து காத்திருக்கிறான் என்ற செய்தி எதிர்பாராததாக இருந்தது.


''கங்கன் படையொன்றும் அந்தனை பலமானதில்லையே ஜெயந்தா? கோட்டையிலிருந்து கொண்டு போரிடுவதுதானே அவனுக்கு அதிக பாதுகாப்பானது?'' - அரையனின் கேள்வியில் வியப்பு ஒலித்தது.


''ஆம். மதுராந்தகரே! ஆனால் கங்கன் படை நாம் எதிர்பார்த்தது போல அந்தனை பலமற்றதல்ல இப்போது. அவன் நண்பனான சிங்கணனின் படையும் அவன் படையுடன் இணைந்திருக்கிறது'' என்றான் ஜெயந்தன்.

சற்று நேரம் மௌனம் நிலவியது அங்கே.

''அதுமட்டுமல்ல'' என்ற ஜெயந்தன், ''இன்று இரவு முதல் ஜாமம் முடியும் நேரத்தில் நம்மை எதிர்பாராது தாக்கவும் திட்டமிட்டிருக்கிறான் கங்கன்'' என்று மற்றுமொரு அதிர்ச்சியான செய்தியையும் மின்வெட்டுப் போல் பிரயோகித்தான்.

(தொடரும்)





கருக்
கலைப்பு செய்து
கொள்ளும்
தாய்க்குக்
கருவை
தானம் செய்
யும் உரிமை
இருக்கிறதா...?
ரத்தம், உடல்
உறுப்புக்களை
விலைக்கு
வாங்குவது
போல்
கரு செல்களை
வாங்கி,
விற்பதா...?

வியாபார நோக்கில் அபார்ஷன்!

பில் கிளின்டன் பதவி ஏற்ற மூன்றாம் நாளே ஒரு காரியம் செய்தார் : ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சிக்கு நிதி வழங்க ரீகன் அரசு தடை செய்திருந்தது. அந்தத் தடையை ரத்து செய்தார் கிளின்டன்.

ரீகன் அரசு நிதி வழங்க மறுத்த அந்த ஆராய்ச்சி: மனிதக் கருவிலிருந்து திசுக்கள் எடுத்து நோய்களைக் குணப்படுத்தும் முயற்சி...

கருச் சிதைவின் போது வெளிப்படும் கருவிலிருந்து உடனடியாகச் சில உயிருள்ள செல்களை நீக்கிப் பாதுகாக்கி றார்கள். இந்த செல்களை ஆபரேஷன் மூலம், சில தீராத நோய் உடையவர்களின் உடலில் பொருத்தினால், புதிய திசு வளர்ந்து அவர்கள் நோயிலிருந்து குணம் பெற வாய்ப்பு இருக்கிறது.

உதாரணமாக பார்க்கின்ஸன்ஸ் டிசீஸ் என்ற நோயை இப்படிக் குணப்படுத்த முடியும். கருவில் உள்ள நியூரல் செல்களை மூளையின் குறிப்பிட்ட பகுதியில் இணைப்பதன் மூலம் 'டாப் மெய்ன்' என்கிற பொருள் இடைவிடாது சுரப்பதற்கு உதவ முடியும். இந்த டாப் மெய்ன் சுரப்பது நிற்பதால் தான் பார்க்கின்ஸன்ஸ் நோய் வருகிறது.

இதே போல் சர்க்கரை வியாதி உள்ளவர்களின் பான்க்ரியஸில் கரு செல்களைப் பொருத்தி இன்சுலின் சுரப்பை அதிகரிக்க முடியும்.

கருவிலிருந்து எடுத்துப் பொருத்தப்படும் செல்கள் சீக்கிரமாக வளரும் குணம் உடையவை. அவற்றை அந்நியப் பொருளாக நிராகரிக்காமல் மனித உடல் சுலபமாக ஏற்கிறது. மிக 'இளசு' என்பதால் இந்த செல்கள் உடலின் எந்தப் பகுதியுடனும் பொருந்திக் கொண்டு அந்தப் பகுதியின் குணங்களுக்கு ஏற்ப வளர்கின்றன. எனவே சிறுநீரகம், கல்லீரல் என எந்தப் பகுதியையும் சீர்செய்ய முடியும்.

மருத்துவத் துறையில் மாபெரும் சாதனைகளைப் புரிவதற்கு 'foetal cell transplant' முறை வழிகாட்டும். பின்னர் ஏன் ரீகன் அரசாங்கம் அதற்குத் தடை விதித்தது...?

இந்த முறை பிரபலமானால், வியாபாரத்துக்காக அபார்ஷன் செய்து கொள்வதென்பது வழக்கமாகி விடும் வாய்ப்பும் இருக்கிறதல்லவா? கருக் கலைப்பு செய்து கொள்ளும் தாய்க்குக் கருவை தானம் செய்யும் உரிமை இருக்கிறதா...? ரத்தம், உடல் உறுப்புக்களை விலைக்கு வாங்குவதுபோல் கரு செல்களை வாங்கி, விற்பதா...? இந்த வியாபா ரத்தை யார் முறைப்படுத்தி கண்காணிப்பார்கள்? விற்பதற்காகவோ தானம் கொடுப்பதற்காகவோ மட்டுமே ஒரு பெண் கருவடையும் வழக்கம் வந்து விடாதா...? இது பெண்ணின் ஆரோக்கியத்தைப் பாதிக்காதா...? எல்லாவற்றுக்கும் மேலாக இது தார்மிக ரீதியில் சரியான செயலா...? போன்ற கேள்விகள் அமெரிக்காவில் எழுப்பப்பட்டு வருகின்றன.

விந்து வங்கிகள் இந்திய கலா சாரத்துக்கு அன்னியமானவை என்ற நிலை மாறி அரசு முயற்சியிலேயே இன்று தமிழ்நாட்டில் அத்தகைய வங்கி அமைக்கப்படவிருக்கிறது. கருத் திசு ஆராய்ச்சியும் பிரபலமாகி, உலகளாவிய அங்கீகாரம் பெற்று விட்டால் நம் நாட்டிலும் இக் கேள்விகள் எழுப்பப்படும்.

அமெரிக்காவில் இந்த பயங்கர வியாபாரம் ஏற்கெனவே நடைமுறைக்கு வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் பல மில்லியன் டாலருக்குக் கருத் திசு விற்கப்படுகிறதாம். சுமார் அரை டஜன் நிறுவனங்கள் இந்தத் 'தொழிலில்' ஈடுபட்டுள்ளனவாம்! இவற்றுள் சில, மருத்துவ காரணங்களுக்கு மட்டும் இன்றி அழகியல் (பிளாஸ்டிக் சர்ஜரி போன்றவை) காரணங்களுக்கும் கருத் திசுக்களைப் பயன்படுத்தும் சோகமும் நிலவுகிறதாம்!

நன்றி : நியூஸ்வீக்

(வசனகர்த்தா டி. ராஜேந்தர் மன்னிப்பாராக.)

கதாநாயகன் ராம்கிக்குப் பந்தயம் கட்டுவது வேடிக்கை. அதுவே பின்னர் ஆகி விடுகிறது வாடிக்கை. ஒரு பந்தயத்தின் விளைவாக ஒரு பெண்ணின் கல்யாணம் நின்று போய், அவள் வருங்காலம் கேள்விக்குறி ஆகி விடும்போது, தன் ஆற்றலை வெளிப் படுத்த இவருக்குக் கிடைக்கிறது வாய்ப்பு. அதற்கு இவர் சேர்ப்பது கச்சிதமான முத்தாய்ப்பு.

கதாநாயகி கஸ்தூரி முதலில் வெறும் அலங்காரப் பதுமை தானோ என்கிற தோற்றம். உதவ முன் வரும் ராம்கியை வெறுத்து உதறித் தள்ளும் போது தெரிவது சீற்றம். பின்னர் படிப்படியாக அவரைப் புரிந்து கொண்டு அவரையே வரிப்பது சுவாரஸ்யமான மாற்றம்.



பால் மார்க்

பட்டிக்காட்டி லிருந்து பட்டினம் வந்து சேரும் மாமன் மகள் (நந்தினி?) படுசுட்டி. இரவும் பகலும் ராம்கியைச் சுற்றி வந்து அவரைக் கவர்வதற்காக அடிப்பது லூட்டி. முடிவில் ஏமாற்றத்தைத் தாங்கிக் கொண்டு ஊர் திரும்பும் போது இவர் மனம் கெட்டி. இவர் சரக்கு நிறைந்த பெட்டி.

காவலர் ஜனகராஜ் மாமூல் வாங்குவதில் தாராளம். அதற்காக இவர் கண்டு பிடிக்கும் காரணங்கள் ஏராளம். இவர் தோன்றும் காட்சிகளில் அரங்கில் சிரிப்புக் குற்றாலம்.

அப்பா எஸ்.எஸ். சந்திரனுக்குச் சிரிப்பைத் தூண்டும் சீரியஸ் பாத்திரம். மகன் ராம்கியை வீட்டை விட்டுத் துரத்தி விடும் அளவுக்கு இவருள் ஆத்திரம். அதற்காக இவர் மேற்கொள்ளும் முயற்சிகளில் தெரிவது காத்திரம்.

அனுபவம் வெளிப்படுத்துவது முழுத்திறம்.

வி. பாலகிருஷ்ணனின் வசனங்களில் அங்கங்கே தலைநீட்டுகிறது பச்சை. தேவையில்லை இவருக்கு இந்த இச்சை. இவரேதான் இயக்கம். பாத்திரப் படைப்பிலும், சம்பவக் கோப்பிலும் இடம்பெறுவதில்லை தயக்கம். உடன் பார்த்த நண்பர், ''படம் ரொம்ப Fresh ஆ இருக்கு'' என்று சொன்னதில் நமக்கு முழு இணக்கம். ஆனால் Fresh என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன என்று கண்டுபிடிப்பதில்தான் நமக்குச் சுணக்கம்.

– சி.ஆர்.கே.

பி.எஃப்ல் லோன் போட்டு எடுத்திருந்த மூவாயிரம் ரூபாயையும் பேண்ட் பாக்கெட்டில் திணித்துக் கொண்டு, மேஜை டிராயரை இழுத்துச் சாத்தி விட்டு எழுந்தேன். ரொம்ப நாளாக என் மனைவி கேட்டுக் கொண்டிருக்கும் 'ஸ்டட்'ஐ வாங்கிக் கொடுத்தே ஆக வேண்டும். நாளுக்கு நாள் 'அனத்தல்' அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆஃபீஸ் வாசல் படி இறங்கும் போது, முத்து 'தடதட'வென ஓடி வந்தான்.

''சார்... ஐயாவை போலீஸ்ல புடிச்சுட்டுப் போய்ட்டாங்கய்யா... ஈ 7 ஸ்டேஷன்...'' - அவன் வார்த்தைகளை உள்வாங்கிப் புரிந்து கொள்ள ஒருகணம் ஆயிற்று.

''என்ன முத்து? யாரை? எங்கப்பாவையா?''

''ஆமா சார்... மத்தியானம் மூணு மூன்றரை மணியைப் போல இருக்கும். வேன்ல வந்து கூட்டிட்டுப் போய்ட்டாங்க...''

''என்ன...? எதுக்குக் கூட்டிட்டுப் போனாங்கன்னு தெரியுமா? ஏதாவது கரைச்சலா? பதறாம சொல்லு...''

''ஐயா வழக்கம் போல இன்னிக்கும் கலெக்டர் ஆஃபீஸுக்குப் போனாக, சார்... நம்ம மாயாண்டி மகனுக்கு சாதி சர்டிபிகேட்டு... முத்தாயிக்கு முதியோர் பென்ஷன்... பரமசிவம் அண்ணனுக்கு ரேஷன் கார்டு... இப்படி ஏழெட்டு பஞ்சாயத்து வச்சுக்கிட்டுப் போயிருக்காக... போன இடத்தில, வடக்கு தாசில்தார் ஆஃபீஸ்ல ரேஷன் கார்டு தர்ற கிளார்க், ஆள் தெரியாம நம்ம ஐயாகிட்ட காசு கேட்டிருக்கான்... உங்களுக்குத்தான் ஐயா குணம் தெரியுமே...



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - ரூ 500/- மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை - I

ச(ா)த்யம்

'காசாடா கேக்குற'ன்னு சத்தம் போட்டுருக்காரு. அவனும் பதிலுக்கு பதில் பேச, வாய் வார்த்தை தடிச்சிருக்கு... கடைசில ஐயா அந்த கிளார்க்கை எட்டி அடிக்கப்புட்டதா அவங்க சொல்றாங்க... யூனியன் அது இதுன்னு இழுத்து கண்ணு, காது, மூக்கு வச்ச விஷயம் கலெக்டர் வரைக்கும் போயிருக்கு. விவகாரம் முத்தி இப்ப நம்ம ஐயாவை அரெஸ்டு பண்ணி வச்சிருக்காங்க. இதான் சார் சங்கதி...''

''சரி வா... ஸ்டேஷன்ல போய் என்னன்னு விசாரிக்கட்டு வரலாம்...'' என்றவாறே ஸ்கூட்டரை இயக்கினேன்.

அப்பா ரொம்ப கரடு முரடானவர். பிடிவாதத்தில் மொரார்ஜி தேசாய் மாதிரி... 1942-ல் ஆகஸ்டு போராட்டத்தில் அடி வாங்கி திருச்சி ஜெயிலில் இருந்தவர். 'தியாகி' பென்ஷன் கேட்காத தியாகி. முன் கோபி... அம்மா இறந்து போன இந்த ஏழெட்டு வருஷமாய், ஊர் மணியம் பார்ப்பதற்கே அவருக்குப் பொழுது சரியாயிருக்கிறது. முப்பாட்டன் சொத்தை விற்று, எங்களைப் படிக்க வைத்து ஆளாக்கி விட்டார். என் அண்ணன், தம்பி எல்லாரும் ஆளுக்கொரு திசையாய்ப் பிய்த்துக் கொண்டு போய் விட்டதில்... 'நான் ஏமாளி' என்று என் பத்தினி தினம் என்னைத் திட்டித் தீர்க்கிறாள்.

''ஏன் முத்து... அப்பாவை அடிக்கக் கிடிக்க...''


''அதெல்லாம் இருக்காது ஸார்... அவுங்களுக்கும் ஆள் தெரியாதா என்ன..? இதே ஈ-7க்கு எத்தனை பிரச்னைக்குப் போய் வந்திருக்காக.... வெட்டியாவ பயப்படாதீங்க ஸார்...''

ஸ்கூட்டரை ஸ்டேஷன் வாசலில் ஒரு ஓரமாய் நிறுத்தி விட்டு உள்ளே போய்ப் பார்த்தோம். ஈ காக்காய் இல்லை..... ஒரே நிசப்தம்... கொஞ்சம் அடி வயிறு கலங்கியது. பத்து நிமிஷம் கழித்து எங்கிருந்தோ ஒரு ரைட்டர் வந்து சேர்ந்தார். விசாரித்ததற்கு, சரியான பதில் எதுவும் கிடைக்கவில்லை. அப்பா ஸ்டேஷனில் இருப்பதாகவும் புலப்படவில்லை... இன்ஸ்பெக்டர் வர இரண்டொரு மணி நேரமாகுமாம்... என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில், முத்து மெள்ள என் பக்கம் சாய்ந்து கிசுகிசுத்தான்.

''சார்... கையில ஒரு பத்து இருபது இருந்தா எங்கிட்டே குடுத்துட்டு நீங்க வெளில நில்லுங்க. நான் விசாரிக்கப் பாக்கறேன்...''

எதிர்சாரிக் கடையில் ஒரு டீயைக் குடித்து முடிப்பதற்கும், முத்து ஸ்டேஷனிலிருந்து வெளிப்படுவதற்கும் சரியாய் இருந்தது.

''சார்... ஐயாவை ரிமாண்ட் பண்ண மாஜிஸ்ட்ரேட்டுட்ட கூட்டிட்டுப் போயிருக்காங்களாம்... கோர்ட்டு முடிஞ்சிருக்கும்; அதனால வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்க போலிருக்கு... அங்கேயிருந்து அப்படியே ஜெயிலுக்குப் போயிருவாங்களாம். நாலைஞ்சு செக்ஷன் போட்டிருக்காம்... சாதிப் பேரச் சொல்லி தரக்குறைவாத் திட்டினாரு... அரசு ஊழியர் பணியைத்



பூர்ணகுமார்

அறிமுக எழுத்தாளர்

தடுத்தாரு... மிரட்டிக் கொல்லப் போனாருன்னு எழுதிருக்காங்களாம்.. வாங்க சார்... வக்கீல் யார்ட்டயாவது போய்ப் பார்ப்போம்...''

''சரி... வா.. ஆஞ்சநேயுலுன்னு அப்பா ப்ரெண்டு ஒருத்தர் இருக்கார்... அவரைப் போய்ப் பார்ப்போம்.''

''சார்... வேணாம் சார். அவரு தலை யிட்டா கேஸ் தேறாது. நம்ம அய்யா மாதிரி அவரும் பொழைக்கத் தெரியாத மனுஷன்... இதுக்கெல்லாம் விவரமான வக்கீலாப் பாக்கணும்... கோவிந்தசாமிதான் இதுக்கு ஸ்பெஷலிஸ்ட்... நுணுக்கமா வேலை செய்வாரு.''

கோவிந்தசாமியின் வீட்டுக்குப் போய், மணிக்கணக்காகக் காத்திருந்தோம். விவரத்தைச் சொல்லி முடித்தோம்.

''ஓ... அவுரு ஒங்க அப்பாங்களா? நல்ல மனுஷனாச்சே... பாருங்க.. அவரைப் போய் இப்பிடிப் பாடாப் படுத்துறாங்களே... ம்... உங்க அப்பாவும் கொஞ்சம் காலத்துக்குத் தக்கன மாறணும் தம்பி. எவன் இந்தக் காலத்துல காசு வாங்காம வேலை செஞ்சு தரான்? சொல்லுங்க? காலேஜ்ல ஸீட் வாங்க காசு... வேலை வாங்க காசு... டிரான்ஸ்பருக்குக் காசுன்னு... அழுதுட்டு வர்ற பய கை நீட்டத்தான் செய்வான்... ஒரு பத்து இருபதை விட்டெறிங்க... வாலை ஆட்டுவான்... நம்மதான் அனுசரிக்கணும் தம்பி... எந்த ஸ்டேஷன்னு சொன்னீங்க... ஈ 7 ஆ... ஏம்பா... கிருஷ்ணா... ஈ7ல.. நம்ம டேனியல்தானப்பா இருக்காரு... இருங்க தம்பி பேசுவோம்...''

போன் பேசி முடித்தவர் மீண்டும் என்னிடம் திரும்பினார் :

''தம்பி... கலெக்டர்ட்ட இருந்தே பிரஷர் இருக்கும் போலிருக்கே.. தீண்டாமை அது இதுன்னு 'நான்-பெயிலபிலா' ஒரு நாலைஞ்சு செக்ஷன் இழுத்து விட்டிருக்காங்க... இன்னிக்கு வெள்ளி.. போச்சு... இரண்டாநு சனி, ஞாயிறு... இனி திங்கட்கிழமைதான் கோர்ட்டு... அன்னிக்குத்தான் எதாவது மூவ் பண்ண முடியும். ஏம்பா கிருஷ்ணா... திங்கட்கிழமை செஷன்ஸுக்கு நம்ம ஜட்ஜ் வந்துருவாரா? லீவா? பாருப்பா கொஞ்சம்... ம்.. தம்பி நீங்க மனசு கலங்காதீங்க... எல்லாம் பாத்துக்குவோம்... குமாஸ்தாவுட்ட அப்பாவப் பத்தி எல்லா விவரமும் எழுதிக் குடுத்துட்டு, செலவுக்கும் பணம் குடுத்துட்டுப் போயிருங்க... திங்கட்கிழமை காலைல பதினோரு மணிக்கெல்லாம் கோர்ட்ல இருங்க.. நாளை நாளன்னிக்கு ஜெயில்ல போய் அப்பாவைப் பாத்துட்டு வாங்க... அவரையும் தைரியமா இருக்கச் சொல்லுங்க... என்ன...?''

மணி எட்டரையாகி விட்டது. வீட்டில் அவள் தனியாய் இருப்பாள் என்கிற எண்ணம் ஸ்கூட்டரில் வலுத்த உதையாய் விழுந்தது. முத்துவை அவன் வீட்டில் இறக்கி விட்டு விட்டு, வீடு போய்ச் சேர, மணி ஒன்பதடித்தது. வாசற்படியில் கால் வைத்ததும், காம்பவுண்டு முழுவதும் கூடி, விவரம் விசாரித்து 'உச்' கொட்டி கலைந்தார்கள். பரமசிவம் அண்ணன் மட்டும் ஓரமாய் நின்று காத்திருந்தார்... 'என்ன' என்ற பாவனையில் புருவத்தை உயர்த்தினேன்.

''தம்பி... அலைஞ்சிட்டு வந்திருப்பீக... சாப்பிட்டு வாங்க. இங்கணயே நிக்கிறேன்...''

''பரவாயில்ல சொல்லுங்க...''

''ஐயா.. எனக்காகத்தான் அம்புட்டு சண்டை போட்டாக... ஆத்தா அம்மான்னு அவன் வரம்பு மீறிப் பேச ஆரம்பிச்சப்புறம்தான், கொதிச்சுப் போய்க் கைய ஓங்குனாக... அவன் மேல அடி விழுகுற துக்குள்ள தடுத்து இழுத்தாந்திட்டோம்... அம்புட்டு பேச்சு... அவரப் பேசினதும் இல்லாம... அடிச்சாருன்னு பொய்யும் சொன்னா... இது அபாண்டம் தம்பி அபாண்டம்...!''

''........''

''சாதிப் பேரு சொல்லி திட்டினாருன்னு போஸ்டர் எழுதி பஸ் பூரா ஒட்டியிருக்காங்க... ஐயா எப்பேர்ப்பட்டவர்...! மகாத்மா வழில எம்புட்டு சேவை பண்ணியிருக்காரு... அவர் சாதி பாராட்டுறவருன்னா அப்ப நாங்கள்லாம் என்ன? எங்களுக்காகத்தான இந்த வயசிலயும் ஓடியாடிக்கிட்டிருக்காரு... அவரைப் போய் இப்பிடி நாக்கில் நரம்பில்லாமல் பேசுறாங்களே... தம்பி... நீங்கதான் ஐயாவ பொறுமையா, பொறுப்பா வெளில கொண்டு வரணும். நாளப் பின்னைக்கி கோர்ட் கேஸுன்னு வந்தாலும் சரி... நின்னு பாக்கணும்... தைரியத்தை விட்டுறப்பிடாது. தம்பிய நேர பாத்து நாலு வார்த்தை சொல்லிட்டுப் போகணும்னுதான் இவ்வளவு நேரம் இங்கணயே நின்னேன். நாளைக்கு ஜெயிலுக்குப் போய்ப் பாக்கப் போனா எனக்கும் ஒரு சத்தம் குடுங்க... இப்ப சஞ்சலப்படாம போய் உறங்குங்க தம்பி...''

ஜெயிலின் அச்சுறுத்தும் தோற்றங்களைக் கடந்து உள்ளே போனோம்... ஒவ்வொரு படியும் ஜன்னலும்... 'இன்னிக்கி லீவாச்சே... ஃபார்ம் நிரப்பிக் குடுத்துட்டு அப்புறம் வாங்க... வார்டனைப் போய்ப் பாருங்க... ஆ... அது எப்பிடி... இப்ப எப்படி... முடியாது' - என்று பொய்க் குரலில் சட்டம் பேசியது. கரன்ஸி கை மாற மாற அலிபாபா குகைக் கதவுகள் மாறி

வழங்கிய அதிசய ஆசிரியர்

மாறித் திறந்தன. மணி எட்டரையிருக்கும். அப்பா குளித்து முடித்து 'பவிச்'சென்று கம்பிகளின் மறுபக்கம் வந்து நின்றார்.

''டேய் தம்பி சுபாஷ்... பயந்துட்டியா... இவங்க ஒண்ணும் பண்ண முடியாது! என்னை என்ன, தூக்குலயா போட்டுருவான்? 'ஜெயில்ல விட'ம்பான். பிரிட்டிஷ்காரன் காலத்துல நான் பாக்காத ஜெயிலா...? காக கேட்டவன... 'ஏண்டா'ன்னு கூப்பிட்டுக் கண்டிக்கிறதுக்குக் கலெக்டருக்குக் கூட தைரியமில்லை... ஐ.ஏ.எஸ். வேற இதுல...! தம்பி... பயப்படாதே... பார்ப்போம். நீ விவரமெல்லாம் எழுதி பிரதமர், ஜனாதிபதி, கவர்னர், சி.எம். எல்லாருக்கும் என் பேர்ல தந்தி குடு... ஒரு காப்பி எடுத்துக்கிட்டு நம்ம எம்.பி. ராஜாராமைப் போய்ப் பாரு... விவரஞ் சொல்லு... தைரியமா இரு... முத்து.. நீயும் கூட இருந்து பக்குவமாப் பாத்துக்கய்யா... நான் வரட்டா... உள்ள கைதிகள்லாம் கூட்டி ஒரு மீட்டிங் ஏற்பாடு பண்ணிருக்கேன்... இங்க நிறைய பிரச்னை இருக்கு... அதெல்லாம் பாக்கணும்... ம்... வரட்டா...?''

உரத்த குரலில் முழங்கி விட்டுச் சென்றார் அப்பா. நேர்மைத் திறன் கொண்ட அவரின் நெஞ்சுரம் எனக்கு இல்லாததும் ஒரு வகையில் நல்லதோ...? சென்ட்ரியின் செருமலுக்குப் பின் மெள்ள நகர்ந்தோம்.

''**சா**ர்... சார்... ஐயா ஜெயிலுக்குள்ள சொன்னதையெல்லாம் பெரிசா எடுத்துக்கிடாதீக... அவரு சொன்னாருன்னுட்டு நீங்க பாட்டுக்குத் தந்தி கிந்தி குடுத்துட்டு இருக்காதீங்க... அவரு சொன்னாரே... எம்.பி.. ராஜாராம்... ஒரு போன் கூட பண்ணி 'என்ன'ன்னு விசாரிக்க மாட்டார்... அப்பாவ நேர பார்த்தா தேனொழுகப் பேசுவார்... அதுனால அவரு பேச்ச சீரியஸா எடுத்துக்காதீக... நம்ம நைச்சியமா நடக்கலேன்னா நமக்குத்தான் ஸார் நஷ்டம்.''

- முத்து பேசிக் கொண்டேயிருந்தான். வேளா வேளைக்கு அப்பாவுக்குச் சாப்பாடு, பிஸ்கெட் டப்பாக்கள், சென்ட்ரிகளுக்கு அஞ்சும் பத்துமாய் ரூபாய்த் தாள்கள். வக்கீல் வீட்டிற்கும் குமாஸ்தா வீட்டிற்கும் நடையாய் அலைச்சல்கள் என்று இழுத்து இழுத்து காலத் தேரைத் திங்கட் கிழமை காலை வரை நகர்த்தினேன்.

கோர்ட் வாசலில் நீதியின் ரேகையைத் தேடி அலைந்து நெளியும் ஜனக் கும்பலின் கவலை முகங்களுக்கிடையில் குமாஸ்தாவைக் கண்டுபிடிக்க நேரம் அதிகம் தேவைப்படவில்லை.

பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பரீட்சை முடிவுகள் அவ்வளவு திருப்தி யாக இல்லாததால் அதை மாற்றும் பொருட்டு நூற்றுக்கு நூற்றி இருபது போன்ற கூடுதல் மார்க்குகளை வழங்கியுள்ளனர்! இன்னொரு வேடிக்கை, பயாலஜி பேப்பரை பொலிடிகல் சயன்ஸ் எடுக்கும் பேராசிரியர் ஒருவர் திருத்தியதுடன் ஐம்பதுக்கு எண்பது மார்க் அளித்துள்ளார்!

- வி. கோவிந்தராஜன்

''தம்பி... வெள்ளனவே வந்துட்டீங்களா... வாங்க ஒரு ஓரமா உக்காருவோம். இன்னிக்கி உங்க ஆஃபீஸுக்கு லீவு சொல்லணும்லீங்களே... சொல்லிட்டீங்களா..? அப்புறம் அதுல பாருங்க.. ஜட்ஜை வீட்ல பாத்துப் பேசிட்டேன்... அவரு ரொம்ப கேட்டாரு... நான் இழுத்துப் பேசி ஆயிரம் ரூபான்னு முடிச்சுட்டேன். பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் எதுவும் ஆட்சேபணை பண்ணாம இருக்கணுமேன்னு அவரையும் போய்ப் பாத்து. ஐந்நூறு ரூபா குடுத்தாச்சு... கேஸு... வாய்தான்னு பின்னால வர்றப்ப... மத்தத பாத்துக்கலாம். நீங்க கோர்ட் ரூம்ல போய், மாசிலாமணின்னு ரைட்டர் ஒருத்தன் இருப்பான். அவனைப் பாருங்க... நம்ம வக்கீல் ஐயா பேரைச் சொல்லிட்டு அம்பது ரூபாய அவன் கைல அமுக்குங்க... அப்பத்தான் கேஸ் கட்ட மேல தூக்கி வைப்பான்... பெயில் குடுக்கலாம்னு ஒரு வரில ஜட்ஜ் ஆர்டர் குடுத்துருவாரு... காப்பிய வாங்கிகிட்டு நாலு மணிக்குள்ள ஜெயிலுக்குப் போயிருங்க... அங்க அஞ்சோ பத்தோ குடுத்தீங்கன்னாத்தான். இல்லைன்னா நாளைக்குக் காலைல வாங்கன்னு நொரனாட்டியம் பண்ணுவாங்க.. தம்பிக்குச் சொல்ல வேண்டியதில்லை.. இந்த ரெண்டு மூணு நாள்ல நெளிவு சுளிவு பழகிருப்பீங்க.. ம்... நல்லா தெம்பா இருங்க தம்பி... சாயங்காலமா நீங்க மட்டும் வக்கீல் வீட்டுக்கு வாங்க...''

- குமாஸ்தாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும், அரசாங்க சக்கரத்தின் ஒவ்வொரு நட்டிலும் நாசுக்காய் நழுவிச் செல்லும் லாவகத்தைப் புரியவைத்தது.

அப்பாவை முத்துவுடன் அனுப்பி விட்டு வக்கீலைப் பார்த்துவிட்டு வீடு வந்து சேர மணி பத்து ஆயிற்று... அப்பாவைக் காணோம்... நாலு தெரு தள்ளிக் குடியிருக்கும் அவருடைய சிநேகிதருக்கு உடம்பு சரியில்லை என்று ஆஸ்பத்திரிக்குக் கூடப் போயிருக்கிறார், என்றாள் என் மனைவி. 'மகன் சாமர்த்தியசாலி என்று சந்தோஷம் அவருக்கு. சாமர்த்தியம் மகனிடம் இல்லை. பணத்திடம்' என்பது அவருக்குத் தெரியாது. தெரியவும் கூடாது.

டைரியில் பி. எஃப்பில் எடுத்த மூவாயிரம் ரூபாய்க்கும் கணக்கு எழுதிக் கொண்டிருந்தேன். மூன்று நாட்களாய் ஸ்கூட்டருக்கு பெட்ரோல், போலீஸ் ஸ்டேஷன், வக்கீல், ஜெயில், முத்துவுக்குச் சாப்பாடு, அது, இது என்று எழுதி மாளவில்லை. கையிருப்பு ஐம்பது பைசா எனக் கணக்கு முடிந்தது.

எனக்குப் பின்னால் வந்து நின்ற என் மனைவி, நான் எழுதி முடிக்கும்வரை தன் இரு விழிகளில் ஒன்றில் ஆத்திரமும், மற்றொன்றில் பரிதாபமும் காட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். ''ஏங்க... மிஞ்சி மிஞ்சிப் போனா அந்த கலெக்டர் ஆஃபீஸ் கிளார்க் எவ்வளவு கேட்டிருப்பான்......?'' என்ற கேள்வியோடு பேசத் தொடங்கினாள்.

கலைஞர் பேட்டி



"அவர்கள் எவ்வளவு மறுத்தாலும், நான் நம்பப் போவதில்லை. தி.மு.க. போன்ற வலுவான மாநிலக் கட்சிகளை உடைக்க வேண்டும், சிதைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசுக்குக் கூர்மையான கண் உண்டு."

நிருபர் : கட்டுக்கோப்பான தொண்டர் களைக் கொண்ட கட்சி தி.மு.க. என்று சொல்வார்கள். ஒரு கட்சி ஆளும் கட்சியாக இருக்கும் சமயத்தில் பதவிகள் கிடைக்காத சிலரால் சலசலப்புகள் உருவாகும். ஆனால் தற்போது எதிர்க்கட்சியாக இருக்கும் கழகத்தில் தோன்றியிருக்கும் சலசலப்புகளுக்கு அடிப்படையான காரணம் என்ன?

கலைஞர் : கழகம் கட்டுக்கோப்பானது என்று சொல்வது பற்றி சந்தோஷம். எந்த கட்சியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். கருத்து மாறுபாடு கொண்ட வர்கள் இருக்கத்தான் செய்வார்கள். தி.மு.க. போன்ற ஜனநாயக இயக்கத்திலும் அவை உண்டே தவிர, சலசலப்புக்குக் கொள்கை மாறுபாடு காரணம் கிடையாது. கிளைக் கழகத்திலிருந்து தலைவர் பதவி வரை தேர்தல் நடத்தும் ஒரே மாநிலக் கட்சி தி.மு.க.தான். கடந்த ஆண்டு நடந்த உட்கட்சித் தேர்தல்களில் ஒவ்வொரு ஊரி லும் இரு அணிகள் போட்டியிட்டதென் னவோ உண்மை. பல ஊர்களில் வெற்றி பெற்றவர்கள் வெற்றி பெறாதவர்களை அர வணைத்தும், வெற்றி பெறாதவர்கள் வெற்றி பெற்றவர்களை அனுசரித்தும் நடந்து கொண்டுள்ளார்கள். தொண்ணூறு சதம் எல்லாம் சுமுகமாகி விட்டார்கள். ஆனால் சில இடங்களில் தேர்தலின் விளைவாக எழுந்த கசப்பு இன்னமும் மாறவில்லை. இதைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்துகின்றன.

நிருபர் : அந்த கசப்பின் விளைவாகத் தொண்டர்களிடையே மோதல்கள் உருவாகின்றனவே! சமீபத்தில் மதுரையில்...!

கலைஞர் : அங்கே, என் நினைப்பையும் தாண்டி கட்டுப்பாடு மீறப்பட்டதென்னவோ உண்மை. எதற்கெடுத்தாலும் போஸ்டர்கள் அடித்து சில விஷமிகள் கருத்து மாறுபாட்டை வெளியே காண்பித்துக் கொண்டதைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தி விட்டன. மதுரை மாநகர் மாவட்ட கழகத் தேர்தல் சுமுகமாக நடைபெற்றது. இப்போது தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கும் பொறுப்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்ட அணிக்கு ஆதரவு இல்லை.

மு.க.வில் பிளவா?



அதனால் அவர்கள் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அப்படியும் வோட்டுப் போடத் தகுதி பெற்ற 132 பேரில் 118 பேர் வோட்டுப் போட்டு, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். நான் முதலில் சொன்னது போல் அங்கே கசப்புணர்வு இன்னமும் மாறவில்லை.

திருபர் : பொன். முத்துராமலிங்கத்திற்கு உள்ள செல்வாக்கைக் குறைக்கும் விதமாகத்தான், மதுரை மாவட்டம், மதுரை நகர் மாவட்டம் என்று பிரிக்கப்பட்டதாகச் சொல்கிறார்களே?

கலைஞர் : அமைப்பு ரீதியாக மாவட்டங்களைப் பிரிப்பது முறைப்படிதான் நடக்கிறது. எல். கணேசன் தலைமையிலுள்ள சட்டதிட்டக் குழு கூடி, கோவை மாநகர் மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டம் என்று பிரிக்க சிபாரிசு செய்தது. கழகப் பொதுக் குழுவிலும் அது பற்றி விவாதிக்கப்பட்ட பிறகுதான் அப்படிச் செய்யப்பட்டது. நீண்ட காலமாக, மதுரை, கோவை மாநகரத்திலுள்ள தொண்டர்கள், தங்கள் நகரை அமைப்பு ரீதியில் தனி மாவட்டமாக மாற்ற வேண்டும் என்று கேட்டு வந்தார்கள்.

திருபர் : மத்தியப் புலனாய்வுத் துறை, மற்றும் மாநில அரசின் புலனாய்வுத் துறையினர் கட்சியைப் பிளவுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், அவர்களுக்கு ஏஜெண்டுகளாகச் சில கட்சிக்காரர்கள் இருப்பதாகவும் கூறியுள்ளீர்கள். இதுபற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்ல முடியுமா?

கலைஞர் : ஏஜெண்டுகள் யார் என்று உங்களிடம் இப்போது நான் சொல்ல முடியாது. ஆனால் ஒரு சம்பவத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். 1972-ல் கட்சியை விட்டு எம்.ஜி.ஆர். சென்றதற்குக் காரணம், மத்திய புலனாய்வுத் துறையும், வருமான வரி அதிகாரிகளும்தான் என்று பல வருடங்களாக நான் கூறிக் கொண்டிருந்தேன். நம்ப மறுத்தவர்கள் பலர். ஆனால் சமீபத்தில் ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி மோகன்தாஸ் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகத்தில், 'எம்.ஜி.ஆரைக் கட்சியை விட்டு வெளியே வரும்படி நிர்பந்தித்தவர்கள் மத்திய புலனாய்வுத் துறையினர்தான்' என்று சொல்லியுள்ளார். அது போல, இப்போதும் அவர்கள் ஆங்காங்கே உள்ள சில கட்சிக்காரர்களைப் பிடித்துக் கொண்டு கலகங்களை உருவாக்கி வருகிறார்கள். பத்திரிகைகளைப் பயன்படுத்தி, கழகத்திற்கு விரோதமான செய்திகள் வருவதற்கு ஏற்பாடு செய்பவர்களும் அவர்கள்தான். அவர்கள் யாரென்றும் எனக்குத் தெரியும். சமயம் வரும்போது புலனாய்வுத் துறைகளின் ஏஜெண்டுகளாகக் கட்சியில் செயல்படுபவர்கள் வெளியே அனுப்பப்படுவார்கள்.

திருபர் : இப்போது சலசலப்புக்குக் காரணமானவர்களும் அதே ஆட்கள்தானா?

கலைஞர் : இப்படிக் கேள்வி கேட்டு அவர்கள் யாரென்று கண்டுபிடிக்க முயலாதீர்கள்.

திருபர் : மாநில அரசின் உளவுத் துறை தி.மு.க.வைப் பிளக்கும் பணியில் இறங்கியிருப்பதாகச் சொன்னால் கூட, அரசியல் விரோதம் காரணமாக அ.தி.மு.க. அரசு இது போன்று செயல்படத் தூண்டியிருக்கும் என்று நம்பலாம். ஆனால் மத்திய அரசு, (அதுவும் இப்போது உள்ள சூழலில்) ஒரு மாநிலக் கட்சியைப் பிளக்கும் பணிக்குப் புலனாய்வுத் துறையைப் பயன்படுத்துமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

கலைஞர் : அ.தி.மு.க. தோழமை இல்லாத சூழலில், காங்கிரஸானது, தி.மு.க. - அ.தி.மு.க. ஆகிய இரண்டையும் களத்தில் சந்தித்தாக வேண்டி இருக்கிறது. குறிப்பாக தி.மு.க. பலம் பெற்று வருவதாகப் பல கருத்துக் கணிப்புகள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. ஆகவே அதன் வலுவைக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்துச் செயல்படுகிறார்கள். அவர்கள் எவ்வளவு மறுத்தாலும், நான் நம்பப் போவதில்லை. தி.மு.க. போன்ற வலுவான மாநிலக் கட்சிகளை உடைக்க வேண்டும், சிதைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசுக்குக் கூர்மையான கண் உண்டு. அதற்கு உதாரணம், பஞ்சாபில் மாநில சுயாட்சி கேட்ட அகாலி தளத்தைச் சிதைத்தது.

திருபர் : மத்திய அரசின் இதுபோன்ற

செயல்களால், மாநில ரீதியில் உள்ள திராவிட உணர்வுள்ளவர்கள் ஒன்றுபட்டு ஒரே கட்சியாகச் செயல்படும் வாய்ப்பு உள்ளதா?

கலைஞர் : உண்மையான திராவிட இயக்க உணர்வுள்ளவர்களை மத்திய அரசின் இந்தப் போக்கு ஒன்றுபடுத்தும். போலித்தனமாக திராவிட உணர்வுகளைப் பயன்படுத்தி லாபம் பெறுபவர்களை ஒன்றுபடுத்த முடியாது.

திருபர் : பத்திரிகைகள் - குறிப்பாக, பிராமணர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள், கழகத்தில் நடக்கும் சிறு நிகழ்ச்சிகளைக் கூடப் பெரிதுபடுத்திப் பிளவை உண்டாக்க நினைக்கின்றன என்று சொல்லியுள்ளீர்கள். அதே பிராமணப் பத்திரிகைகள் உங்களையோ, கழகத்தையோ பாராட்டி எழுதும் போது முரசொலியில் மறுபிரசுரம் செய்து மகிழ்கிறீர்கள். ஆனால் கழகத்தைப் பற்றி நியாயமான விமர்சனங்கள் இதே பத்திரிகைகளால் எழுதப்படும் போது ஜாதியைச் சொல்லிச் சாடுகிறீர்களே!

கலைஞர் : நியாயமான விமர்சனங்களை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடியவன் நான். ஆனால் அதிலே, சதி, வஞ்சகம், சூழ்ச்சி ஆகியவை கலந்திருந்தால் நாங்கள் விமர்சிக்க வேண்டியிருக்கிறது.

திருபர் : பாராட்டப்படும் போது ஜாதி அடிப்படையில் பத்திரிகைகளை நீங்கள் பார்ப்பதில்லையே!


கலைஞர் : பாராட்டுக்கள் முரசொலியில் மறுபிரசுரமாகும் போது, 'அவர்களே கூட பாராட்டுகிறார்கள்' என்ற தொனியில் தான் போடப்படும்.

திருபர் : தனிப்பட்ட முறையில் உங்கள் மீது பிராமணப் பத்திரிகைகளுக்கு ஆத்திரம், பொறாமை போன்றவை இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா?

கலைஞர் : தனிப்பட்ட முறையில் என் மீது எந்த பிராமணப் பத்திரிகைக்கும் ஆத்திரமோ எரிச்சலோ கிடையாது. ஆனால் இந்தக் கழகம் வளருவது, பார்ப்பனீயத்தைக் கட்டிக் காப்பவர்களுக்கும் - இரண்டாயிரம் மூன்றாயிரம் ஆண்டுகளாகக் காலூன்றியிருக்கும் சில ஆதிக்கச் சக்திகளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் கழகம் வளர்வதைத் தடுக்க நினைக்கிறார்கள்; தாக்குகிறார்கள். தலைமைப் பதவியில் நான் இருப்பதால் தாக்கப்படுகிறேன். இந்தத் தாக்குதலை மனமகிழ்ச்சியுடன் தான் ஏற்றுக் கொள்கிறேன்.

திருபர் : நாங்கள் கேட்க வந்தது என்னவென்றால் பிராமணரல்லாதோர் நடத்தும் பத்திரிகைகளும், இதே ரீதியில்தானே உங்களையும் கழகத்தையும் விமர்சிக்கின்றன!

கலைஞர் : இதற்கு ஒரே உதாரணம். ராமாயணத்தில், ராவணனுக்கு எதிரி ராமன் மட்டும்தான். ஆனால் விபீஷணன் ஏன் எதிரியானான்? அது போல்தான் இதுவும்.



"அன்பே, உனக்காக என் உயிரையே தியாகம் செய்யத் தயாராக இருக்கேன்...!"

"அய்யய்யோ, அப்படி எல்லாம் செஞ்சிடாதீங்க; அப்புறம் நீங்க என்கிட்ட வாங்கின சுண்டல் கடனை யார் திருப்பிக் கொடுக்கிறது...?"

- சீர்காழி ஜே. பலராமன்.

திருபர் : மதுரை மற்றும் தென் மாவட்டங்களுக்கு நீங்கள் சென்றால் கோபால்சாமி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கூடவே வருவார். ஆனால் சமீபத்திய உங்கள் சுற்றுப் பயணத்தில் உங்களுடன் அவர் இல்லையே!


கலைஞர் : நெல்லையில் என்னுடன் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் மனைவிக்கு உடம்பு சரியில்லை என்பதாலும், பாராளுமன்றத் தொடருக்குச் செல்ல வேண்டும் என்ற காரணத்தாலும் இடையில் செல்ல வேண்டியிருந்தது. என்னிடம் சொல்லி விட்டுத்தான் சென்றார். ஆனால் நீங்கள் (பத்திரிகைகள்) பெரிதுபடுத்துகிறீர்கள். கோபால்சாமியை விளம்பரப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு அவருக்குச் சங்கடம் கொடுக்கிறார்கள்... அவ்வளவு தான்.

திருபர் : கட்சியில் வை.கோ. போன்றவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கிறது?

கலைஞர் : நான் எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறேன். வை. கோபால்சாமி, ரகுமான்கான், ஆலடி அருணா, முரசொலி மாறன் அனைவருமே எனக்கு ஒன்றுதான். அவர்களது ஆற்றல், உழைப்பு போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறேன். பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டுகிறேன். யாருக்கும் தனிச் சலுகை கிடையாது.

திருபர் : ஆனால் தற்போது சலசலப்புக்குக் காரணமானவர்கள் பார்வையில், நீங்கள் மகன்களுக்குத் தனிச் சலுகை கொடுப்பதாகக் குற்றச்சாட்டு இருக்கிறதே!

கலைஞர் : அவர்களுக்கு என்ன சலுகை கொடுத்தேன் சொல்லுங்கள் பார்ப்போம். அழகிரியையும், ஸ்டாலினையும் மந்திரியாக்கினேனா? அவர்கள் கட்சிப் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். செய்யாதே என்று சொல்ல முடியுமா? நல்ல மெஜாரிட்டியுடன் 89-ல் ஆட்சிக்கு வந்த போது நான்



"அரசியல் ரொம்பத்தான் கெட்டுப் போச்சுங்க!"

"எப்படி சொல்றீங்க?"

"அந்தக் கட்சித் தலைவர் கலந்துக்கற விழாவின் நிகழ்ச்சி நிரல்ல முதல் நிகழ்ச்சியா 'தலைவர் காலில் விழுதல்'னு போட்டிருக்காங்களே!"

- எஸ். முகம்மது யூசுப்.

ஸ்டாலினை அமைச்சராக்க வில்லையே! நான் உங்களுக்குத் தெரிந்த உதாரணமே சொல்கிறேன். ராஜாஜியின் மகன் நரசிம்மன் எம்.பி.யாகவில்லையா! இன்றைய பிரதமர் நரசிம்மராவின் மகன் ஆந்திராவில் அமைச்சராக இல்லையா! இன்னமும் சொல்லப் போனால் என் உறவினரான தென்னரசு மதுரை வட்டாரத்தின் சார்பாக மந்திரியாவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நான் பொன். முத்துராமலிங்கத்தை அல்லவோ அமைச்சராக்கினேன்? உற்றார், உறவினர், பிள்ளை என்பதெல்லாம் கட்சி விவகாரங்களில் நான் பார்ப்பது கிடையாது.

திருபர் : மதுரை வட்டாரங்களில், கட்சிப் பணிகளில் உங்கள் மகன் அழகிரியின் பொறுப்பென்ன?

கலைஞர் : அவர் கட்சித் தொண்டர், உறுப்பினர், பேச்சாளர். கழகத்தவர்களோடு சுமுகமாகத் தொடர்பு கொண்டு கட்சிப் பணி ஆற்றிக் கொண்டு வருபவர். தலைவரது மகன் என்று அதிகாரம் செய்து கொண்டு அலைபவர் அல்ல அவர். சமீபத்தில் கூட அழகிரி பேச இருந்த ஒரு பொதுக் கூட்டத்தைக் கழக நிர்வாகத்தின் அனுமதியை முறைப்படி பெறவில்லை என்ற காரணத்தினால், பொன். முத்துராமலிங்கத்தின் அறிக்கையின் அடிப்படையில் ரத்து செய்துள்ளோம். (சிரித்துக் கொண்டே) நீங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள். அவருக்கு (அழகிரிக்கு) ஏதாவது கட்சிப் பொறுப்பு கொடுத்து விடுகிறோம்!

திருபர் : சமீப காலமாக தி.மு.க.வில் இருக்கும் அறக்கட்டளைகள் குறித்து சர்ச்சைகள் வந்து கொண்டிருக்கின்றனவே?

கலைஞர் : தி.மு.க. அறக்கட்டளை 1972-ல் துவங்கப்பட்டது. முதலில் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் நிறுவன உறுப்பினர்களாக இருந்தார்கள். நெடுஞ்செழியனும், எம்.ஜி.ஆரும் கட்சியை விட்டுச் சென்றபின், நியமன உறுப்பினராக மன்னையும் நீலநாராயணனும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதன்பின் எனக்கு ஒரு பயம் உண்டானது. நான் மட்டுமே நிறுவனராக இருப்பதால், என் காலத்துக்குப் பிறகு, என் குடும்பத்தினர் சொந்தம் கொண்டாடி விட்டால் என்ன செய்வது என்ற பயம்தான் அது. அதனால்தான் அறக்கட்டளையின் விதிகள் மாற்றப்பட்டு, யார் தலைவர், பொருளாளர், செயலாளராக இருக்கிறார்களோ அவர்கள் தங்கள் பதவிக் காலம் வரையில் அறங்காவலர்களாக இருக்க வழி செய்யப்பட்டு இருக்கிறது. இது தவிர, நான்கு பேர், தலைமைச் செயற்குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லது நியமிக்கப்பட்டவர்கள், அறக் கட்டளையில் அறங்காவலர்களாக நியமனமாக வழிசெய்திருக்கிறோம். இந்த வகையில்தான் மன்னை, நீலநாராயணன், மதுராந்தகம் ஆறுமுகம், கோவை ராமனாதன் ஆகியோர் உறுப்பினராக இருக்கிறார்கள். இது கட்சியின் சொத்தே தவிர என் குடும்பச் சொத்தல்ல! இந்த அறக்கட்டளையில் ரூபாய் செலவு செய்வது என்றால் தலைவரான நான் நினைத்தாலும் முடியாது. இந்த அறக்கட்டளையின் சார்பாகத்தான் அறிவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வளாகத்தினுள், திருமண மண்டபங்கள், கண் மருத்துவமனை போன்றவை இயங்குகின்றன. ஒரு தளம் வாடகைக்கு விட்டிருக்கிறோம்.

முரசொலி அறக்கட்டளை என்று ஒன்று துவங்கியிருக்கிறோம். என்னால் 50 வருடங்களுக்கு முன்னர் துவங்கப்பட்ட பத்திரிகை முரசொலி. தொடர்ந்து நடத்த முடியாததால், கட்சியின் சார்பாக அறக்கட்டளை தொடங்கி அதை நடத்தலாம் என்று கட்சி தீர்மானித்தது. தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் தவிர வீராச்சாமி, மாறன் ஆகியோர்தான் அதன் அறங்காவலர்கள். பத்திரிகையை அதுதான் நடத்திக் கொண்டிருக்கிறது.

சொத்துப் பாதுகாப்பு குழு என்பதாகவும் ஒன்று உள்ளது. கட்சிக்கு நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் உள்ள சொத்துக்களைப் (கட்டடங்கள், நிலங்கள்) பராமரிப்பது மற்றும் பாதுகாக்கும் பணியில் இது ஈடுபட்டிருக்கிறது. ப.உ. சண்முகம்தான் இதன் செயலாளர். தமிழ்நாடு முழுவதும் எங்கு சொத்து வாங்கினாலும் பொதுச் செயலாளர் பெயரில்தான் பதிவு செய்கிறோம். பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக் குழு இந்த அறக்கட்டளைகளின் கணக்குகளைத் தணிக்கை செய்கிறது. இது தவிர, தனியார் தணிக்கையும் உண்டு.

திருபர் : குற்றச்சாட்டு என்னவென்றால், முரசொலியின் சொத்துக்களை, புதிதாகத் துவங்கிய அறக்கட்டளை வாங்கிய போது அடிமட்ட மதிப்பு போட்டு வாங்கியதாகச் சொல்லப்படுகிறதே!

கலைஞர் : வாங்கியிருக்கிறார்களா?

(சிரிப்பு) அப்படியே எடுத்துக் கொண்டுள்ளார்கள். இதுவரை ஒரு காகம் அறக்கட்டளை தரவில்லை. யாரையாவது எழுதச் சொல்லுங்கள். கேஸ் போடத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு).

நிருபர் : அறிவாலயத்தில், மாறன் மகன் நடத்தும் டீ.வி. நிறுவனத்துக்குக் குறைந்த வாடகைக்கு இடம் விட்டிருப்பதாக!...

கலைஞர் : டீ.வி. கம்பெனி வருவதற்கு முன்னால் இருந்த நிறுவனம் சதுர அடிக்கு என்ன வாடகை அந்த இடத்துக்குக் கொடுத்ததோ அதையேதான் இப்போதும் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். யாருக்காகவும் குறைக்கவில்லை. உங்களுக்கு வேண்டுமானால் சொல்லுங்கள். அதே வாடகைக்கு இடம் தருகிறோம். (சிரிப்பு)

நிருபர் : அ.தி.மு.க.வுக்கும் - காங்கிரஸுக்கும் இப்போது உறவில்லை. இந்தச் சூழலில், தேர்தல்கள் வருமேயானால், காங்கிரஸுடன் தி.மு.க. கூட்டு சேர்வதற்கான வாய்ப்பு இருக்கிறதா? அரசியலில் நிரந்தரப் பகைவனும் கிடையாது. எதிரியும் கிடையாதே!

கலைஞர் : நாங்கள் இப்போது இருக்கும் அணியில்தான் இருப்போம். தே.மு. - இ.மு. (தேசிய முன்னணி - இடதுசாரி முன்னணி) கூட்டணியுடன்தான் இருப்போம். இந்தக் கூட்டணியுடன் இருக்க முடியாது என்ற நிலை வந்தால் கூட தனியாகத்தான் நிற்போம். காங்கிரஸுடன் சேர மாட்டோம். ஏற்கெனவே ஒரு மோசமான அநுபவம் இருக்கிறது. நிலையான ஆட்சி வேண்டுமென்பதற்காக - எமர்ஜென்ஸி கொடுமைகளையும் மறந்து - 1980ல் இந்திரா காங்கிரஸை ஆதரித்தோம். இந்திராவே சென்னைக்கு வந்து என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கழகத் தொண்டர்கள் முழு மூச்சுடன் உழைத்து பாராளுமன்றத்துக்கு 40 இடங்களில் 38 இடங்களைக் கைப்பற்றினோம். ஆனால் தொடர்ந்து வந்த சட்டமன்றத் தேர்தலில், கூட்டணியில் இருந்து கொண்டே காங்கிரஸார் எங்களை வாரி விட்டார்கள். உதாரணமாக ஆர்.வி. போன்றவர்கள் என்னைத் தோற்கடிக்க சதி வேலையில் ஈடுபட்டார்கள். ஆகவே தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்களுடன் தோழமை கொள்வதை அறவே நான் வெறுக்கிறேன்.

நிருபர் : முதல்வரின் உண்ணாவிரதம் காரணமாக, அ.தி.மு.க. வெற்றி பெற்று விடும் என்ற பயத்தில்தான் பழநி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று தி.மு.க. சொல்வதாக...

கலைஞர் : அப்படியில்லை. முன்பு ஒத்திவைத்த போது வறட்சி என்று சொன்னார்களே.. அந்தக் காரணம் இப்போது தான் மேலும் பொருந்தி வரும். வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் கடுமையான வறட்சி. பழநி தொகுதியில் வேடசந்தூர் பகுதியில் தண்ணீர் இன்றி கால் நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களும் அவதிப்படுகிறார்கள். இந்தக் காரணங்களுக்காகத்தான் ஒத்தி வைக்கச் சொன்னோம்.

நிருபர் : இந்த இடைத் தேர்தல்கள் ஒழுங்காக நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?


கலைஞர் : நடக்க விடமாட்டார்கள். சமீபத்தில் அந்தம்மா உண்ணாவிரதம் இருந்த போது தமிழ்நாடு பூராவும் நடந்த கலவரங்களைப் போலீஸ் வேடிக்கை பார்த்தது. இப்போதும் அப்படித்தான் போலீஸ் வேடிக்கை பார்க்கும். ஆனால் தி.மு.க. அதைச் சந்திக்கும்.

நிருபர் : முதல்வரின் உண்ணாவிரதத்தால் காவிரி பிரச்னை சிக்கலாகி விட்டது என்று நினைக்கிறீர்களா? அல்லது ஆக்கபூர்வமான வழியில் செல்கிறது என்று நினைக்கிறீர்களா?

கலைஞர் : உண்ணாவிரதத்தால் எதுவும் நடக்கவில்லை. உண்ணாவிர தத்தை முடிக்க ஏதாவது சாக்கு கிடைக்குமா என்று பார்த்தார்கள்! கமிட்டிகள் அமைத்ததைச் சாக்காக வைத்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள். புள்ளி விவரக் கமிட்டி என்கிறார்கள்; ஏற்கெனவே புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுத்தான் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது. கர்நாடக அரசு அமுல்படுத்தத் தயாராக இல்லாத போது, அமுல்படுத்தும் கமிட்டி எதற்கு? இந்த கமிட்டி என்ன செய்ய முடியும்? பயனில்லாத இந்த கமிட்டிகளை அமைத்து விட்டு வெற்றி விழா கொண்டாடுகிறார்களே... அது உண்மையான வெற்றியாக இருக்கும் பட்சத்தில், நரசிம்மராவுக்கு ஆதரவாக, பாராளுமன்றத்தில் வோட்டு போட்டிருக்கலாமே! ஏன் செய்ய வில்லை? இதிலிருந்தே இவர்கள் உண்ணா விரதம் வெற்றி பெறவில்லை என்பது தெளிவாகி விடுகிறதே!

பேட்டி : ப்ரியன்

படங்கள் : அன்வர்



நாகர் : ஏன் அந்த நூல் வியாபாரிக்குப் பெண் கொடுக்கத் தயங்கறீங்க?

பெண்ணின் தந்தை : அதிலே பல சிக்கல்கள் இருக்கு.....

—எஸ். நடராஜன்.

உங்கள் ஃபிக்செட் டெபாசிட்டை
உடனே திரும்பப் பெறவேண்டுமா?



இதோ உங்கள் பணம் 30 நிமிடங்களில்.

எச்சரிக்கை!

போனால் வராது - இரண்டே வார வாழ்க்கை! மிஸ்டர் பி.கே.பி. தொடர் முடிவை முன்பே சொல்லி விடுங்கள்!

ஆத்மாவுக்கு

அபொருள்

ANTIMATTER

இயற்கையில் ஏதோ ஒரு விதத்தில் எல்லாவற்றிற்கும் ஒரு எதிர் இருக்கிறது. திமுக, அதிமுக போல புரோட்டானுக்கு, அப்புரோட்டான் - எலெக்ட்ரானுக்கு பாஸிட்ரான் - எதிர்த் துகள்கள். எதிர்த்துகள்களைக் கொண்டே தனிமங்களை அமைத்தால் அதனை அபொருள் (Antimatter) என்கிறார்கள். பொருளும், அபொருளும் சேர்ந்தால் பொருள் மறைந்து சக்தி வெளிப்படுகிறது. முப்பது மில்லி கிராம் எதிர்ப் பொருள் செய்தால் போதும். அதன் எதிர் சக்தியை வைத்துக் கொண்டு சந்திரமண்டலம் வரை விண்கலம் அனுப்பலாம்.

- சுஜாதாவின் கி.பி. 2000 க்கும் அப்பால்....

யாருக்கும் தலை-கால் புரியாத,

அத்யம் - ஒ

நளினி சாஸ்திரி

ஒன்றும் புரியவில்லை. என்ன ஆனது? இது என்ன இடம்? கண்ணுக்கெட்டியவரை கருநீலம். எங்கு பார்த்தாலும் கருநீல மணல்வெளி. வேறெதுவும் தென்படவில்லை. கருநீல வானம், மேகம் கூட இல்லை.

அவன் நடந்தான். நடந்தான். சுமார் ஒருநாள் நடந்தபின் தான் அவனுக்கு உறைத்தது. அவனுக்குப் பசிக்கவில்லை. ஒருநாள் நடந்தும் அவனுக்குச் சிறிதும் கால்கள் வலிக்கவில்லை. உடலில் சோர்வில்லை.


அவனுக்குப் பயமாயிருந்தது. என்னாயிற்று? எங்கிருக்கிறான்? தூங்குகிறோமா? விழிப்பு நிலையா? ஒரு வேளை கனவா? இல்லை. கிள்ளல் புரிகிறது.

பைத்தியம் பிடித்தாற் போல சில நாட்கள் அலைந்த பின் அவனுக்கு ஒன்று புரிந்தது. அவன் உடலில் ஏதோ மாற்றம் நிகழ்ந்துள்ளது. அதன் காரணமாகப் பசிக்கவில்லை. தூக்கமில்லை. சோர்வில்லை. விஞ்ஞானத்துக்கு எதிரான விஷயமாகப் பட்டது. அடுத்த நாள் இன்னொரு உண்மை புலனாயிற்று. அவன் வெறுத்துக் கத்தினது அவனுக்குக் கேட்கவில்லை. காது கேட்கவில்லை. ஒருவேளை சப்தம் வரவில்லையோ எனச் சந்தேகம் வர, உரத்துக் கத்தினான். ம்ஹூம். சப்தம் வரவில்லை. வாய் மட்டும் அசைந்தது.

சில நாளில், இன்னொரு மாற்றம் அவனை உறையவைத்தது. சுற்றிலும் காற்றில்லை. என்னால் எப்படி சுவாசிக்க முடிகிறது? உயிருடன் இருப்பதெப்படி? நாகம் எங்கே போனது? நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். மூக்கை மூடிப் பார்த்தான். மூச்சு முட்டவில்லை. 'லப் டப்' ஒலியில்லை.

இப்போது அவனைப் பார்த்து அல்லது அவனைப் பற்றி நினைத்து அவனுக்குப் பயம் வந்தது. ஒரு ஆறுதலான விஷயம், அவனால் சிந்திக்க மட்டும் முடிந்தது.

இப்படிப் பிரபஞ்ச எல்லை நோக்கி இலக்கில்லாமல் நடந்து என்ன பயன் என்று பேசாமல் உட்கார்ந்து விட்டான். யோசி. யோசி. அந்த இடத்தில் ஏதோ மர்மம் உள்ளது. என்ன?



ஆபத்து

ஒரு வேளை கனவா?

கனவில் தான் சாத்தியம்.

எனில் கனவைக் கலைப்பது எப்படி?

உறக்கத்தில் அவனை விட்டு நீண்டு சென்ற வெள்ளியிழை இணைப்பு அறுந்து விட்டதா?

ஒரு வேளை அவன் இறந்து விட்டானா?

என்றால் இது சொர்க்கமா? நரகமா?

கடவுளே இது என்ன சோதனை?

எத்தனை நாட்கள் இப்படிப் போயின? புரியவில்லை. நாட்களா? மாதங்களா? வருடங்களா? நினைவு கூட தப்பப் பார்க்கிறது. விடக் கூடாது. நினைவை விடக் கூடாது. ஒரே துணை நினைவுதான்.

இந்தத் தனிமை நீக்க யாராவது வேண்டும். யாராவது. யாராவது வாருங்களேன். யாராவது வாருங்களேன். அவன் மனம் துணைக்காகக் கதறியது.

அவன் சிந்தித்தவாறு பார்க்கையில் அருகில் தரையில் சிறிய அசைவு தோன்றியது.

கால் பந்தளவு இருக்க ஒரு வஸ்து மண்ணைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டது. அவன் பயந்து எழுந்து நின்றான்.

இப்போது அது உருண்டு அவனை நோக்கி நகர்ந்தது. அவன் பயந்து ஓடலானான். திரும்பிப் பார்க்க அதுவும் வேகமாக உருண்டு வந்தது. அவன் மெதுவானான். அதுவும் மெதுவாயிற்று.

அவன் நின்றான். அதுவும் நின்றது.

அவன் இயக்கத்துடன் அதன் இயக்கமும் பூட்டிக் கோர்த்துக் கொண்டது போலிருந்தது. அதனிடம் இருந்து தப்பிப்பது இனி இயலாத காரியம் தான். முதலில் அது என்ன என்றே தெரியவில்லை. ஒரு வேளை விழுங்கி விடுமோ என பயம் வந்தது.

எப்படியோ அந்த இடத்தில் மாட்டியாகி விட்டது. தப்பிக்கவும் வழி தெரியவில்லை. பைத்தியம் மாதிரி அலைவதைவிட ஓடி ஒளிவதை விட அந்த ஜந்துவிடம் அகப்படு

வதே மேலாகப் பட்டது. செய்வதறியாது இம்சைப்படுவதை விட அதனிடம் மாட்டி உயிர் விடலாம்.

முடிவுக்கு வந்த அவன் அந்த உருண்டை உருவத்தை நோக்கி நடந்தான். அது சற்று அசைந்தது. நின்றது. அவனும் நின்றான். அது அவனைப் பார்ப்பது போலத் தோன்றியது. சற்று நேரத்தில் பெரிதாகி, பக்க வாட்டில் கைகள் நீண்டன. திடீரென்று கால்கள் முளைத்தாற் போல உயர்ந்தது. பார்ப்பதற்கு ஏறத்தாழ மனித உருவம். ஆனால் கண், காது இல்லை. மாவு பொம்மை மாதிரி.

ஒளிரும் மாவு பொம்மை.

உயிருள்ள மாவு பொம்மை.

அதன் மனத்தில் சினேக எண்ணம் வந்தது.

தைரியம் வந்தது.

அவனும் அதனருகில் சென்று கை நீட்டினான்.

இருவர் கைகளும் சந்தித்த போது,
கண்களைக் குருடாக்கும்,
பளீரென்ற மின்னல்.
பிரபஞ்ச மின்னல்.

கண்விழித்த போது அவன் ஒரு அறைக்குள் இருந்தான். சுத்தமான நேர்த்தியான அறை. அறைக்குள் அவனைத் தவிர வேறெதுவுமில்லை. நான்கு சுவர்களும் தங்கமாய் மின்னின.

சுவரைத் தடவிப் பார்த்தான்; தேடிப் பார்த்தான். ஆச்சரியம், கதவே இல்லை. நான்கு சுவர்கள் கூட இல்லை. உருளை வடிவ அறை. உயரமான அறை.

ம்ஹூம்.

வெளியேற வழியில்லை.

என்ன நடந்ததென்று யோசித்துப் பார்த்தான். மின்னல் நினைவிற்கு வந்தது.

"ஸார், பிரமாதமா நடிப்பேன்; உங்க சினிமால ஒரு சான்ஸ் குடுத்துப் பாருங்க, ப்ளீஸ்!"

"அப்படியா! சரி, நாங்க உனக்கு ரேட் பேசிக் கொடுத்த 50,000 ரூபாய் - செக் திரும்பிடுச்சு! அப்ப... உன் முக பாவம் எப்படி இருக்கும், நடிச்சுக் காண்பி, பார்க்கலம்...!"

- பெ. கலாசாமி.



பேசாமல் அந்த உருவத்திடம் செல்லாமல் இருந்திருக்கலாம். சிறை அறை வராமலிருந்திருக்கலாம். இதற்கு, தரை வெளியே பரவாயில்லை. காலார மணல் பரப்பில் நடந்து கொண்டேயிருக்கலாம். சுதந்திர உலாவல். இப்போது வசமாய்ச் சிறையில் மாட்டிக் கொண்டாயிற்று.

தரையில் அமர்ந்தவன், ஒரு கதவு இருந்தால் தப்பிக்க முயற்சியாவது செய்யலாமே என்று சிந்திக்கலானான்.

அவன் கதவைப் பற்றி நினைத்ததுதான் தாமதம். சுவரில் கதவு போல் தோன்றியது. கடவுளே! அது கதவாக இருக்கக் கூடாதா என்று மேலும் நினைத்தவாறு அருகில் சென்று பார்க்க -

என்ன ஆச்சரியம், அது கதவேதான்!

நினைத்தவுடன் கதவு தோன்றிய மாயம் தான் என்ன!

இது மாயா ஜால உலகமா?

ஒன்று மட்டும் புலனாயிற்று.

எதை நினைக்கிறோமோ, அது நடக்கிறது.

இங்கு மனசக்தியை மட்டுமே பிரயோகிக்க முடிகிறது.

நினைவின் மூலம் எதையும் சாதிக்கலாமோ?

கதவைத் திறக்க எண்ண -

கதவு திறந்து கொண்டது.

வெளியே வந்தான். மெகா ஹாலாக இருந்தது. ஆங்காங்கே இதைப் போன்றே நூற்றுக்கணக்கில் உருளை அறைகள். கதவில்லா அறைகள். அவன் அறைகள் தாண்டி நடந்தான்.

ஏறத்தாழ ஹாலின் நடுவில் ஒரு வெளிச்சக் கீற்று தரையில் கிளம்பி கூரைக்கு நீண்டிருந்தது. மின்னல் கீற்று அதனருகில் நெருங்க முடியாதபடி சுற்றிலும் ஆளுயரத்துக்கு தீப்பிழம்பாய்த் தெரிந்தது வேலி. எரிந்தது வேலி.

அருகே செல்ல பயம் வந்தது. தீ நாக்குகள் விழுங்கக் காத்திருந்தன. அழைப்பது போல ஆடின. ஆளற்ற இந்த இடத்தில் மாட்டிக் கொண்டாயிற்று. இனி என்ன நடந்தால்தான் என்ன என்ற தைரியம் வந்தது.

அக்னியை அணைத்துக் கொண்டால் என்ன?

வழியற்று அலைவதை விட அக்னிப் பிரவேசம் அர்த்தமுள்ளதாகப் பட்டது. தீ நோக்கி நகர்ந்தான். தீப்பிழம்பை நெருங்க, நெருங்க கொஞ்சம் கூடச் சுடவில்லை.

மாயத்தீயா?

இல்லை! இந்த உலகில்தான் விஞ்ஞானம் தலைகீழாகிறதே!

தீ சுடாத உலகம்!

துணிந்து நெருங்கித் தீ கடந்தான்.

ஆச்சரியம்!

சிறிதும் சுடவில்லை. முழுதும் பத்திரமாய் இருந்தான். மீண்டும் கனவோ என்ற



ரயிலே! ரயிலே!

நெடுந்தூரம் செல்லும் ரயில்களில் நடுநிசியில் இறங்க வேண்டுமானால் சரியான நேரம் கண்டு பிடிப்பதற்குக் கால அட்டவணைகளைப் புரட்ட வேண்டியிருக்கிறது. இந்த சிரமத்தைத் தவிர்க்க நெடுந்தூர ரயில்களிலே ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும், ரயில் புறப்படும் நேரம், நடுநிசியில் நிற்கும் நேரங்கள், போய்ச் சேரும் நேரம் எல்லாவற்றையும் ஏன் ஒரு போர்டில் நிரந்தரமாக எழுதிவைக்கக் கூடாது?

- ஜீ. நீலகண்டன்.

நினைவு வந்தது. ம்ஹூம். தொடர்ந்து நடந்தான். மின்னலில் எல்லா மர்மமும் இருப்பதாக மனம் சொன்னது. எதிர் பாராமல் முட்டிக் கொண்டு கீழே விழுந்தான். மின்னல் கீற்றை நெருங்க விடாமல் திடீரென்று ஏதோ ஒன்று தடுத்தது. ஆனால் எதிரில் ஏதுமில்லை. ஆனால் அவனால் தொடர்ந்து முன்னேற முடியவில்லை.

கண்ணில் புலப்படாத தடுப்புச் சுவர். செய்வதறியாது திகைத்துத் திரும்பிய அவன் அதிர்ந்தான். அதே உருண்டை வடிவ ஜந்து அவனை நோக்கி உருண்டு வந்தது. அவன் இப்போது தைரியமாக நின்றான்.

அருகில் வந்த ஜந்து, நிறங்கள் மாறி மாறி அவனுக்கு வரவேற்பு சொன்னது. இல்லை, சொன்னதாக அவனுக்குத் தோன்றியது. அவனறியாமல் அவனும் வணக்கம் சொன்னான். இல்லை நினைத்தான்.

அவன் நினைப்பது அந்த உருவத்துக்கும், அந்த உருவம் நினைப்பது அவனுக்கும் புரிய ஆரம்பித்தது. நினைவுப் பேச்சு. எண்ண உரையாடல். டெலிபதி பற்றி அவனுக்கு நினைவு ஓடிற்று.

''வாழ்வளித்தவனே வருக'' நினைத்தது.

''ஒன்றும் புரியவில்லை. எங்கிருக்கிறேன்?'' நினைத்தான்.

''ஜூலாவில் இருக்கிறாய்'' நினைத்தது.

''ஜூலா?'' கேள்வி நினைத்தான்.

''ஜூலா ஓர் அருவ உலகம்.''

''நான் எப்படி இங்கு வந்தேன்?''

''அதிர்வு இடப்பெயர்ச்சி.''

''என்னைக் கவர்ந்து வரக் காரணம்?''

''வாழ்வளிக்க வந்தவனே கேள். ஜூலா உலகில் ஆத்மாக்கள் மட்டுமே உண்டு. நீ நினைப்பது சரி. உங்கள் உலகில் உயிர் என்று சொல்லும் அது இங்கே ஆத்மா. உங்கள் விஞ்ஞானவிதிகள் இங்கு பொய்த்துப் போகும். ஒரு கறுப்புத் துவார ஊஞ்சலில் ஜூலாவின் ஆத்மாக்களை இழந்து விட்டோம். மீண்டும் ஆத்மா தேடிப் பல உலகங்கள் அலைந்தோம். அங்கிருக்கும் உயிர்களைப் பரிசோதனைக்குக் கவர்ந்து வந்தோம். அதோ பார். நூற்றுக் கணக்கான அறைகளில் பல உலக உயிர்கள்.''

இருவரும் ஒவ்வொரு அறையாகச் சென்றார்கள். அறை திறப்பதாக அவன் நினைத்துக் கொள்ள கதவு விரிந்தது. ஓர் அறையில் ஓரடி உயரக் குரங்கு மனிதன். அடுத்த அறையில் தலையில் கொம்புடன் தங்க மனிதன். பிறிதொரு அறையில் ஒற்றைக் கண்ணுடன் ஒருகால் மனிதன் - கையில்லாமல். இன்னொரு அறையில் ரோபோ மாதிரியாக இயந்திர மனிதன். மற்றும் பறவை உடல் மனிதன். மிருக மனிதன். எல்லாரும் ஒரு மூலையில் இறந்தவர் போலக் கிடந்தார்கள்.

''எங்கள் உலகுக்கு மனோசக்திதான் தேவை. உடல் சக்தி வேண்டாம். கவர்ந்து வந்த உயிர்கள் எல்லாம் மனோசக்தி இல்லாதவை. எனவே ஜூலாவில் அவற்றால் இயங்க முடியவில்லை. எங்கள் விஞ்ஞானம் அப்படி. ஆனால், பூமியில் இருந்து வந்த நீ மனத்தில் நினைப்பது இங்கு நடக்கிறது. உன்னால்தான் மன சக்தியைப் பிரயோகிக்க முடிகிறது. அதுதான் எங்களுக்கு வேண்டும். உன் மனோ சக்தி வளர்ந்தால் காலத்தை வளைக்கலாம். பிரபஞ்சத்தை ஆளலாம்.''

''நான் திரும்ப பூமி செல்ல முடியாதா?''

''முடியாது. இனி இதுவே உன் உலகம். கொஞ்ச நாள் சோதனை முடிந்தால் மேலும் பூமியின் ஆத்மாக்களை அதாவது உயிர்களை இங்கு வரவழைப்போம். புது உலகு படைப்போம்.''

''ஹால் நடுவே அது என்ன மின்னல் கீற்று?''

''அதுதான் ஜூலாவின் சக்தி ஊற்று. உங்களுக்குச் சூரியன் சக்தி தருவது போல் ஆத்மாக்களின் மனோ சக்தியை அதிகரிக்கும் சஞ்சீவினி. பரமாத்மா!''

அவன் சிந்தனையில் மூழ்கினான்.

''ஹஹ்ஹா'' என்று அந்த உருவம் மீண்டும் உருண்டையாகி இங்குமங்கும் உருண்டது.

''ஏன் சிரிக்கிறாய்?'' அவன் பயத்துடன் கேட்க நினைத்தான்.

''அற்ப மனிதனே! நீ நினைப்பது போல பரமாத்மாவை நெருங்கி மனோ சக்தி பெற்று ஜூலாவிலிருந்து பூமிக்குத் தப்புவது நடக்காத காரியம். இனி, இது - இதுதான் உன் உலகம்.''

அது பயமுறுத்துவதுபோல வேகவேகமாய் நிறம் மாறியது.

அவன் இப்போது இறந்தது போல் உணர்ந்தான்.

(தொடரும்)



உதையாளர் அவர்களுக்கு,

உங்களுக்குத் தினமும் காலையில் ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை வேறு வேலை எதுவும் இல்லையா? உங்கள் பழைய ஸ்கூட்டரை ஓயாமல் உதைத்துக் கொண்டே இருக்கிறீர்களே? அக்கம் பக்கத்தில் படிப்பவர்களுக்கு எவ்வளவு தொந்தரவு என்று ஒருநாளாவது நினைத்துப் பார்த்ததுண்டா? ஸ்கூட்டர் ஓட்டக் கற்றுக் கொள்ள மைதானத்துக்குப் போவது போல் நீங்கள் ஏன் அதைக் கிளப்புவதற்கும் தினமும் ஒரு மைதானத்துக்குக் கொண்டு போகக் கூடாது? உங்கள் பாலிஷ் தொப்பையாவது குறையும்.

– உங்கள் எதிர் பில்டிங்கில் குடியிருந்து கொண்டு படிக்க முடியாமல் தவிப்பவள்.



கேள்வித் திலகத்துக்கு,

நீங்கள் எழுதியிருந்தபடி தினமும் நான் காலையில் ஸ்கூட்டரை உதைப்பது என்னவோ சரிதான். ஆனால் நீங்கள் சொல்லுவது போல் ஒரு மணி நேரம் அல்ல. சரியாக நாற்பத்தைந்து நிமிடங்கள்தான். என்ன செய்வது, கொஞ்சம் பழைய மாடல் வண்டி. ஆனால் மைதானத்துக்குக் கொண்டு போய் உதைப்பது கொஞ்சம் ஓவர். தொப்பை குறைய ஜாகிங் வேண்டுமானால் போகிறேன்; நீங்களும் நெஞ்சத்தைக் கிள்ளாதே சுகாசினி மாதிரி கூடவே ஜாகிங் வருவதானால்...

– என் பெயர் உதையாளர் அல்ல, கல்யாணம் (ஆனால் இன்னும் கல்யாணம் ஆகவில்லை)

பி.கு: எதிர் பில்டிங்கில் ஏகப்பட்ட ஃப்ளாட்கள் இருக்கின்றனவே? நீங்கள் யார் என்பதை நாளைக்கு ஜாகிங் வரும் போது சொல்லுங்கள்.



கல்யாணம் ஆகாத கல்யாணத்துக்கு,

நீங்கள் மைதானத்துக்குப் போவீர்களோ மாட்டீர்களோ எனக்குத் தெரியாது. தயவு செய்து உங்கள் ஸ்கூட்டரை இங்கே கிளப்ப முயற்சி செய்யாதீர்கள். தவறிப் போய் அது கிளம்பினால் எங்கள் ஃப்ளாட் முழுவதும் ஆடுகிறது. சைலன்ஸர் என்ற உறுப்பே உங்கள் வண்டியில் கிடையாதா? உங்கள் ஸ்கூட்டர் தான் மோசம் என்று நினைத்தேன். உங்கள் கடிகாரமும் அப்படியா? ஒரு மணி நேரத்தை முக்கால் மணியாகக் காட்டுகிறதே? ஆனால் உங்கள் மூளை கொஞ்சம் வேலை செய்கிறது. பொது லெட்டர் பாக்ஸில் கடிதத்தைப் போட்டதால் என்னால் படிக்க முடிந்தது.

– தேர்வு நெருங்கியும் படிக்க முடியாத பெண்.

பி.கு: நான் யார் என்பது அவசியம் இல்லை. என் கஷ்டம்தான் முக்கியம்.



படிக்க முடியாத பெண்ணுக்கு,

தினமும் அதிகாலையில் எழுந்து படித்தால் நன்றாகப் புரியும் என்று என் அம்மா சொல்லுவார். நீங்கள் படிக்கும் நேரத்தை மாற்றிக் கொள்வது நல்லது. வேண்டுமானால் நானே கூட உங்களுக்குச் சொல்லித் தருவேன். நான் கணக்கில் புலி. காதலில் எலி. அதனால்தான் நீங்கள் யார் என்று இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

– கல்யாணம்.

பி.கு: நான் ஸ்கூட்டரை விற்று விடலாம் என்று நினைக்கிறேன். உங்களுக்குத் தெரிந்தவர் யாராவது இருந்தால் சொல்லுங்கள்.




கணக்குப் புலி கல்யாணத்துக்கு,

நீங்கள் இப்போதாவது உங்களுடைய ஸ்கூட்டரை விற்க நினைக்கிறீர்களே, அதற்கு நன்றி. எனக்குத் தெரிந்தவர் ஒருவரிடம் கேட்டதற்கு இரண்டு கிலோ பேரீச்சம்பழம் தருகிறேன் என்று சொல்கிறார். அதுவும் இந்த மாதம் ஒரு கிலோ, அடுத்த மாதம் ஒரு கிலோ என்று தவணை முறையில். உங்களுக்குச் சரியென்றால் அவர் மனம் மாறுவதற்குள் விற்று விடலாம். ஆசாமி கொஞ்சம் ஏமாந்தவர் போல் தோன்றுகிறது. நான் படிக்கும் நேரத்தை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் ஸ்கூட்டர் உதைக்கும் நேரத்தில் நான் பாட்டுப் பாடி பிராக்டீஸ் செய்ய வேண்டி இருக்குமே. அதற்கு என்ன செய்வது?

– ப. முடியாத பெண்.

பி.கு: நீங்கள் கணக்கில் புலியானால் நான் அதில் சிறுத்தை. எனக்கு உங்கள் ட்யூஷன் வேண்டாம்.


கீதா சஞ்சீவி



கணக்குச் சிறுத்தைக்கு,

நேற்று மாலை நான் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது ஒரு பெண்ணின் கழுத்துச் சங்கிலியை ஒரு ஸ்கூட்டர் திருடன் பிடித்து இழுத்தான். உடனே ஒரு ஓட்டம் ஓடி அவனை வண்டியுடன் கீழே தள்ளிப் பிடித்தேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. என்னால் எப்படி அவ்வளவு வேகமாக ஓட முடிந்தது என்று. அப்புறம்தான் நினைவுக்கு வந்தது. தினமும் ஒரு மணி நேரம் - ஸாரி - முக்கால் மணி நேரம் ஸ்கூட்டரை உதைத்து என் கால்களுக்கு நல்ல பலம் வந்திருக்கிறது. உடனே முடிவு செய்து விட்டேன். என்னுடைய வண்டியை யாருக்கும் விற்கப் போவதில்லை. எந்த ஏமாந்த பேர்ச்சம்பழக்காரருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டியதும் இல்லை.

- உங்கள் முகம் தெரியாத கல்யாணம்.




மிஸ்டர் கல்யாணத்துக்கு,

நீங்கள் உங்கள் வண்டியை ஒரேயடியாகப் புகழ வேண்டாம். நீங்கள் திருடனைப் பிடித்ததற்கு வேறு சில காரணங்களும் இருக்கும். ஒன்று அந்தப் பெண் அழகாக இருந்திருக்க வேண்டும். அல்லது திருடனுடைய ஸ்கூட்டர் உங்களுடையதை விட மோசமாக இருந்திருக்க வேண்டும். நீங்கள் உங்கள் வண்டியைப் போகாமல் அவனுக்கே விற்று விடுங்கள். ஏனென்றால் பேர்ச்சம்பழக்காரர் ஒன்றரை கிலோதான் தருவாராம்.

- தேர்வு முடிந்து விட்ட நிம்மதியில் இருக்கும் பெண்.

பி.கு : ஆமாம், அந்தப் பெண் உங்களுக்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லையா?





முகமறியாத பெண்ணுக்கு,

நீங்கள் சொன்னது போல் அந்தப் பெண் அழகாகத்தான் இருந்தாள். ஆனால் 'கடிதம் மூலம் உங்களிடம் மனத்தைக் கொடுத்ததால் நான் அவ ளிடம் பேச முயற்சி செய்யவே இல்லை. அதனால்தான் வருந்தி வருந்தி அவளுடைய அப்பா - அந்தப் பெண்ணின் கூடவே நடந்து வந்து கொண் டிருந்தவர் - அழைத்தும் அவருடைய வீட்டுக்குக் கூட நான் நேற்று போக வில்லை.

– கல்யாணம் ஆகாத கல்யாணம்.



கல்யாணம் ஆகாத கல்யாணத்துக்கு,

நீங்கள் நேற்று மாலை எங்கள் வீட்டுக்கு வராதது எனக்கும் அப்பா வுக்கும் மிகவும் ஏமாற்றமாகத்தான் இருந்தது. முடிந்த போது வீட்டுக்கு வாருங்கள்.

– உஷா

கடிதம் படித்த மூன்றாவது நிமிடம் கல்யாணம் உஷாவின் வீட்டில் இருந்தான்.

தேவராஜன் தயாரிக்கும் விக்கெட்டுகள்!

ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து கபில்தேவ் ஆரம்பித்து வைக்க, அஸார், வடேகர், என்று எல்லா ஆட்டக் காரர்களும் நிதி உதவ முன்வர, தேவராஜ னுக்குப் பளபளவென்று வெள்ளி நிறத்தில் ஒரு 'டிவிஎஸ் சாம்ப்' வாங்கிப் பரிசளித் திருக்கிறார்கள். சாவியை அசாருதீன் வழங் கிய போது, கபில்தேவ் தேவராஜனிடம், "ஹாப்பிதானே தேவராஜன்? ஹாப்பி?" என்று இரண்டு மூன்று முறை கேட்டார்.

தேவராஜனிடம் இந்தியக் கிரிக்கெட் குழுவினர் வெகு சகஜமாகப் பழகுகிறார் கள். அவர்களிடம் தேவராஜனும் சரளமாக இந்தியில் வெளுத்து வாங்குகிறார்.

இருபத்தேழு வருடங்களாக, சேப் பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில், கிரௌண்ட்ஸ்மேன் ஆக இருந்து வருகிறார் தேவராஜன்.

'பிட்ச்' தயார் செய்வதில் தேவராஜ னுக்கு நிறையவே அனுபவம் உண்டு.

"எப்படி போலர் பிட்ச், பாட்ஸ்மென் பிட்ச் என்று தயார் பண்ணுகிறீர்கள், தேவ ராஜன்?" என்று கேட்டோம்.

"லைட் ரோலர் உபயோகித்து மிருது வான 'பிட்ச்' தயாரிப்போம். ஸ்பின் போலிங்குக்கு வசதியாக இருக்கும். ஹெவி ரோலர் உபயோகித்தால் பிட்ச் கடினமாய் இருக்கும். கருங்கல் மாதிரி இறுகி இருக்கும். ஆனால் போலிங் போட்டால் சொஸ்பீடு இருக்கும்... போதுமான தண்ணி விட்டு, அழுத்திப் பார்க்கணும். அப்போ தோராய மாத் தெரியும்.

"பிட்ச் தயார் பண்ணும் போது ஆக்ரா புல் இல்லேன்னா ஆஸ்திரேலியன் புல் வளர்ப்போம். நல்லா வளர்ந்தும் 'லான் மௌவர்' போட்டு வெட்டிடுவோம். பந்து அடிக்கு அறுபத்தாறு அடி இருக்கும்... அங்கங்க ஹோல் போட்டு, களிமண்ணை அரைத்து 'க்ளே வாஷ்' பண்ணிடுவோம். அப்புறம் புத்து மண் போட்டு, வெடிப்பை எல்லாம் மூடிடுவோம். மேலே தண்ணி ஊத்துவோம். அப்புறம் ரோலர் ஓட்டு வோம். முதல்ல லைட் ரோலர். அப்புறம் ஹெவி...

"ஸ்பின் ஆகாம இருந்தா பேட்டிங் விக்கெட்தான். பந்து டர்ன் ஆகாது... பன்னண்டு வயசிலேருந்து, இங்கதானே இருக்கேன். எல்லாம் 'ஹெட்மாஸ்டர்' நடேசன்தான் எனக்குக் கத்துக் குடுத்தார். அவர்தான் எனக்குக் குரு! இப்போ கிரௌண்ட் சூப்பர்வைசர் பார்த்தசாரதி, அண்ணாமலை ரெண்டு பேரும் சொல்றபடி செஞ்சுகிட்டிருக்கேன்!" என்றார் தேவ ராஜன்.

– சித்தார்த்

புகைப்படம் : கோபிநாத்

* தேவராஜன்





சக்கரவர்த்தித் திருமகன்

49. மாரீச மான்

மாரீசன் ராவணனைப் பார்த்துச் சொன்னான் :

''ராக்ஷச மன்னனே! நீ சொன்னதையெல்லாம் கேட்டேன். உன் பேச்சைக் கேட்டு எனக்கு எல்லையற்ற துக்கம் உண்டாகிறது. யோசனை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும் போது கேட்பதற்கு இனிமையான வார்த்தைகளைப் பேசுவது சுலபம். ஆனால் பிரியப்படாத ஹிதத்தைக் கண்டிப்பாகச் சொல்லுவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள்; சொன்னாலும் யாரும் கேட்பார் இல்லை. எப்படியாயினும் உனக்கு நன்மையைச் சொல்ல விரும்புகிறேன். இனிப்பாகப் பேசிவிட்டு உன்னைத் திருப்தி செய்து விட்டு, உன்னை அபாயத்தில் தள்ளிக் கெடுத்து விடுவது எனக்கு இஷ்டமில்லை.

''ராமனைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறவர்கள் உண்மையைச் சொல்லவில்லை. அறியாதவர்களுடைய பேச்சைக் கேட்டு ஏமாந்து போகாதே! ராமன் மகா வீரன். உத்தம குணங்கள்வாய்ந்தவன். அவனுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டு குலமும் லங்காபுரியும் அழிந்துபோவதற்கு வழி தேடாதே. சீதை உன்னை நாசம் செய்வதற்காகவே அவதரித்தாளோ என்னமோ! உன்னை அரசனாகக் கொண்ட அரக்கர் குலமும் லங்காபுரியும் சீக்கிரத்தில் ராமனால் நாசம் செய்யப்படும். உலகத்திலுள்ள ராக்ஷச குலமே நிர்மூலமாவதற்கு வழி தேடுகிறாய்! யார் உனக்கு இந்த எண்ணத்தைத் தூண்டியது? பெரும் விபத்துக்கு உன்னையும் உன் ராஜ்யத்தையும் உன் குலத்தாரையும் ஆளாக்கவே இந்தக் கெட்ட உபதேசம் யாரோ செய்திருக்கிறார்கள்.

''ராமனுடைய தந்தை அவனிடம் குற்றம் கண்டு அவனைக் காட்டுக்குத் துரத்தவில்லை. அவனைப் பற்றி நீ சொன்னதெல்லாம் தவறு. அரசன் தன் மனைவி கைகேயிக்குக் கொடுத்திருந்த வாக்கை நிறைவேற்றித் தருவதற்காக ராமன் தானாக வனம் சென்றான். தந்தையின் சத்தியத்தைக் காப்பதற்காக ராஜ்யம், போகம் எல்லாவற்றையும் தானாகவே விட்டு விட்டு தண்டகாரண்யம் சென்றான். சிற்றின்பக்காரன், மோசக்காரன் என்றெல்லாம் உனக்கு யார் சொன்னது? சுத்தப் பொய். ராமன் தருமமே உருவெடுத்த புருஷன். அற வழியில் பராக்கிரமம் செலுத்துகிறவன். தேவர்களுடைய உலகத்தில் இந்திரனைப் போல் இந்த உலகத்து மக்களில் ராமன் முதன்மையிடம் பெற்ற வீரன். அவன் மனைவியை நீ ஆசைப்படலாமா? இது நடக்கும் காரியமா? அவள் உன் வசப்படுவாளா? சூரியனை ஏமாற்றிச் சூரியனுடைய ஒளியைத் திருட முடியுமா? ஜனக புத்திரி சீதையின் தேஜஸை நீ தீண்ட முடியுமா? எரிந்து போவாய்! ராமனுடைய பாணங்களுக்கு இரையாகாதே. அவனை உனக்கு ஒரு யமனாகச் செய்து கொள்ளாதே! அவனால் காக்கப்படும் இந்த நெருப்பைத் தீண்டப் போகாதே. உன் சர்வ நாசத்துக்கு வழி தேடிக் கொள்ளாதே.

''பூர்ணமாக யோசிக்காமல் ஒரு காரியத்தில் பிரவேசிக்கலாகாது. ராமனுடன் யுத்தம் செய்து நீ வெற்றி பெற மாட்டாய். அரக்கர்களின் அரசனே! நான் சொன்னதைப் புறக்கணிக்காதே. முன்னாள் நான் தேக பலங் கொண்ட செருக்கினால் ரிஷிகளைக் கொன்று தின்று அவர்களுடைய விரதங்களையும் வேள்விகளையும் அழித்து வந்தேன் அல்லவா? அந்தக் காலத்தில் விகவாமித்திர முனிவர் செய்த வேள்வியைக் கெடுக்கப் போனேன். இந்த ராமன் அந்த நாளில் சிறுவனாக இருந்தவனை, விகவாமித்திர முனிவர் தசரதனைக் கேட்

ராஜாஜி



டுத் தன் வேள்வியைக் காக்க அழைத்து வந்திருந்தார். அந்த முனிவருக்கு இவனுடைய சௌரியம் அப்போதே தெரிந்திருந்தது. நான் வேள்வித் தீயை அழிக்கச் சென்றேன். இந்த பாலன் தன் வில்லை வளைத்துச் செலுத்திய பாணமானது என்னைச் சமுத்திரக் கரையில் கொண்டு போய்த் தள்ளி, வெகு நேரம் பிரக்ஞை இழந்து கிடந்தேன்.

''இவனுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே. செல்வமும் சிற்றின்பங்களும் அடைந்து சுகமாக இருக்கும் உன் அரக்கர் குலத்தின் நாசத்தைத் தருவித்துக் கொள்ளாதே. சீதையை அடையப் போய் அழகும் செல்வமும் நிறைந்திருக்கும் உன் நகரத்தை வீணாகப் பாழாக்கி மரணம் அடையாதே. நீ அடையப் போகும் நாசம் இப்போதே என் மனக் கண் முன் நிற்கிறது. எரியும் லங்கையைப் பார்க்கிறேன். பெரும் பாவத்தில் இறங்கப் பார்க்கிறாய், வேண்டாம். உன்னுடைய கோபத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதாயின் ராமனுடன் நேராக யுத்தம் செய். அக்கிரம மோசத்தில் என்னை இழுக்காதே. உன் மனைவிகளுடன் சுகமாக இரு. நூற்றுக் கணக்காக வைத்திருக்கிறாயே, அது போதாதா? உன் பந்து மித்திரர்கள் அனைவருக்கும் விநாசம் தருவித்துக் கொடுத்து நீயும் அழிந்து போவதற்கு வழி தேடாதே! யமனை அழைக்காதே!''

இவ்வாறு ராவணனுடைய நன்மையைக் கருதி மாரீசன் வெகு நேரம் பேசினான். அது ராவணனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. காமத்தால் தூண்டப்பட்டவனுக்கு நல்ல யோசனை சொல்லி என்ன பயன்? நோயாளி மருந்தை வேண்டாம் என்பது போல் ஒரே பிடிவாதமாக ராவணன், ''நீ சொல்லுவது சரியல்ல, நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்'' என்று மாரீசனுடைய புத்திமதியைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''அரசன் ஒருவனிடத்தில் போய் இன்னது செய்யலாமா, வேண்டாமா என்று யோசனை கேட்டால் அதைப் பற்றி அவன், லாபாலாபம் ஆராய்ந்து சொல்லலாம். ஆனால் உன்னிடம் நான் யோசனை கேட்க வரவில்லை. 'இதைச் செய்யத் தீர்மானித்தேன். இதற்கு நீ இந்த உதவி செய்ய வேண்டும்' என்று அரசன் கேட்கும்போது அரசனிடம் நடந்து கொள்ள வேண்டிய மரியாதையை மறந்து, 'நீ செய்யப் போவது தவறு' என்று சொல்லுகிறாய். நான் இந்த விஷயத்தில் முற்றிலும் ஆலோசித்து முடிவுக்கு வந்து விட்டேன். இந்த மானிடப் பதருடன் நான் யுத்தம் செய்யலாகாது. ஊரிலிருந்து துரத்தப்பட்டவன், அதமன். ஒரு ஸ்திரீயின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டு ராஜ்ய பதவியை இழந்த முட்டாள். இவனோடு நான் சமான எதிரியாக நின்று போர் செய்வேனா? அது முடியாது. இத்தகைய ஆளுக்குச் சரியான தண்டனை அவன் மனைவியைத் தூக்கிப் போய் அவனை அவமானப்படுத்துவதே. இது நான் தீர்மானித்து விட்ட சங்கதி. அதைப்பற்றி உன்னைக் கேட்கவில்லை. நான் சொல்லுவதை நீ செய்ய வேண்டும். நீ ஒரு விசித்திர மாய மான் வடிவம் எடுத்துக் கொண்டு சீதையின் கண்ணைக் கவர்ந்து இழுக்க வேண்டும். இதைத்தான் நான் கேட்கிறேன். மானைப் பிடிக்க சீதை ராமனை அனுப்புவாள். நீ ராமனைத் தூரமாக இழுத்துச் சென்று 'ஹா சீதா! ஹா லக்ஷ்மணா!' என்று ராமன் குரலில் கூப்பிட வேண்டியது. அதைக் கேட்டு ராமனுக்கு ஏதோ ஆயிற்று என்று சீதை லக்ஷ்மணனை ராமனுக்குச் சகாயமாக அனுப்பி விடுவாள். நான் அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு சீதையைத் தூக்கிக் கொண்டு லங்கைக்குப் போவேன். இந்தக் காரியத்தில் நீ உதவி செய்து விட்டுப் பிறகு உன் இஷ்டப்படி போகலாம். இல்லையென்றாயாகில் இங்கேயே என்னால் வதம் செய்யப்படுவாய்'' என்றான்.

எவ்வளவு சொல்லியும் ராவணன் கேளாமலிருப்பதைக் கண்டு, 'இவன் யமன் வீட்டுக்குப் போவதற்கு அவசரப் படுகிறான். காமத்தால் தூண்டப்பட்டு மாள்வது இவன் விதியாக இருக்கிறது. இவனால் கொல்லப் பட்டு என் உயிர் போவதை விட, ராமனாலேயே கொல்லப்படுவது நலம். பகைவனால் கொல்லப்பட்டால் தோஷமில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மாரீசன் ராவணன் சொன்னதைச் செய்ய ஒப்புக் கொண்டான்.

''ராவணா! நான் உனக்கு இதத்தைச் சொல்லிப் பார்த்தேன். நீ கேட்கவில்லை. நீ சொன்னது போல் நான் செய்தால் என் உயிர் போவது நிச்சயம். உன் உயிரும் அதற்குப் பின் சீக்கிரத்தில் போவதும் நிச்சயம். லங்கை அழிவதும் நிச்சயம். உன்னுடைய க்ஷேமத்தை விரும்பாத எவனோ ஒரு சத்துரு உன்னை இந்தக் காரியத்தில் பிரவேசிக்கத் தூண்டி விட்டிருக்கிறான். உன் பேரில் யாருக்கோ பொறாமை. அவன் உனக்குத் துராலோசனை சொல்லியிருக்கிறான். நீ பிடிவாதம் செய்கிறாய். உன்னால் மாள்வதை விட பகையாளிக்கு என் உயிரைக் கொடுத்து விடுவதே மேல். தண்டகாரண்யம் போகலாம், எழு'' என்றான் மாரீசன்.



ராவணன் மகிழ்ச்சியடைந்து மாரீசனைத் தழுவிக் கொண்டு, ''பழைய மாரீசனைக் கண்டேன்'' என்றான்.

இருவரும் ரதம் ஏறி தண்டகாரண்யம் நோக்கிச் சென்றார்கள். பல பட்டணங்களையும் காடுகளையும் மலைகளையும் ஆறுகளையும் அநேக ராஜ்யங்களையும் பார்த்துக் கொண்டே ஆகாய மார்க்கமாகச் சென்றார்கள். சீக்கிரமாகவே தண்டகாரண்யத்தில், ஒரு வாழைத் தோட்டத்தின் மத்தியில் ராமனுடைய ஆசிரமத்தைக் கண்டார்கள்.

பூமியில் இறங்கி ராவணன் மாரீசனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''அதோ ராமனுடைய ஆசிரமம் இருக்குமிடம் காணப்படுகிறது. நாம் யோசித்தபடி எல்லாம் செய்வாயாக'' என்றான்.

உடனே மாரீசன் தன் சரீரத்தை மாற்றிக் கொண்டு மான் உருவம் தரித்து விட்டான்.

மானின் அழகே அழகு. அதன் உடலில் ஒவ்வொரு பாகமும் ஒரு தனி நிறம். ஒவ்வொரு அங்கமும் விசித்திர அழகு. ஆகாயத்தில் மழை நின்றபோது காணப்படும் வான வில்லின் பல வர்ணங்களோடும் கண்ணைக் கவரும் விதத்தில் அந்த மான் விளங்கிற்று. தங்கமும் வெள்ளியும் வைடூரியமும் பலவித மணிரத்தினங்களும் புஷ்பங்களும் போல் அதன் உடலில் மாறி மாறிக் காணப்பட்டது. தங்கப் பிரதிமையில் ரத்தின மணிகள் இழைத்து உயிருடன் ஓடினது போல் விளங்கிற்று. அது வரையில் உலகத்தில் காணாத மானாக அந்த மாய மான் ஆசிரமத்துக்கு முன் இங்கு மங்கும் நடந்தது, படுத்தது, எழுந்து துள்ளிக் குதித்தது. கொஞ்ச நேரம் புல் மேயும், சில சமயம் தலையைத் தூக்கிச் செடிகளிலுள்ள இளந்தளிரைத் தின்னும், சில சமயம் ஆசிரமத்தை நெருங்கிப் போய் மெள்ள நடக்கும், பிறகு திடீர் என்று துள்ளித் தூர ஓடும். மற்ற மான் கூட்டங்களோடு சில சமயம் சேர்ந்து நடக்கும். சில சமயம் அவற்றை விட்டு விலகும். மற்ற மான்கள் அதை மோந்து மோந்து பார்த்துச் சந்தேகப் பட்டு விலகும்.

சீதை அச் சமயம் வனத்தில் புஷ்பம் பறித்துக் கொண்டிருந்தாள், இந்த மானைப் பார்த்து, 'ஓ என்ன அழகு!' என்று கண் கொட்டாமல் பார்த்து நின்றாள். அப்போது மானும் அவளைப் பார்த்து அவளுக்கு எதிரில் இங்கு மங்கும் ஓடியதானது வனத்துக்கே புது அழகு தந்ததைப் போலிருந்தது.

(தொடரும்)

காவேரி-10

எதிர்க்கட்சித் தலைவர் ஓர் ஆங்கில மாத இதழில் வந்த கட்டுரையை மேற்கோள் காட்டி காரசாரமாகச் சட்டசபையில் பேசிக் கொண்டிருந்தார்.

''முதல் அமைச்சர் அவர்களே நம் தமிழகத்திலுள்ள ஒரு விஞ்ஞானி அற்புதமான ஒரு நெல் வகையினைக் கண்டுபிடித்துள்ளார். இது விளைய தண்ணீர் அதிகம் தேவையில்லை. தரிசு நிலத்தில் கூட வளரக்கூடியது. பூச்சிகள் எதுவும் தாக்காது. முற்றிய மணிகளோடு அறுவடைக்குக் காத்திருக்கும் கதிர்களை எலிகள் நெருங்காது. இந்த நெல்லைத் தமிழகத்தில் பயிர் செய்தால் இந்தியாவின் நெற்களஞ்சியமாகத் தமிழகம் மாறி விடும்! ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உற்பத்தி பெருகும். தங்களுக்கு இந்த நெல் வகையைப் பற்றிய செய்தி கிடைத்ததா?''

முதலமைச்சர் எழுந்து, ''இது பற்றிய செய்தி இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் உங்கள் பேச்சு மகிழ்ச்சியினைத் தருகிறது. இது உண்மையாக இருக்குமானால் அந்த நெற் பயிரினைத் தமிழகமெங்கும் பயிரிட எல்லா ஏற்பாடுகளும் போர்க்கால நடவடிக்கைகள் போலத் துரிதமாக நடைபெறும். உணவுத் துறை இயக்குனரிடம் விளக்கம் கேட்கப்பட்டு முழு விவரமும் இன்னும் ஒரு மாதத்தில் தெரிவிக்கப்படும்'' என்றார்.

முதல்வர் ஒரு மாத அவகாசம் கேட்டது அவருடைய அலட்சியத்தைக் காட்டுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தாக்க, வார்த்தைகள் தடித்தன. சபை ஒத்திவைக்கப்பட்டது.

அன்று மாலை முதலமைச்சரின் அறைக்கு உணவுத் துறை இயக்குனர் அவசரமாக அழைக்கப்பட்டார்.

முதலமைச்சரும் அவருக்கு வலது கரமாய்த் திகழும் அவரது நண்பர் பூமிநாதனும் அமர்ந்திருந்தனர்.

''வணக்கம் சார்.''

''வாங்க சார்... வாங்க. உட்காருங்க. உங்களை எதுக்கு வரச் சொன்னேன்னா யாரோ ஒருத்தன் புதுசா ஒரு வகை நெல்லு கண்டு பிடிச்சிட்டானாம். கரிசல் காட்டிலும் விளையுமாம்... கட்டாந் தரையிலும் விளையுமாம். வளர்ச்சிக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படாதாம். இன்னிக்குச் சட்டசபையிலே பேச்சு வந்தாச்சு. நமக்கு 'டீட்டைலா நியூஸ்' வேணும்.''

இயக்குனருக்குத் தலைகால் எதுவும் புரியவில்லை. மேலும் அவர் இந்தத் துறைக்கு மாற்றப்பட்டு பத்து நாட்கள்தான் ஆகியிருக்கும். அதுவரை போக்குவரத்துத் துறை இயக்குனராய் இருந்தார். திடீரென்று முதலமைச்சர் அழைத்து நெல்லைப் பற்றிக் கேட்டதும் குழம்பிப் போய் விட்டார். எச்சிலைக் கூட்டி விழுங்கி விட்டு, ''சார்... இது ஆராய்ச்சி சம்பந்தப்பட்டது. வைஸ் சான்சலருக்குத்தான் விளக்கமாத் தெரியும். விஞ்ஞானிகளெல்லாம் அவருடைய நேரிடை மேற்பார்வையில வேலை செய்யுறாங்க'' என்று ஒடுங்கியபடி சொன்னார்.

விவசாயப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் கடலை முத்துவுக்குச் செய்தி பறந்தது. அவரிடம் விவரம் தெரிவிக்கப்பட்டவுடனேயே 'டேப்ரிக்கார்டர்' மாதிரி மளமளவென்று சொல்ல ஆரம்பித்தார்.

''சார்... இது அற்புதமான கண்டுபிடிப்பு. விஞ்ஞானியோட பேரு ராஜசேகரன்.''

''திருநெல்வேலிப் பக்கம் ஒரு கிராமத்தில பிறந்து வளர்ந்தவரு. படிப்பில புலி. பத்து வருஷம் இரவு பகல் பாராமல் கடுமையாய் உழைச்சிருக்கார். பயிர் தொழில்நுட்ப முறையில் நெற்பயிரின் குரோமோசோம்களிலுள்ள டிஎன்ஏ என்ற மூலக் கூறுகளை இடமாற்றம் செய்து ஜீன்களின் ஸ்திரத் தன்மையில்....''

இடைமறித்தார் முதலமைச்சர்.

''சார்... நீங்க சொல்லுறது எதுவும் புரியலை. ஜீன் அது இதுவெல்லாம் எங்களுக்குத் தேவையில்லாத செய்தி. நான் கேட்குறதுக்கு மாத்திரம் விளக்கம் சொல்லுங்க. இந்த நெல்லு விளைச்சலுக்கு அதிகம் தண்ணீர் தேவையில்லையாம். எந்த மண்ணையும் வளருமாம். அரிசிப் பஞ்சத்தை எளிதில் போக்கிடலாமாம். எல்லாம் உண்மைதானா? இல்லை... புருடா விடுறாங்

எட்டையாபுரம் ராஜன்

> ''புரியலையா... புரியும்படி சொல்லுறேன். உங்க அம்மா பெயருக்குப் பதிலா நம்ம சி.எம். பெயரை அந்த நெல்லுக்கு நீங்க சூட்டணும். அதுவும் நம்ம மாநாட்டுல. கட்டாந்தரையிலும், கரிசக் காட்டிலும் வேலிக் கருவைச் செடி மாதிரி வளர்ந்து பசி போக்கும் இந்த நெல்லுக்கு நம்ம சி.எம். பெயரை வைச்சா அவரோட புகழ் உலகம் முழுவதும் பரவும்.''

களா?'' சற்று எரிச்சலா கவே பேசினார் முத லமைச்சர்.

''சார்... நான் முதல் லயே சொல்லிட்டேனே இது அற்புதமான கண்டு பிடிப்புன்னு. ஜப்பானி லிருந்து நாலு லெட்டர் இந்த நெற் பயிரைப் பத்தி விசாரிக்க வந்தாச்சு. இந்தக் கண்டுபிடிப்பு முறை ராஜசேகரனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ரகசியமாய் வச்சிருக்காரு. ஆனா இன்னும் ஒரு மாதத்தில் முறைப்படி அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறதாச் சொல்லியிருக்கார். அதுக்குப் பிறகு இதைப் பயிரிட விவசாயிகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விதை நெல் வழங்கத் திட்டம். இந்த நெல்லுக்கு அவரோட அம்மா பெயரை வைக்க ஆசைப்படுறார்.''

முதலமைச்சரும், பூமிநாதனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

துணைவேந்தர் புறப்படும் பொழுது, ''சார்... இவ்வளவு பெரிய விஞ்ஞானியை உடனே பார்க்கணும்னு பிரியப்படுறேன் ஆனா நாளைக்கு அவசரமா டெல்லிக்குப் போகணும். காலையில பூமிநாதனை அனுப்புறேன். மிஸ்டர் ராஜசேகரன்கிட்ட என் சார்பில பேசுவார். அவருக்கும் தெரியப்படுத்துங்க'' என்றார் முதலமைச்சர்.

மறுநாள் காலையில் ராஜசேகரனின் சோதனைச் சாலையில் பூமிநாதன் அமர்ந்திருந்தார்.


பூமிநாதனுக்கு இது புது அனுபவமாய் இருந்தது.

எட்டாவது வரை கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்து அதன் பிறகு அடிதடி கலவரம் முதலியவற்றில் ஈடுபட்டு, கட்சிக்குத் தாவி பணம் சேர்த்து ஒரு பெரும்புள்ளியாக முத்திரை குத்தப்பட்டவர். முதலமைச்சரின் வலதுகரமாகத் திகழ்ந்ததால் செல்வாக்கு அதிகம்.

அந்த சோதனைக் கூடத்திலிருந்த பெரிய பெரிய கண்ணாடிக் குடுவைகளும், அதில் கொதித்துக் கொண்டிருக்கும் பல வண்ணத் திரவங்களும், மைக்ரோஸ்கோப்புகளும், கம்ப்யூட்டர் திரையில் ஓடி மறையும் புள்ளிகளும், கோடுகளும், அலை



இயங்கத் தயங்கும் பயங்களை நிமிர்த்து...



நண்பா!
பிடிக்குள்
குறிக்கோளை
அடக்கு;
போலி
கௌரவத்தை
விலக்கு.

'அச்ச சட்டை'யைக்
கழற்று.
'ஆர்வக் காற்றாடி'
சுழற்று.

- சிறகைக் கொஞ்சம்
அசைத்துப்
பாரேன்! -

கடலும் தானாய்க்
கடந்து போகும்!
'வேடந்தாங்கல்'கள்
வெகு அருகாகும்.

- உன்
'பருந்துப்'
பார்வைக்கு
அகப்படா
இலக்கா?
இளஞ் சூரியனே
இங்கே! -
உனக்கில்லா
கிழக்கா?!

- ஆசான்

களும் விட்டலாச்சாரியா படத்திலுள்ள மந்திரவாதியின் குகையை நினைவுபடுத்தின.

மனத்தில் உதித்த ஆச்சரியத்தை வெளிக் கொண்டு வராமல், ''நீங்க ஏதோ ஒரு புது வகையான நெற்பயிர் கண்டுபிடிச்சிருக்கீங்களாம். சி.எம். கேள்விப்பட்டு ரொம்ப சந்தோஷப்பட்டாரு. அது விஷயமா பேசத்தான் வந்திருக்கேன்...'' என்றார்.

''சி.எம். வரைக்கும் நியூஸ் போயிடுச்சா!'' ஆர்வத்துடன் கேட்டார் ராஜசேகரன்.

''சட்டசபையில இதைப் பத்திப் பேசியாச்சு!''

''அப்படியா... வெரிகுட். அடுத்த மாதம் சண்டிகரில் ஒரு 'கான்பரன்ஸ்' நடக்கப் போகுது. அதில இந்த நெற்பயிரைப் பற்றி விளக்கப் போறேன். அதுக்குப் பிறகு அரசாங்கம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.''

''நல்லது. அந்த நெல்லுக்கு உங்க அம்மா பேரை...''

''யெஸ்... எங்க அம்மா பெயர் காவேரி. இந்த ஆராய்ச்சிக்கு சுமார் பத்து வருஷம் ராத்திரி பகல் கடுமையான உழைப்பு. எப்படியாவது ஏழை மக்களோட பசியைப் போக்கணும்னு வெறி. பசியோட கொடுமை தெரியும் எனக்கு... கல்யாணம் என்னோட ஆராய்ச்சிக்குத் தடையாய் இருக்கலாம்னு தோணுச்சு. பிரம்மச்சாரியாய் இருந்துட்டேன். உலக ஆசைகளை நசுக்கிட்டேன். என் உழைப்போட பலன்தான் இந்த காவேரி - 10. எங்க அம்மா பெயரையும் ஆராய்ச்சிக்கு நான் எடுத்த பத்து வருஷத்தையும் சேர்த்து 'காவேரி-10' அப்படின்னு பெயரைக் கொடுத்திட்டேன்.''

- கண்களில் நீர் துளிக்கப் பேசினார் ராஜசேகரன். அவர் உணர்ச்சிவசப்பட்ட பொழுது கழுத்து நரம்புகள் புடைத்தன.

பூபிநாதனின் மனது ராஜசேகரனை எடை போட்டது.

'எளிதில் சிக்கும் மீன் அல்ல. இதன் வம்சமே தனி. எடுத்த உடனேயே வலை விரித்தால் வலையைக் கிழித்து நாசம் செய்து விட்டுத் தப்பி நீந்தும் சுறா ஜாதி. உணவைக் காட்டி பயம் போக்கி, விரும்பி வலைக்குள் விழ வைக்க வேண்டும்.'

''பத்து வருஷம் ரா முழிச்சு சாப்பாட்டை மறந்து துறவி மாதிரி ஆராய்ச்சி செய்திருக்கீங்க. நினைக்கும்போதே புல்லரிக்குது. துணைவேந்தர் சி.எம்.கிட்ட சொல்லும் பொழுது உடனே உங்களைப் பார்க்கணும்னு துடிச்சாரு. 'அடேயப்பா இப்படி ஓர் ஆளா! பழைய காலமாயிருந்தா ராஜ்யத்தையே கொடுத்துட்டுப் போயிடலாம். வயித்துப் பசி போக்குறவனை சாமி மாதிரி கோயில் கட்டி கும்பிடணும்.' இப்படிப் பல தடவை சொல்லிக்கிட்டிருந்தாரு.''

''ஐயோ... என்னங்க நான் சாதாரண ஆள்.''

''இதுதான் அடக்கம். குறை குடந்தான்

குறிக்கும். அடுத்த மாதம் நம்ம கட்சி மாநாடு பெரிய அளவில் நடத்தத் திட்டம். அந்த மாநாட்டுல உங்களைக் கௌரவப் படுத்தணும்னு சி.எம். ஆசைப்படுறாரு.''

''எனக்கு விளம்பரமெல்லாம் பிடிக்காதே!''

''உங்களை மாதிரி படிச்ச ஆராய்ச்சிக்காரங்க ஒதுங்கிப் போறதால நம்ம வருங்கால சந்ததியினருக்கு எதுவுமே தெரியலை. எப்பவும் சினிமாக்காரங்களை நெனைச்சுக் காலத்தை வீணாக்குறாங்க. உங்கள மாதிரி உருப்படியான காரியம் செய்யுறவங்க வெளி உலகத்துக்கு வரணும்.''

ராஜசேகரன் தன் இருக்கையில் நெளிந்தார்.

'வலை விரிக்கும் நேரம், முயற்சி செய்து பார்ப்போம்.'

பூமிநாதன் ஒரு பெட்டியை எடுத்து மேஜை மீது வைத்து, ''சார்... இதுல அஞ்சு லட்சம் இருக்கு. சி.எம். அவரோட அன்பளிப்பா கொடுக்கச் சொன்னாரு.''

திடுக்கிட்டு இருக்கையிலிருந்து எழுந்தார் ராஜசேகரன்.

''சார்... உட்காருங்க. உங்க ஆராய்ச்சிக்கு அஞ்சு லட்சம் சாதாரணம்.''

''வேண்டாம் சார். தயவு செய்து எடுத்திட்டுப் போங்க.''

''மிஸ்டர் ராஜசேகரன் இந்தப் பணத்தை அன்பளிப்பா நெனைக்க வேண்டாம். ஒரு சின்ன வியாபாரமாக்கிடுவோம்.''

ராஜசேகரனின் புருவங்கள் மேலேறின. கேள்விக்குறி முகத்தில் தோன்றியது.

''வியாபாரமா!''

''வியாபாரம் மாதிரித்தான். உங்க ஆராய்ச்சியை நாங்க விலைக்குக் கேட்கலை. பயப்பட வேண்டாம். ஆராய்ச்சி உங்களிடமே இருக்கட்டும். நீங்க கண்டு பிடிச்ச நெல்லுக்கு உங்க அம்மா பெயரை வைச்சிருக்கீங்களே. அதுலதான் ஒரு சின்ன மாற்றம்!''

''மாற்றமா... புரியலையே சார்?''

''புரியலையா... புரியும்படி சொல்லுறேன். உங்க அம்மா பெயருக்குப் பதிலா நம்ம சி.எம். பெயரை அந்த நெல்லுக்கு நீங்க சூட்டணும். அதுவும் நம்ம மாநாட்டுல. கட்டாந்தரையிலும், கரிசக் காட்டிலும் வேலிக் கருவைச் செடி மாதிரி வளர்ந்து பசி போக்கும் இந்த நெல்லுக்கு நம்ம சி.எம். பெயரை வைச்சா அவரோட புகழ் உலகம் முழுவதும் பரவும். போக்குவரத்துக் கழகங்கள், கல்லூரிகள், பாலங்கள் எல்லாம் நம்ம சி.எம். பெயரில இருக்கு. ஆனா எல்லாத்துக்கும் மேல இந்த நெல்லுக்கு அவர் பெயரை வைச்சா புகழின் உச்சத்துக்கே போயிடுவார். அஞ்சு லட்சம் சும்மா அட்வான்ஸ்தான். இன்னும் தருவோம். அடுத்த

துணைவேந்தர் பதவிக்கு உங்க பெயரைச் சிபாரிசு செய்வோம்.''

''என்ன சார்... சி.எம். புகழ் பரப்ப என்னோட கண்டுபிடிப்புத்தான் கிடைச்சுதா. எங்க அம்மா பல வீட்டுல சமையல் வேலை செய்து படிக்க வைச்சாங்க. அவங்க பட்ட கஷ்டத்தை இப்ப நெனைச்சாலும் அழுகை வரும். வாழ்க்கையில சுகங்கிறது தெரியாமலேயே செத்துட்டாங்க. ஒரு தாய்க்கு மகன் செய்கிற நன்றிதான் சார் இந்தக் கண்டுபிடிப்புக்கு அவங்க பெயரை வைச்சது.''

உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார் ராஜசேகரன்.

''மிஸ்டர் ராஜசேகரன், ஒரு பெரிய பங்களா கட்டித் தர்றோம். 'காவேரி இல்லம்'னு அதுக்குப் பெயர் சூட்டி நிம்மதியா அதுல இருங்க. கார் வாங்கித் தர்றோம். வயசு உங்களுக்கு நாப்பதுதான் ஆகிறது... அழகான ஒரு பெண்ணை நாங்களே கல்யாணம் செய்து வைக்கிறோம் போதுமா?''

ராஜசேகரன் நாற்காலியைப் பின்னால் சினத்துடன் தள்ளி எழுந்து நின்றார்.

''சார்... இந்தப் பேச்சை இத்தோட முடிச்சிடலாம். எனக்கு நிறைய வேலை இருக்கு.''

''வேலை எங்களுக்கும்தான் இருக்கு. சி.எம். நினைச்சா அது முடியணும்.'' பூமிநாதனின் குரலில் சூடு தெரிந்தது.

''மிஸ்டர், தயவுசெய்து எழுந்திருக்கப் போறீங்களா... இல்ல...''

''இல்ல கழுத்தைப் பிடிச்சுத் தள்ளவா? ...அப்படித்தானே மிஸ்டர் ராஜசேகர்? நாங்க நினைச்சா இந்த ஆராய்ச்சியை நீங்க செய்யலைன்னு வேறு ஒருத்தர் மூலம் வழக்குப் போட முடியும். இந்த ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளியேற்றி வேலை இல்லாம ஆக்க முடியும். அடுத்த வேளை சோத்துக்குப் பிச்சை எடுக்க வேண்டியிருக்கும். ஜாக்கிரதை!''

''என்ன சார்... பயங்காட்டி வழிக்குக் கொண்டு வர நினைக்கறீங்களா. இந்த வேலை போனா செத்தா போவேன்?'' என்றவர் மேஜையிலிருந்து சில கடிதங்களை எடுத்தார்.

''இது ஜப்பான் யூனிவர்சிட்டியிலிருந்து என்னை வேலைக்கு வரச் சொல்லி எழுதியிருக்கிற லெட்டர். இது கலிபோர்னியா... இது லண்டன். இன்னிக்கு விமானத்தில் ஏறினா நாளைக்கு வேலை. கற்றவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. கேள்விப்பட்டதில்லையா?''

பூமிநாதன் கொஞ்சம் கூட அதிர்ச்சியடையாமல் சிரித்தார்.

''தம்பி ராஜசேகரா... உங்களை நெனைச்சா பரிதாபமாயிருக்கு. ஜப்பான் போறீகளாக்கும். அப்புறம் அமெரிக்கா... அடுத்து லண்டன். எப்படி தம்பி போவீங்க? உங்களை ஏரோப்பிளேன்ல ஏற விடுவோமா? உங்க பாஸ்போர்ட் முடக்கப்படும். நீங்க பயங்கரவாதின்னு குற்றம்சாட்டுவோம். சவால் விடத் தயார்! இன்னும் ஒரு மணி நேரத்தில உங்க பாஸ்போர்ட்டை அரசாங்கத்துக்கு 'சரண்டர்' செய்யச் சொல்லி ஆர்டர் வரவழைக்கட்டுமா! பயங்கரவாதிகளுக்கும் உங்களுக்கும் தொடர்புன்னு பேப்பரில செய்தி போடச் சொல்லட்டுமா!''

ராஜசேகரன் அப்படியே திகைத்துப் போய் நின்றார். சில நிமிடங்கள் சிந்தித்தார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராகி பீரோவைத் திறந்து சில தாள்களையும், ஒரு பெரிய கண்ணாடி ஜாடியையும் வெளியே எடுத்தார்.

''சார்... இதுதான் என்னோட பத்தாண்டு கண்டுபிடிப்பின் ஃபார்முலா. இந்தக் ஜாடியிலுள்ள நெல்லு நம் நாட்டின் வறுமை போக்கும் கற்பக மணிகள்'' என்றவர் மிக வேகமாக அந்தத் தாள்களைக் கிழித்து மாடி ஜன்னல் வழியே காற்றில் வீசினார். பிறகு ஒரு 'ஆசிட்' பாட்டிலைத் திறந்து அந்த நெல் இருந்த ஜாடிக்குள் ஊற்றினார். கருகி எரியும் வாடை ஜாடியிலிருந்து கிளம்பியது. திகைத்துப் போய் நின்ற பூமிநாதனைப் பார்த்து, ''சார் நான் பத்து வருஷம் உழைக்கக் கண்டுபிடிச்சதைப் பத்து நொடிகளிலே அழிச்சுட்டேன். மறுபடியும் இந்த நெல்லைக் கண்டுபிடிக்க பத்து வருஷம் தான் உழைக்கணும். ஆனா இதே மாதிரி நிகழ்ச்சி இன்னும் பத்து வருஷம் கழிச்சும் நடக்கலாம். மறுபடியும் அழிப்பேன். திரும்பவும் உழைப்பேன். என் உயிர் உள்ள வரை இது தொடரும். மக்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்த உண்மையான மனித உள்ளங்கள், பணத்தையும் புகழையும் விரும்பாத தூய உள்ளங்கள் ஆட்சியில் ஏறும் வரை இந்த நாடு பட்டினியால் வாடட்டும். இது தலைவிதி! அழிக்க முடியாது!''

பெட்டியை எடுத்துக் கொண்டு தலை குனிந்தவாறு அங்கிருந்து சென்றார் பூமிநாதன்.

''என்னது பேண்ட் சட்டை எல்லாம் ஒட்டடை படிஞ்சு, ஒரே தூசும் தும்புமா...?''

''ஹி..... ஹி..... டீ.வி. ஸ்டேஷன்லே தமிழ் சினிமா பிரிவுக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணிட்டாங்க!''


- காஞ்சி எஸ். ஃபைசுதீன்.



மறுபதிப்பு

வெளிவந்துவிட்டது

சலுகை 25%




கம்பராமாயணம்

மூலமும் தெளிவுரையும்

9 தொகுதிகள்

5000 பக்கங்களுக்கு மேல்



வில்லிபாரதம்

மூலமும் தெளிவுரையும்

6 தொகுதிகள்

2500 பக்கங்களுக்கு மேல்

கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய இரு பெரும் நூல்களின் மறுபதிப்பு வெளிவந்துவிட்டது

கம்பராமாயணம் 9 தொகுதிகள் (பேராசிரியர் டாக்டர் **பூவண்ணன்** M.A., Ph.D.)	விலை ரூ. 540.00
வில்லிபாரதம் 6 தொகுதிகள் (பேராசிரியர் **அ. மாணிக்கம்** M.A.)	விலை ரூ. 300.00
	ரூ. 840.00
கழிவு 25%	ரூ. 210.00
	ரூ. 630.00

இச்சலுகை இம்மாதம் மட்டுமே

ஆக, ரூ. 630.00 மட்டும் DD (அ) MO மூலம் அனுப்புக.
நூல்கள் உடனே VPP மூலம் அனுப்பி வைக்கப்படும்.
தபால் செலவினைத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களை பெற்றுக் கொள்ளலாம்.


M.O. or D.D. அனுப்ப வேண்டிய முகவரி

VARTHAMANAN PATHIPPAGAM

ARR Complex, 141, Usman Road, Madras-17. (Near Panagal Park)

நீங்கள் கேட்டவை - தராசு

உண்ணாவிரதம் இருந்ததுண்டா?




• எதிர்ப்பது...

• ... நியாயம்



• அபார சாதனை





• "நான் அறியாமலே...

● கே. ராஜுபாலு, சேலம் - 1.
? நீர் உண்ணாவிரதம் இருந்ததுண்டா?
! இல்லை. உண்ணாவிரதம் இருக்க ஆன்மீக பலம் வேண்டும். பிறரிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அந்த ஆன்மீக பலம் செயல்பட வேண்டும். அது ஒரு புனிதமான தவம். அதை இழிவுபடுத்த மாட்டேன். சிலர் உடல்-மன ஆரோக்கியம் கருதி ஏகாதசி போன்ற நாட்களில் உண்ணாவிரதம் இருப்பார்கள். அடுத்த வேளை உணவு ஒரு வெட்டு வெட்டுவார்கள். இதைக் காட்டிலும் ஒவ்வொரு வேளையும் அரை வயிறு அல்லது முக்கால் வயிறு உண்பது ஆரோக்கியம். இதற்குத்தான் அதிக மனவலிமை தேவை.

● கோ. பாலசுப்பிரமணியன், அம்மனூர். ❑
? ஜனதா தளம் கிளை கிளையாகப் பிரிந்து போவது பற்றி...?
! அது பிரியவில்லை. பிரிக்கப்படுகிறது. முதலில் அஜித்சிங் கட்சியை உடைத்தார். இப்போது அவர் கட்சியைக் காங்கிரஸ் உடைத்தது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் போது நமக்குச் சாதகமாக வோட்டுப் போட்ட ஏழு பேரைக் காங்கிரஸில் ராவ் இணைப்பது, கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தைக் கேலிக்குரியதாக்குகிறது. இதை அஜித்சிங் மட்டுமின்றி அர்ஜுன்சிங்கும் எதிர்ப்பது ரொம்ப நியாயம்.

● மூ. அபூப்கான், சத்திரம்கருப்பூர்.
? "எனது ஆட்சிக் காலத்தில் எனக்குத் தெரியாமலேயே சில காரியங்கள் நடந்து விட்டன" என்று சந்திரசேகர் கூறுகிறாரே?
! மெஜாரிட்டி பலம் இல்லாதவர்கள், தார்மிக அடிப்படையில் மெஜாரிட்டி பலம் பெறாதவர்கள் ஆகிய பிரதமர்களின் கதி இதுதான்.

● கே. எம். ரவிச்சந்திரன், மதுரை.
? அரசியல் கௌரவம் என்பது...?
! இன்று நமது நாட்டில் காணக்கிடைக்காத, எந்த அரசியல்வாதியாலும் வேண்டப்படாத ஒன்று.

● ஆ. சிவகுமார், பாப்பிரெட்டிப்பட்டி.
? 'நரசிம்மராவை அதிர்ஷ்டம் இன்னும் கைவிடவில்லை' என்கிறேன், சரிதானே?
! 'நம்மை துரதிர்ஷ்டம் இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது' என்றாலும் சரிதான்.

● பி. பிரான்சிஸ், கும்பகோணம்.
? சில கோயில் சாமிகளுக்குப் பூணூல் போட்டுள்ளார்களே, சாமி என்ன அய்யரா? ஆசாரியா? செட்டியாரா?
! அவர் அய்யருக்கு அய்யர், ஆசாரிக்கு ஆசாரி, செட்டியாருக்குச் செட்டியார். அவரவரும் அவரவர் விருப்பத்துக்கும் கற்பனைக்கும் ஏற்ப கடவுளை அலங்கரித்துப் பார்க்கிறார்கள். அவர் பிரான்சிஸுக்கு ஏசு கிறிஸ்துவாகக் கூட விளங்க முடியும்.

● இளம்பிறைபாருக், சென்னை - 24.
? அரியலூர் விபத்துக்குத் தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்த லால்பகதூர் சாஸ்திரிக்கும், ஊழல் - லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுப் பதவியை விட மறுக்கும் நரசிம்மராவுக்கும் என்ன வேறுபாடு?
! தார்மிகக் கோட்பாடுகளில் ஏற்பட்டுள்ள பரிணாம வீழ்ச்சியின் வெளிப்பாடு.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.
? குடிப்பது, குளிப்பது - சென்னையில் எது கஷ்டம்?
! குளிக்க போதிய தண்ணீர் இல்லாமல் கஷ்டம். குடிக்க நீர் வழங்கப்பட்டாலும் அது கலங்கலாக அல்லது மஞ்சள் நிறத்தில்

இருப்பதால் குடிக்கவும் கஷ்டம்.

● ஆ. ஜீவானந்தம், பூண்டி.

? சோமாலியாவில் இயேசு கிறிஸ்துவின் முகம் 500 அடி உயரத்தில் தெரிந்ததாமே. இது பற்றி என்ன நினைக்கிறீர்?

! இங்கு கூடத்தான் பிள்ளையார் வடிவில் மரத்தின் முடிச்சு இருக்கிறது, கல் கிடைக்கிறது என்று பூஜை போட ஆரம்பித்து விடுகிறார்கள். இதுபோன்ற வேலைகள் எங்கும் நடக்கும். இறைவனோ ஏசுவோ இதயத்தில் இருப்பதுதான் முக்கியம்.

● கே.ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? 'உண்ணாவிரதத்தால் ஜனங்களுக்கு அவதி' என்கிறீர்கள், கார்ட்டூனில். உண்ணாவிரதத்தால் ஜெயின் இமேஜ் கட்அவுட் உயரத்துக்கு வளர்ந்துள்ளதாகக் குறிப்பிடுகிறீர்கள், தலையங்கத்தில். அவதியால் கூட இமேஜ் உயருமா?

! இதுதாங்க நம்ம நாட்டில நடக்குற பரிதாபம். ரயில் - விமானம் - பஸ் நிறுத்தத்தால பல பேர் அவதிப்படறாங்க. ஆனா அவங்க அவதியை மத்த ஜனங்க உணர்றதில்லே. உணர்ந்தா இதுக்குக் காரணமானவங்களுக்கு வோட்டுப் போடுவாங்களா? தலைவன் அல்லது தலைவி மீது அவங்க வைச்சிருக்கிற குருட்டுபக்தி - நீக்குளிக்கக் கூட தயாராகிற பக்தி - அதிகரிக்குதே தவிர குறையறதில்லே.

● இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

? 'தொலைக்காட்சி நிலையம் தொடர்ந்து பாரபட்சமாக நடந்தால் தமிழக அரசே தனியாகத் தொலைக்காட்சி நிலையம் துவங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும்' என்று எஸ்.டி.எஸ். பேசியுள்ளாரே?

! ''தபால் கார்டு விலையைக் குறைப்பேன்'', ''கச்சத் தீவை மீட்பேன்''னெல்லாம் சொன்னதுக்கு அடுத்தபடியா இது தான் பட்டா டமாஸ், போ!

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
கோ. பாலசுப்பிரமணியன்,
அம்மனூர், கொத்தங்குடி,
நாகை(மாவ) - 610 201.

● ஆர். எஸ். நாராயணன், சென்னை.

? இலங்கையில் கபில்...

! 126 டெஸ்ட்களில் ஆடிய சாதனையை அந் நாட்டில் நிகழ்த்தியதால் ஸ்ரீலங்கா பெருமையுற்றது.

● சி. மகேஷ், மதுரை.

? இலங்கை ஒரு நாள் கிரிக்கெட் போட்டி...?

! நூலிழையில் பெற்ற வெற்றி பட்டா த்ரில் தான் என்றாலும் பாரபட்சமான அம்பயரிங்கையும் மீறி பெற்ற அடுத்த டெஸ்ட் வெற்றியும் அதைவிட த்ரில்தான்.

● வைத்தியா, திருவெண்ணெய்நல்லூர்.

? 'நாங்கள் எங்கே போனாலும் மழை எங்களைத் தொடர்கிறது' என அஸாருதீன் கூறுவது பற்றி?

! இலங்கையிலிருந்து திரும்பும் போது சென்னையில் சில நாள் டேரா போடச் சொல்லுங்களேன், ப்ளீஸ்!

● ஆர்.கே. ராமு, குடியாத்தம்.

? அண்மையில் இரசித்த நகைச்சுவை ஒன்று?

! ◆◆ ''ஏங்க, அதான் ரெண்டாயிரம் லாரி ஸ்ட்ரைக்லேர்ந்து விலகி ஓடுதாமே, காய் கறி விலையைக் குறைக்கக்கக் கூடாதா?''

◆◆ ''ஆ! அந்தம்மாவுக்குப் பின்னாடியும் தான் ஆயிரம் கார் போவுது; வாங்கற ரேட்டை எந்தாளாவது குறைச்சிட்டாரா, சொல்லு!''

● சேதுராமன், சென்னை - 91.

? கடினமான உழைப்பால் உயர்பவனை விட குறுக்கு வழியிலும் ஏமாற்று வழியிலும் சிலர் சீக்கிரம் முன்னுக்கு வந்து விடுகின்றனரே?



* என்ன...




* ...வேறுபாடு?



* குறுக்கு வழி...

! குறுக்கு வழி முயற்சியில் மம்தா பானர்ஜி போல இடறியும் மயங்கியும் விழுபவர்தான் அதிகம். எஸ். பி. சவான் கேட்டுக் கொண்ட போதிலும், 'விசாரணை கமிஷன் அமைக்க மாட்டேன்; போலீஸ் மீது ஒரு தவறும் இல்லை' என்று உறுதியாக நிற்கும் துணிவு ஜோதி பாஸுவுக்கு இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்களில் ஸி.பி.ஐ. (எம்) பெற்ற வெற்றிக்காக வயிறு எரிந்து, ஏமாற்று வேலைகளில் இறங்காமல், உருப்படியான மக்கள் தொண்டாற்றக் கடினமாக உழைத்துப் பாடுபடுவதுதான் மேற்கு வங்க காங்கிரஸுக்கு உள்ள ஒரே நேர்மையான வழி.

3



மடி மீது தலை வைத்து

"என்ன பேரு?" என்று கேட்டுவிட்டு நிமிர்ந்து அவள் முகம் பார்த்தான் கஸ்தூரிரங்கன்!

"கவிதா.. ஏன் மொதல்ல கரெக்டாத் தானே சொன்னேன்?"

"இல்ல. பேரு புதுசா இருந்தது. கேக்கறதுக்கு ஸ்வீட்டா இருந்தது. அதை நீங்க சொன்ன விதமே தனி டேஸ்ட்டா இருந்தது."

கவிதாவின் முகம் சட்டென்று செழுமையாய் மாறியது. அவன் சொன்னது அவளை வெட்கப்படுத்தியிருந்தது. அவள் இமைகள் ஒருமுறை கூம்பி மலர்ந்தன. மலரின் மீது தேன் குடிக்க அமர்ந்திருக்கும் பட்டாம்பூச்சி அசையாதிருந்து விட்டுத் திடீரென ஒரு முறை தனது சிறகுகளை விரித்து மடக்கினாற்போல தோன்றியது அவனுக்கு.

அந்த உதாரணத்தைச் சொன்னால் அவளுக்குக் கோபம் வந்தாலும் வரலாம்.

"ஹோட்டல்காரங்கறதைச் சரியா ப்ரூவ் பண்ணிட்டீங்க" என்றாள் கவிதா.

சொன்ன போது உதடுகளில் புன்முறுவல். கண்களின் இரு ஓரங்களிலும் அவள் புன்முறுவலால் உருவான சின்னச் சின்ன சுருக்கங்கள்.

"புரியலை" என்றான் அவன்.

"பின்னே. புதுசான்னு சொன்னீங்க. ஸ்வீட்டான்னு சொன்னீங்க. டேஸ்ட்டுன்னு சொன்னீங்க. இந்த வார்த்தை எல்லாம் ஹோட்டல் காரங்கதானே யூஸ் பண்ணுவாங்க?"

"வாரிட்டீங்க!"

"ஐய்யோ இல்ல. மனசுல தோணினதைச் சொன்னேன். பை தி வே தாங்க்ஸ்."

"எதுக்கு?"

"எம் பேர் நல்லா இருக்குன்னு சொன்னதுக்கு."

"நான் உங்களை அந்தப் பேர் சொல்லிக் கூப்பிடலாம் இல்லையா?"

"அதுக்குத்தானே பேர் வக்கறாங்க?"

"அதுசரி. என் ஃப்ரெண்ட் ஒருத்தர். நல்ல நெறமா இருப்பாரு. அவர் பொறந்தப்ப குடும்பத்தில என்ன வேண்டிக்கிட்டாங்களோ, அவருக்கு அமாவாசைன்னு பெயர் வச்சிட்டாங்க. நானும் அந்தப் பேர் கொஞ்சம் வித்தியாசமா இருக்கேன்னு ஒரு நாலஞ்சி தரம் சொல்லிக் கூப்பிட்டேன். அடி படாம தப்பிச்சதே பெரிய விஷயமாப் போய்டுச்சி!"

கவிதா இப்போது மறுபடியும் அடக்க முடியாமல் சிரித்தாள். அவள் சிரித்தால் கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல இருந்தது. சில பேரை முதல் பார்வையிலேயே பிடித்துப் போகும். சிலரைப் பார்த்தாலே காரணம் புரியாமல் ஒரு வெறுப்பு வரும்.

கவிதா, முதல் பார்வையிலேயே பிடித்துப் போகிற சிலரில் ஒருத்தியாக இருந்தாள்.

அவள் புடைவை கட்டியிருந்த விதம், ரவிக்கை அணிந்திருந்த பாங்கு எல்லாமே நாகரிகமாகவும், நாகரிக எல்லையை மீறாமல் இருந்ததும் அவனை மிகவும் கவர்ந்தன.

எலுமிச்சை மஞ்சளில் புடைவை கட்டியிருந்தாள். அந்தப் புடைவையில் தெரிந்தும் தெரியாமலும் இருந்த கருப்புக் கோடுகளில் பெரிய பெரிய பூக்கள் மலர்ந்திருந்தன. கருப்பு மை நிறத்தில் ஒரு ரவிக்கை. கழுத்துப் பகுதி அகலமாக வெட்டப்பட்டிருந்தாலும், விரசமாக இல்லை. ரவிக்கையின் தோள் பட்டையில் கொஞ்சம் ஃப்ரில் வைத்த பஃப். அப்புறம் ஓரசான, மெலிதான கருப்பு ரவிக்கைத் துணி அவள் முழங்



கையை மீறி நீண்டிருந்தது. தந்தத்தையும், மஞ்சளையும் சேர்த்து இழைத்தால் கிடைக்கும் நிறம் அவளது உடலின் நிறம். ரவிக்கைத் துணியின் மெலிதான தன்மையில் அவளது செழுமையான கை தெரிந்தது. கையில் இரு அம்மை ஊசித் தழும்புகள் தெரிந்தன. அந்தத் தழும்புகள் கூட கவர்ச்சியாகத் தெரிந்தன.

இன்னும் சிரித்துக் கொண்டிருந்த அவள் முகத்தைப் பார்த்தான். கொஞ்சமே கொஞ்சம் அகன்ற நெற்றி. இயற்கையாகவே வெகு சிமெட்ரிகலாக வளைந்திருந்த இரு புருவங்கள். எழுதப்பட்டவை போல ஒரு மாயத் தோற்றம் தந்த இயற்கையான புருவங்களுக்குச் சற்று மேலே கருப்பு விளிம்புடன் கூடிய ஒரு மஞ்சள் ஸ்டிக்கர் பொட்டை வைத்திருந்தாள். இப்படியெல்லாம் கூடவா ஸ்டிக்கர் பொட்டைத் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள்? சிரிப்பால் நுனி சிவந்து துடித்த நீள மூக்கு. மூக்கின் செதுக்கின சிற்பத் தன்மையைக் காட்டுகிற மாதிரி எடுப்பான கன்னமேடுகள். உதடுகளை நெருங்கிய போது கஸ்தூரிரங்கனின் பார்வை ஒருகணம் நிலைத்துத் தடுமாறியது. மெலிதான உதடுகள். கொஞ்சம் நீளமான உதடுகளும் கூட. ரோஸ் நிறத்தில் இருந்தன. உள்ளங்கையில் பறக்கும் பட்டாம்பூச்சியை நிற்க வைத்துப் பார்க்க ஆசைப்படும் மனது போல, அவன் மனமும் அந்த உதடுகளை உள்ளங்கையில் ஏந்திப் பார்த்தால் எப்படி இருக்கும் என்று எண்ணியது. ஜாங்கிரியின் இரு விள்ளல்கள் போலவா? இரண்டு மெல்லிய, நீளமான, ஜீரா நிரம்பிய குலாப்ஜாமூன்கள் போலவா?

பின்வாந்தலையில் அறைந்து கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு. 'மறுபடியும் ஹோட்டல்காரனின் புத்தியைத் தலைநீட்ட வைத்து விட்டோமே' என்று நினைத்துக் கொண்டான்.

அவள் சிரித்ததில், ப்ளேட்டில் இருந்து வாயில் போட்டிருந்த ஷுகர் காக்டெய்ல் கொஞ்சம் சிதறியது. அவன் மணிக்கட்டில் ஒரு துணுக்கு சிந்தி ஒட்டிக் கொண்டது.

''ஐ'ம் ஸாரி, வெரி வெரி ஸாரி'' என்று சொல்லி விட்டு, கவிதா தன் இடுப்பில் செருகியிருந்த ஒரு பூப் போட்ட கைக்குட்டையை எடுத்து அவன் மணிக்கட்டை ஒற்றி எடுத்தாள்.

''பரவாயில்லை. ஹோட்டல்காரனுக்கு இதெல்லாம் சகஜம்'' என்றான் கஸ்தூரிரங்கன்.

''நான் உங்களை ஹோட்டல்காரர் மாதிரிப் பேசுகிறீர்கள் என்று சொன்னதில் கோபம் போலிருக்கிறது.''

''சேச்சே. அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் நிஜமாத்தான் சொல்றேன். பசங்க அவசரமா ஓடுவாங்க. மேல சாம்பாரைக் கொட்டிடுவாங்க. திரும்பிப் பார்த்து 'ஸாரி, ரங்கா'ன்னு சொல்லிட்டு, அவன் வேலையைப் பாக்கப் போய்டுவான். சில பேர் குடிச்சிட்டு வந்துடுவாங்க. 'என்னங்கடா ஹோட்டல் நடத்தறீங்க? காரமே இல்லியே. சப்புனு இருக்குதே'ன்னு சொல்லிட்டு, ப்ளேட்டையே விசிறுவாங்க. அதென்னவோ அம்பு மாதிரி எம்மூஞ்சியைப் பாத்துத்தான் வரும். அது சரி, நான் பிஸினஸ் பேசாம வேற என்னென்னவோ பேசி உங்களைப் போரடிச்சிக்கிட்டிருக்கேன். எவ்வளவு பேருக்குப் பார்ட்டின்னு சொல்லலியே?''

''அறுபது பேர்! பூஃபேன்னா என்னமெனு?''

''பூரி. காலிஃப்ளவர் ரோஸ்ட். வெஜிடபிள் ஃப்ரைட் ரைஸ். ஆனியன் தயிர்ப் பச்சடி. வடை. பிஸிபேளா பாத். தயிர் சாதம். ஊறுகாய். அஃப்கோர்ஸ். மொதல்ல சூப். கடைசில ஐஸ்க்ரீம். ஒரு ப்ளேட் முப்பது ரூபா.''

''அடேயப்பா!''

''என்ன, ரேட் அவ்வளவு ஜாஸ்தியாவா சொல்லிட்டேன்?''

''ரேட்டைச் சொல்லலை. இவ்வளவு ஐட்டமும் சாப்பிட முடியுமான்னு தெரியலையே.''

''கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடுங்களேன். லேடீஸே எப்பவும் நிலாச்சோறு மாதிரிதானே சாப்பிடுவாங்க.''

''நிலாச் சோறு! ஐடியா

சுபா

பள்ளிதோறும் புளிய மரங்கள்!

''அனைத்துப் பள்ளிகளுக்கும் கல்வி இலாகா ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது, ஒவ்வொரு பள்ளியிலும் புளியங்கன்று நட்டு வளர்க்க வேண்டும் என்று. விஞ்ஞான முறைப்படி புளியமர நிழல் உடல் நலத்திற்குக் கெடுதல். தேக்கு மரம், பலா மரம், மாமரம் என எதுவும் வைக்க ஏன் உத்தரவு வழங்கக் கூடாது? தென்னை என்ன பாவம் செய்தது...''

- இந்த ரீதியில் ஒரு தலைமை ஆசிரியர் நமக்கு வருத்தக் கடிதம் எழுதியிருக்கிறார். மேற்படி விஷயம் குறித்து சிலரிடம் கருத்து கேட்ட போது:

கல்வி அமைச்சர் : மரத்தடி படிப்பே மூளைக்கு உகந்தது. தாகூரின் சாந்திநிகேதன் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? 1954-ல் நான் ஒருமுறை அங்கு சென்றிருந்தபோது அங்கே கூட நிறைய புளிய மரங்கள் இருப்பதைக் கண்டதாக ஞாபகம். மேலும் புளியமரம் நடச் சொன்னதற்குப் பிரத்யேகக் காரணங்கள் ஒன்றும் இல்லை. ஏன், சந்தன மரம் கூட நடலாம். ஆனால் ஊருக்கு ஒரு வீரப்பன் தோன்றும் அபாயம் அதில் இருக்கிறது. அதனால்தான் புளிய மரம். தவிரவும் நமது தமிழ்நாட்டின் காவல் தெய்வம், நடமாடும் நாலந்தா, அன்னை அருள்மிகு ஜெயலலிதா தேவியும் அவர் படித்த கான்வென்டில் லஞ்ச் டைமில் ஒரு புளியமரத்தடியில்தான் பொழுது போக்கியதாகத் தெரிய வருகிறது.



நல்லா இருக்கே.''

''என்னது?''

''நெஜமாவே நிலாச் சோறாவே பண்ணிடலாமே. பார்ட்டியை ஏழு மணிக்கு வச்சிக்கிட்டா உங்களால சர்வ் பண்ண முடியுமா?''

''ம்ம்ம்!''

''அப்ப, நிலா வந்தப்புறம்.''

வேனில் ஜன்னலோரம் உட்கார்ந்து அன்னை இந்திரா மகளிர் கல்லூரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்த இந்தத் தருணத்திலும், கஸ்தூரிரங்கன், அந்த முதல் சந்திப்பை மறுபடி மறுபடி நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சபரிக்கு எவ்வளவோ பெண்கள் வந்திருக்கிறார்கள். போயிருக்கிறார்கள். சுசீதாவை விடவும் அட்டகாசமாகச் சிரித்து அரட்டை அடிக்கும் பெண்களை எல்லாம் அவன் சந்தித்திருக்கிறான். சுசீதாவை விடக் கவர்ச்சியாக உடை உடுத்துக் கொண்டு வந்தவர்களை எல்லாம் பார்த்திருக்கிறான். நாக்கைக் கூராக்கி நீட்டி, உதட்டில் பட்ட ஐஸ்க்ரீமை மிக நாசூக்காய் ஒற்றி எடுத்தவர்களைப் பார்த்திருக்கிறான். அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்த பெண்கள், காதலர்களுடன் வந்த பெண்கள், அப்பா, அம்மாவுடன் வந்த பெண்கள். அவர்களில் யாரும் கஸ்தூரிரங்கனை இப்படிப் பாதித்ததில்லை. இந்த சுசீதா மட்டும் ஏன் இப்படி?

தெரியவில்லை. ஒருவேளை... ஒருவேளை...

''ரங்கா, காலேஜ் வந்தாச்சி.''

''நெலா வந்திடிச்சா?''

''என்ன சொல்றே ரங்கா?''

கஸ்தூரிரங்கன் தன்னை உலுக்கிக் கொண்டு நிமிர்ந்தான்.



ஆவி உலக நிபுணர் விக்ரவாண்டி ரவிச் சந்திரன் : புளியமரம் என்பது பேய், பிசாசு, பூதம் உள்ளிட்ட பல்வேறு இனங்கள் விரும்பிக் குடியிருக்கும் ஓர் இடம். மாணவர்கள் இம் மரத்தடியில் பயில்வதால் மேற்படி ஜீவராசிகள் பற்றிய பயம் ஏற்பட வாய்ப்பு உண்டாகும். அது, பிற்காலத்தில் அவர்கள் என்போன்ற நிபுணர்களை நாடப் பெரிதும் கைகொடுக்கும்.

ராம் ஜெத்மலானி : பள்ளிகளில் புளிய மரங்கள் வைக்க உத்தரவிட்டது குற்றம் என்றும் இதில் நில்லுமுல்லு நடந்திருக்கிறது என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வழக்கு போடப் பட்டிருக்கிறது. வாழப்பாடியை நான் நான்கு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். (இனி வாரம் தோறும் நாலு கேள்விகள் வரும்.)

1. காமராஜர் ஆட்சிக் காலத்தில் மதிய உணவுத் திட்டத்தின் போது அடுப்பெரிக்க என்ன கட்டை சப்ளை செய்யப்பட்டது? புளியங்கட்டை இல்லை என்று வாழப்பாடியால் உறுதி கூற முடியுமா?

2. சென்ற மாதம் 21-ஆம் தேதி மாலை 4:36 மணி 22 செகண்டில் குப்புசாமி என்கிற சவுக்குக் கன்று வியாபாரி வாழப்பாடியைச் சந்தித்து மாலை போட்டாரா, இல்லையா?

3. சின்ன வயதில் வாழப்பாடி பல்லாங்குழி ஆடியிருக்கிறாரா? அவ்விளையாட்டிற்கு அவர் எந்த மரத்தின் கொட்டைகளை உபயோகித்தார்? அடிக்கடி தோற்றுப் போனதுண்டா?

4. வாழப்பாடி பள்ளியில் படிக்கும் போது அவரை அதட்டுவதற்கு அவருடைய பள்ளி ஆசிரியர் எந்தக் கொம்பை உபயோகித்தார்?

(பெயர் சொல்ல விரும்பாத) ஒரு பள்ளி மாணவன் : புளியம்பழம் அடிச்சி சாப்பிடலாங்கற ஒரு பாயிண்ட் இருக்கு. ஆனா செடி நட்டு, அது மரமாகிப் பழுக்கற காலத்துல நான் பள்ளிக்கூடத்தை விட்டே போயிடுவேன். அதனால மரமாவே நட்டா நல்லா இருக்கும். இன்னொரு விஷயம் - நமக்குப் பிடிக்காத பையன்களை மரமேற வெச்சி தள்ளி விடலாம். நாமே கூட - வாத்தியார் அடிக்க வந்தா மேல ஏறி தப்பிக்கலாம். கொஞ்சம் பெரிய கிளைல போனா, கட்டில் அடிச்சிட்டு வந்து நிழல்ல படுத்துத் தூங்கி, நைட் ஷோ பார்த்த அலுப்பைத் தீர்த்துக்கலாம். இந்த திட்டம் நல்லதுதான்னு நினைக்கறேன்.

கற்பனை பேட்டி : கிச்சா

''சரிதான், ராத்திரி கனவு, பகல் கனவு மாதிரி இது சாயங்காலக் கனவு!''

''டேய், சும்மா இருங்கடா...'' என்றான் கஸ்தூரிரங்கன்.

அன்னை இந்திரா கல்லூரி காம்பவுண்டில் வேன் நுழைந்து, தார்ச்சாலையைச் சாப்பிட்டு, ஷாமியானா போட்ட புல்வெளியைப் பார்த்ததும், சாலையில் இருந்து விலகி, புல்வெளியில் இறங்கி, தத்தித் தத்தி உருண்டு சென்றது.

வேனில் பின்னால் ஜலதரங்கம் கேட்டது. கஸ்தூரிரங்கன் குலுங்கிக் குலுங்கி வேனின் கூரையில் இரண்டு தரம் இடித்துக் கொண்டான். முதலில் இந்தக் கூரைக்கு ஒரு குஷன் போட வேண்டும்.

ஷாமியானா எல்லாம் தாண்டி, பின்னால் இருந்த ஒதுக்குப்புறமான இடத்தில் வேன் நின்றதும், கஸ்தூரிரங்கன் குதித்து இறங்கினான்.

ஷாமியானா, வேலியோடும், சவுக்குக் கம்ப ட்யூப் லைட்டோடும் சற்று தூரத்தில் தெரிந்தது. அதனுள்ளிருந்து பெண்களின் ஆரவாரம், க்ரீச் குரல்கள், சிரிப்பொலிகள் கஸ்தூரிரங்கனின் காதைத் துளைக்க முயன்றன.

''வெல்கம் டு அன்னை இந்திரா லேடீஸ் காலேஜ்'' என்று அருகில் குரல் கேட்டுத் திரும்பினான்.

புன்முறுவலுடன் சுகிதா. வெள்ளை நிறத்தில், வெளிர்நீலப் பூக்கள் கூடிய ஸாரி. வெளிர் நீலநிறத்தில் அன்றைக்கு மாதிரியே முழங்கை வரை நீண்ட பஃப் வைத்த ரவிக்கை. இதுதான் இன்றைய ஃபாஷனா, இல்லை அவளுடைய பிரத்யேக ஃபாஷனா என்று புரியாமல், ''ஹலோ'' என்றான்.

''பங்க்சுவாலிட்டி எப்படி?''

''ஆஹா. பேஷ். பேஷ். ரொம்ப நன்னாருக்கு. சபரின்னா சபரிதான்'' என்று சிரித்தாள் சுகீதா. கூட இருந்த பெண்களும் சிரித்தார்கள். பொதுவாகப் பெண்கள் சிரிக்கக் காரணமே தேவையில்லை. இப்போது காரணம் வேறு இருந்தது. சிரிப்பிற்குச் சொல்லவே தேவையில்லை.

கிருஷ்ணா, பாலு என்று பையன்கள் வேனின் பின்னால் இருந்து இறங்கினார்கள். ஓடினார்கள். அவர்கள் வேலை அவர்களுக்கு. மேஜை செட் பண்ண வேண்டும். தட்டு அடுக்க வேண்டும். ஸ்பூன், நாப்கின் எல்லாம் எடுத்து வைக்க வேண்டும். ஸ்பிரிட் விளக்கு ஏற்றி, சமைத்துக் கொண்டு வந்தவற்றின் சூட்டைக் காப்பாற்ற வேண்டும்.

''நீங்கள் போய் உங்கள் வேலையைப் பாருங்கள். டின்னர் பரிமாறுகிற நேரத்திற்கு ஒரு குரல் கொடுங்கள். நான் வருகிறேன்.''

''ஓ.கே'' என்று சொல்லி விட்டு சுகீதா ஷாமியானா நோக்கி ஓடினாள். புடைவை தடுக்காமல் இருக்க, லேசாகக் காலை அகல வைத்து ஓடியதைப் பார்க்கும் போது, விநோதமாகவும், ரசிக்கக்கூடியதாகவும் இருந்தது அவனுக்கு.

ஷாமியானா படலை நட்டநடு புல்வெளியில் நிறுத்துவதற்காக அங்கங்கே ஒரு முளை நடப்பட்டு அதில் கயிறு இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. சுகீதா ஓடிய வேகத்தில் அந்த முளையில் கால் தடுக்கி விட்டுக் கொள்ளப் போகிறாளே என்று கவலையாகக் கூட இருந்தது அவனுக்கு.

நல்லவேளை. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. ஏற்பாடுகள் எல்லாம் உள்ளே எப்படி நடக்கின்றன என்று எட்டிப் பார்ப்பதற்காக ஷாமியானா படலை நெருங்கினான்.

உள்ளிருந்து ஒரு பெண்மணி வெளியே வந்தாள். மீன் வடிவத்தில் இருக்கும் கண்ணாடி அணிந்திருந்தாள். கண் இமை விளிம்புகளில் திக்காக மை தடவி இருந்தாள். நிறைய ரோஸ் பவுடர். லிப்ஸ்டிக். தலையில் சரிந்த கோபுரமாய் ஒரு கொண்டை. அவளோடு ஒரு ஐந்து வயது சல்வார் கமீஸ் குழந்தையும் வெளியே வந்தது. குழந்தை மார்பில் போட்டிருந்த துண்டு படபடவென காற்றில் அடித்துக் கொண்டு, உருவிக் கொண்டு பறக்கும் போல படபடத்தது.

வெளியே வந்த அந்தப் பெண் வாயில் சேகரித்திருந்த எச்சிலைத் துப்பினாள். எச்சில் முளைக்கயிற்றில் பட்டுத் தெறித்தது. அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். எச்சில் அவன் கால் ஷூவில் தெறித்ததைப் பார்த்து அவள் வருத்தம் தெரிவிப்பாள் என்று நினைத்தான். இல்லை. அவள் பார்வையிலும் அப்படி ஒன்றும் நட்பு தெரியவில்லை. வேண்டாத விருந்தாளியைப் பார்க்கும் பார்வைதான் இருந்தது. அவளுடன் வந்த குழந்தை கீழே நடப்பட்டிருந்த முளையைக் கவனிக்காமல், கயிறைக் கவனிக்காமல் தடுக்கி விழ இருந்தாள். கஸ்தூரிரங்கன் அவளைப் பிடித்து நிறுத்தி 'ஜாக்கிரதைம்மா' என்றான்.

குழந்தை அவனிடமிருந்து தன்னை உருவிக் கொண்டது.

''கொழந்தை டிரஸ்ஸைப் பாழாக்கிட்டியேப்பா. நீ ஒன் வேலையைப் பாரு. எங்களைப் பாத்துக்க எங்களுக்குத் தெரியும்'' என்று சொல்லி விட்டு அந்தப் பெண் உள்ளே போய் விட்டாள். அதிகாரம் இயல்பாகவே பேச்சில் கலந்து விட்டிருந்தது.

என்ன இருந்து என்ன?

> பெண்களுக்கு ஜாக்கிரதை உணர்வு
> கொஞ்சம் குறைவுதான். காலம் காலமாகப்
> பெண்களை, ஆண்கள் பாதுகாப்பதற்காகப்
> படைக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம்
> அவர்களுக்குள் வளர்ந்து விட்டிருப்பதால்
> இந்த அஜாக்கிரதை உணர்வு அவர்களிடம்
> இருக்கிறதோ என்னவோ!

கஸ்தூரிரங்கன் நினைப்பை உதறி விட்டுப் பந்தலுக்குள் நுழைந்தான். பட்டாம்பூச்சிகள் போல பெண்கள். இளம் பெண்கள். ஒருவரையொருவர் கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள்.

சற்றுமுன் வெளியே வந்து எச்சில் துப்பி விட்டுப் போன கொண்டைப் பெண் இன்னொரு கொண்டைப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய குழந்தை எங்கே என்று பார்த்தான். அந்தப் பெண் அவள் வயதொத்த இன்னொரு பெண் குழந்தையுடன் ஓடிக் கொண்டிருந்தாள்.

கஸ்தூரிரங்கன் பரிமாறும் இடத்தில் போய் நின்றான்.

சுகீதா அவனிடம் நெருங்கி வந்து, ''ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டாள்.

''ஓ.யெஸ்'' என்று முதல் தட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.


''ஃப்ரெண்ட்ஸ் ஃபர்ஸ்ட்'' என்றாள். நகர்ந்தாள்.

பூரிகளைச் சூடாக வார்த்து எடுத்துக் கொண்டிருந்தான் கிருஷ்ணன். ஃப்ரைட் ரைஸ் ருசி பார்த்தான். காலிஃப்ளவர் ருசி பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தன. ஒரு ஸ்பிரிட் ஸ்டவ்வின் நெருப்பு, பாத்திரத்தில் இருந்து விலகி இருந்தது என்று அவன் நினைத்து அதனருகே அவன் சென்ற போது, அந்த சல்வார்கமீஸ் பெண் ஸ்பிரிட் ஸ்டவ் இருந்த பக்கம் ஓடி வந்தாள். அவள் துப்பட்டா பறந்தது.

''ஏய்... பாப்பா'' என்று அவன் எச்சரிப்பதற்குள், அவளுடைய துப்பட்டா ஸ்பிரிட் ஸ்டவ்வின் நெருப்பின் மேல் படர்ந்தது. உடனே சரசரவென எரிந்து, அவளுடைய கமீஸின் முனையை நெருப்பு தொட்டது.

'ஐயோ' என்று கூவியது கஸ்தூரிரங்கனின் உள்ளம்.

(தொடரும்)



மகேச்வர வடிவங்கள்

திருக்கோவில்களில் தரிசனத்துக்காகப் போகும் போது பிட்சாடனர், பைரவர், கஜசம்ஹாரர், லிங்கோத்பவர் என்றெல்லாம் பல திவ்யமூர்த்தங்களைக் கண்டானந்திப்போம். ஆனால் இத் திருவுருங்களின் பின்னணியில் உள்ள சுவையான செய்திகள் நமக்குத் தெரியாது. செறிவான விவரங்களோடும் ஏரான புகைப்படங்களோடும் அற்புதமாக ஒரு நூல் வெளியாகியுள்ளது. ''மகேச்சுவர வடிவங்கள்'' - ஆசிரியர்கள் டாக்டர் ஆர். இராமசேஷன், வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன். விலை ரூ. 90 - வெளியீடு : திருப்புகழ் பதிப்பகம், 35, முருகப்ப முதலித் தெரு, சென்னை - 5.

● செய்ஞலூரில் வாழ்ந்த எச்சதத்தன் என்னும் அந்தணருக்கு மகனாக வந்தவர் விசாரசன்மன். தந்தை செய்த சிவாபராதம் பொறுக்காமல், மாடு மேய்க்கும் கோலால் அவரை மகன் விசாரசன்மன் காலில் அடிக்க... அது வாளாக மாறி அவர் கால் துணித்தது. விசாரசன்மனின் பக்தித் திறம் கண்டு பரமன் பெரிதும் உவந்து அவரைத் தம் மகனாக ஏற்றுச் சண்டேசப்பதம் அருளினார். விசாரசன்மன் சண்டேச நாயனாராகி விட்டார். தொண்டர்களுக்கெல்லாம் அவர் தலைவராகி விட்டார்.

ஆதலால் அடியார்களின் பிரதிநிதியாக ஒவ்வொரு சிவாலயத்திலும் இறைவன் திருவுலாவில் சண்டேசரும் எழுந்தருளுகிறார். ஐம்பெருங் கடவுளர் வீதியுலாவில் ஐந்தாவதாகத் திகழ்பவர் சண்டேசர்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சண்டேச அனுக்கிரக மூர்த்தியின் சிற்பம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

● ஸோமாஸ்கந்தருக்கு ஒரு புதிய விளக்கத்தைத் தருகிறார், குமரகுருபரர். திருவாரூர் இருந்தாடும் அழகராம் ஸோமாஸ்கந்தரைப் பார்க்கும் போது குமரகுருபரருக்குத் திரிவேணி சங்கமம் நினைவுக்கு வருகிறது. சிவபெருமான் வெண்ணீறணிந்து நிற்றலால் வெண்மை நிறமுடைய கங்கையைப் போலவும், உமாதேவி தன் நீல நிறத்தால் யமுனையைப் போலவும் சிவந்த நிறமுடைய கந்தன் சரஸ்வதியைப் போலவும் காட்சியளிக்கிறார்.

கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் பகலுக்கும், இரவுக்கும் நடுவே மாலைக் கால இயல்பினை இது காட்டுகிறது என்கிறார்.

● உயிர்களுக்கெல்லாம் அந்தகனாம் யமனுக்கும் ஓர் அந்தகனாகத் திகழ்கிறார் சிவபெருமான். அவர் காலாந்தகர்.

மயிலாடுதுறை வட்டத்தில் திருக்கடவூர் என்ற தொன்மையான தலம் உள்ளது. ஊழிக் காலத்தையும் கடந்து விளங்கும் தலமாதலின் அது கடவூர். கடவூர்ப் பெருமானை விடச் சிறந்த ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வேறு யாரால் நமக்கு அளிக்க முடியும்! பணம் கட்ட வேண்டியதில்லை. பிரீமியம் தொகை பக்திதானே! அங்கே அன்பர்க்கு நல்லனவெல்லாம் தரும் அபிராமியின் கடைக்கண் நோக்கும் நமக்குக் கிடைக்குமே! அறுபது ஆண்டு நிரம்பியவர்கள் தமது ஆயுள் நலம் வேண்டி திருக்கடவூர்ப் பெருமானிடம் - காலசம்ஹாரமூர்த்தி - சென்று வழிபட்டு இன்புறுகிறார்கள்.

● பிறைசூடிய சிவபெருமான் கோலமே சந்திரசேகரர் என்று போற்றப்படும்.. இவரே பிரதோஷமூர்த்தி என்று எல்லாக் கோவில்களிலும் இடம்பெற்றிருப்பார். இவர் மூவகைப்படுவார். கேவல மூர்த்தி, உமாசகித மூர்த்தி, ஆலிங்கன மூர்த்தி. சிவபெருமான் மட்டுமே பிறை சூடி விளங்கும் நிலை கேவல மூர்த்தியாகும். பட்டீசுரம் திருக்கோவிலில் கேவல மூர்த்தி சிற்பம் உள்ளது.

ஒரே பீடத்தில் அல்லது பக்கத்தில் தேவியைக் கொண்டிருப்பின் இவ்வடிவம் உமாசகித சந்திரசேகர் என அழைக்கப்படும். தஞ்சைக் கலைக்கூடத்தில் இவ்வடிவம் உள்ளது.

ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி இடக் கரத்தால் தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டு விளங்குகிறார். சென்னைக்கருகிலுள்ள மண்ணிவாக்கம் மிருத்யுஞ்சேசுவரர் கோயிலிலுள்ள ஆலிங்கன மூர்த்தி சிறப்புடையது. தவிர, திருவாவடுதுறை அணைத்தெழுந்த நாயகர், ஆலிங்கன மூர்த்திக்கு அருமையான எடுத்துக்காட்டு.

- பாலன் பூங்குழலி

ஒரு குடம் தண்ணீர் பரிசளிக்கலாம்!

Super Super Super Super Super Super Super Super Super Super Super

வட்டமேஜை

◆ ஆண்டு மலர் 'சூப்பர் சிறப்பிதழ்' மிக அருமையாய் இருந்தது. பல சூப்பர்களைத் தாங்கி வெளிவந்த இந்த இதழ் எம்மவர் அனைவரை யும் 'சூப்பர்' ஆனந்தத்தில் திளைக்க வைத்தது.

திருவையாறு.

நியாக. செல்வம்.

◆ ''சூப்பர்ஸ்டாரை சூப்பர் மேனாக்கிப் படம் எடுத்தால்!'' அட்டைப்படக் கட்டுரை ரியலி சூப்பர்ப்! வரும் காலங்களில் திரைப்படமாக வரும் நன்னாளை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்!

மதுரை - 10, ஆர். லட்சுமி.

◆ சூப்பர் சிறப்பிதழின் மேலட்டை வண்ணப்படமும், 'சூப்பர்ஸ்டாரை சூப்பர் மேனாக்கிப் படம் எடுத்தால்...' என்று இயக்குனர்களிடம் கேட்கப்பட்ட கேள்வியும் அட்டகாசம். அவரவர்களின் சினிமா பாணிக்குத் தகுந்தாற்போலவே கதை சொல்லியிருந்தாலும் இரு டைரக்டர்களுமே அந்தக் கதைகளின் மூலம் ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள் போங்கள்!

அரூர், மு. மதிவாணன்.

◆ சூப்பர் சிறப்பிதழ் இரண்டாம் பாகம் வரக் கூடாதா என்று ஏங்க வைத்து விட்டீர்கள்.

தக்கோலம், அ. முஸ்தபா.

◆ இவ்வார கல்கியில் சூப்பர்மேன் என்ற கற்பனை கதாபாத்திரம் உருவான உண்மை வரலாற்றைப் படித்த போது சூப்பர்மேன் கதை படிப்பது போலவே த்ரில்லாக இருந்தது.

லால்குடி,

எம். இராஜேந்திரன்.

◆ சூப்பர் மார்க்கெட் பற்றி வெளிவூர் செய்திகள் இடம் பெறும் எனப் பார்த்தால்... ஊஹூம்! ஏன் சார் வெளியூர்களில் 'சூப்பர்' விஷயங்கள் ஒன்றுமில்லை எனத் தீர்மானித்து விட்டீரா?

மதுரை - 20, சி. மகேஷ்.

◆ 'நான் கேவலம்... என் குடும்பம் கேவலம்... என் குடும்ப அட்டையை மட்டும் கண்ணில் ஒத்திக் கொள்கிறார்களே...' - அறிமுக எழுத்தாளர் வே. குருநாதன் சமூகக் கொடுமைக்குக் கொடுத்த சாட்டையடி இந்தக் கதை.

கோவை - 16, கோவை ரம்யா.

◆ கதையின் கரு 'குடும்ப அட்டை' என்றவுடன் அசிரத்தையுடனே படிக்க ஆரம்பித்தேன். கதையை நகர்த்தியிருந்த லாவகம் பிரமிக்க வைத்தது. ஏழ்மையைப் படம்பிடித்துக் காட்டிய விதம் நெஞ்சை நெகிழ வைத்தது.

சென்னை - 42, ஆர். எஸ். நாராயணன்.

◆ தங்களின் தலையங்கத்தில் கூறியுள்ளபடி மந்திரி தலைவர்கள் செயல்பட்டால்தான் காவிரி நதி நீர்ப் பிரச்னை தீரும். இல்லையென்றால் இதை வைத்து அரசியல் லாபம்தான் பெறுவார்கள் என்பது உறுதி.

மதுரை - 16, ஆர். கார்த்திகேயன்.

◆ 'ஜெ'வின் உண்ணாவிரதத்திற்கு பின் முன்னணி வார பத்திரிகைகள் ஆறு வாங்கினேன் - கல்கி சேர்த்து. உண்ணாவிரதம் தோல்வியே என்று எழுதியது நீங்கள் மட்டுமே!

திருவண்ணாமலை - 2, ராஜகுமாரன். ஜி.

◆ 'விளம்பரம் தண்ணீர் பட்டபாடு' சிரிக்க வைத்து வயிற்றைப் புண்ணாக்கி விட்டது. மயாரின் நல்ல கற்பனை வளத்திற்கு ஒரு குடம் தண்ணீர் பரிசாக வழங்கலாம்!

தோழகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ காவியத் தலைவி சௌகார் ஜானகி தமது எதிர்நீச்சல் பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் அப்படியே கூறியிருந்ததைப் பாராட்டுகிறேன். தான் செய்த தவறுகளைத் துணிச்சலுடன் கூறி, பலருக்கு வழிகாட்டியுள்ளார்.

கோவை - 9, இ. கௌசல்யா.

◆ அறுபத்திரெண்டு வயதானாலும், அடுத்த வரைச் சார்ந்து நிற்காதது சௌகாரின் மனத் துணிவை எடுத்துக்காட்டுகிறது. நேர்மையான பிரஜையின் நியாயமான கோரிக்கையை எடுத்துக் கூறிய விதம் அற்புதம். வெளிப்படையாகப் பேசி தம்மைச் செம்மைப்படுத்திய அனைவருக்கும் நன்றி கூறி முடித்து, தான் ஒரு நல்ல நடிகை மட்டுமல்ல, நல்ல தாய், நல்ல பெண்மணி என வெளிப்படுத்தி, கல்கி வாசகர் நெஞ்சில் நீங்காத இடம் பெற்று விட்டார்.

பொள்ளாச்சி, சி. ஆர். நாகராஜன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka